


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com




CHENNAI | Volume- 3 | Issue:196 | 31-01-2026 | சனிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

31.01.2026 தை 17
சனிக்கிழமை

சூரிய உதயம் 6.36

திதி:
இன்று காலை 8.02 வரை
திரயோதசி பின்பு சதுர்த்தசி.

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 3.04 வரை
திருவாதிரை பின்பு புனர்பூசம்.

யோகம் :
இன்று பிற்பகல் 1.37 வரை
விஷ்கம்பம் பின்பு ப்ரீதி.

கரணம் :
இன்று காலை 8.02 வரை
தைதுலம் பின்பு மாலை 6.21 வரை
கரசை பின்பு வணிசை

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம்

இன்று அதிகாலை 3.04 வரை
அனுஷம் பின்பு கேட்டை

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.30.
இராகு காலம்
காலை 9.00 – 10.30.
எமகண்டம்
பிற்பகல் 1.30 – 3.00.

குளிகை
காலை 6.00 – 7.30.

இன்று கரி நாள்.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# “எங்களைப் பற்றிய குற்றச்சாட்டுகள் எல்லாமே பழைய ஸ்கிரிப்ட்”

## முதல்வர் ஸ்டாலின்






**சென்னை, ஜன.31:**
சென்னை கிண்டியில் நடைபெற்ற கருத்தரங்கில் முதல்வர் ஸ்டாலின் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் பேசும்போது, தமிழ்நாடும் - தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும் தேர்தல் களத்திற்கு மும்முரமாக தயாராகிக் கொண்டிருக்கக்கூடிய நிலையில், “இந்தியாவிலேயே யாரும் அடைய முடியாத 11.19 சதவிகிதம் பொருளாதார வளர்ச்சியை, திராவிட மாடல் ஆட்சியில் சாத்தியப்படுத்தியிருக்கிறோம். இந்த வளர்ச்சியை நாங்கள் சாதாரணமாக அடைந்துவிடவில்லை. சமூகத்தில் எந்தவொரு பிரிவும் விடுபட்டுவிடக் கூடாது என்று, மிகவும் கவனமாக பார்த்துப் பார்த்து திட்டங்களை உருவாக்கியிருக்கிறோம்.

ஒருபக்கம், ஒன்றிய பாஜக அரசு தொடர்ந்து ஏற்படுத்தி வரும் அரசியல் நெருக்கடிகள் எல்லாவற்றையும் எதிர்கொண்டு, மறுபக்கம் தொலைநோக்குப் பார்வையுடன் எதிர்காலத்திற்துக்கான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். தேவைகளுக்கு ஏற்ப, எங்களின் கொள்கைகளும் “Evolve” ஆகி வருகிறது.

இந்தியத்துணைக் கண்டத்தின் வரலாறு தமிழ்நாட்டிலிருந்து தான் எழுதப்பட வேண்டும்! அதேபோல், வளர்ச்சியும், தெற்கில் தமிழ்நாட்டில் தொடங்கி தான் எழுதப்பட வேண்டும். இந்த க்ரோத் ஹிஸ்டரியை தாங்கிக்கொள்ள முடியாதவர்கள், வாட்ஸ்அப் யூனிவர்சிட்டியில் பொய்களை எல்லாம் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். எங்களைப் பற்றி அவர்கள் சொல்லும் குற்றச்சாட்டுகள் எல்லாமே பழைய ஸ்கிரிப்ட்தான்.

அதில் முதல் குற்றச்சாட்டு, அரசியல் வாரிசு. இதற்கு நான் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம். ஆனால், யார் வந்தாலும், அவர்கள் மக்களுக்கு முன்னால் நின்று, அவர்கள் நம்பிக்கையைப் பெற்று ஓட்டு பெற்றால் மட்டும்தான், வெற்றி பெற முடியும். எனவே இது, எங்களை களத்தில் எதிர்க்க முடியாதவர்கள் வைக்கும் இற்றுப்போன குற்றச்சாட்டு. அடுத்து சொல்வது என்ன? ஊழல். இதுவரைக்கும் எங்கள் மீது வைத்த குற்றச்சாட்டுகளை யாராவது ஆதாரத்துடன் நிரூபித்திருக்கிறார்களா? கற்பனையான குற்றச்சாட்டுகளை சொல்லி, எங்கள் மீது பழி சுமத்திக் கொண்டே இருக்கிறார்கள்.

நான் பாஜகவிடம் கேட்பது என்னவென்றால், உங்கள் கூட இருக்கும் எல்லோருமே ஊழல்வாதிகள்தான். அதிலும், உச்ச நீதிமன்றம் வரைக்கும் சென்று ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டவர்கள்தான் அதிமுக. நீங்கள் கூட்டணியில் இல்லாத சமயத்தில், அவர்கள் மீது எத்தனை குற்றச்சாட்டுகளை சொன்னீர்கள். இப்போது உங்கள் வாஷிங் மெஷினில் அவர்கள் எல்லாம் வெளுத்துவிட்டீர்களா? இதுதான் என்னுடைய கேள்வி.

அடுத்து, இந்து விரோத கட்சி என்று பேசுவார்கள். ஆனால், உண்மை என்ன? இந்தியாவிலேயே, பா.ஜ.க. ஆளுகின்ற மாநிலங்களில் கூட இல்லாத அளவிற்கு, நாங்கள் ஆட்சி அமைத்து இந்த ஆயிரத்து 730 நாட்களில், நான்காயிரம் கோயில்களுக்கு குடமுழுக்கு செய்திருக்கிறோம். உண்மையான பக்தர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

இப்படி, பாஜக வைத்த குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் நான் ஆதாரத்தோடு பதில் சொல்லிவிட்டேன். ஆனால், அவர்களோ, நாங்கள் கேட்கின்ற எந்த கேள்விகளுக்கும் பதில் சொல்லவில்லை!

இப்போது உங்கள் முன்பாகவும் கேட்கிறேன். இந்தி திணிப்பை ஏற்காததால் கொடுக்காமல் இருக்கும் கல்வி நிதி எப்போது வரும்?

பாஜக ஆளும் மாநிலங்களுக்கு வாரி வழங்கிவிட்டு, இயற்கைப் பேரிடர்களுக்காக நாங்கள் கேட்ட நிவாரணத் தொகை கூட முறையாக தரவில்லையே ஏன்?

கோவை மற்றும் மதுரை மெட்ரோ திட்டங்களுக்கு எப்போது அனுமதி வரும்? கீழடி அறிக்கை எப்போது வெளியே வரும்? - இப்படி ஏராளமான கேள்விகள் இருக்கிறது. இது எதற்குமே அவர்களிடம் இருந்து பதில் வராது. ஏனென்றால், இது எல்லாமே, பாஜக தமிழ்நாட்டிற்கு செய்திருக்கக்கூடிய துரோக லிஸ்ட்.

அவர்கள் ஒவ்வொரு முறை இங்கு வரும்போது, அந்த லிஸ்ட் பெரிதாகிக் கொண்டே செல்கிறது. நாங்கள் எதற்காக இவ்வளவையும் பேசுகிறோம் என்றால், நம்முடைய இந்திய நாடு ஒற்றுமையாக, வலிமையாக இருக்க வேண்டும் என்றுதான் இவ்வளவையும் சொல்கிறோம்.

நாங்கள் நாட்டின் யூனிட்டிக்காகப் பேசுகிறோம். பாஜகவோ யூனிஃபார்மிட்டி பேசி, பாசிச அரசியல் செய்கிறது. மாநிலங்கள்தான், நாட்டின் அடித்தளம். இந்தியா என்பது, “யூனியன் ஆஃப் ஸ்டேட்ஸ்”. இதை பாஜக உணர்ந்து செயல்பட வேண்டும் என்றுதான் ஒன்றிய அரசு என்று நினைவுப்படுத்திக் கொண்டே இருக்கிறோம்.

அரசியலமைப்புச் சட்டத்தையும், இந்த நாட்டில் வாழும் மக்களையும் காப்பாற்றுவதுதான் உண்மையான நாட்டுப்பற்று என்று நாங்கள் அழுத்தமாக சொல்கிறோம். என்டிஏ என்கிற பெயரில், தமிழ்நாட்டில் பாஜக உருவாக்கியிருக்கும் கூட்டணிக்கு என்று எந்தக் கொள்கையும் கிடையாது அது, முழுக்க முழுக்க கட்டாயத்தினாலும், ஒரு சிலரின் சுயநலத்திற்காகவும் கூடியுள்ள துரோகக் கூட்டணி அது.

நீட் தேர்வு விலக்குப் பற்றி அக்கறையுடன் கேட்டிருக்கக்கூடிய எதிர்க்கட்சியினர், அவர்களின் கூட்டணிக்கு தலைமை தாங்கும் பாஜகவிடம் அதை வலியுறுத்த ஏன் தயங்குகிறார்கள்? அஞ்சி நடுங்குகிறார்கள்?

தமிழ்நாட்டு மீது பாஜக வலுக்கட்டாயமாக திணித்திருக்கும் திட்டங்கள் பற்றி குரல் எழுப்ப திராணியில்லாமல் இருப்பவர்கள், நெஞ்சை நிமிர்த்தி எப்படி மக்களுக்காக கேள்வி எழுப்புவார்கள்? தமிழ்நாட்டின் தன்மானத்தைக் காப்பதற்கு எப்படி தலைநிமிர்ந்து பேசுவார்கள்? அதனால்தான், நடைபெற இருக்கின்ற தேர்தல் தமிழ்நாடு வெர்சஸ் என்டிஏ என்று அழுத்தம் திருத்தமாக நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்!

வழக்குகளால் மிரட்டப்பட்டு, முழுக்க முழுக்க சுயநலத்தோடு அமைக்கப்பட்டிருக்கக்கூடிய என்டிஏ கூட்டணியை, அடுத்தடுத்த துரோகங்களுக்கான அச்சாரமாக தான் தமிழ்நாட்டு மக்கள் பார்க்கிறார்கள். என்டிஏ-வுக்கு தோல்வி எனும் தக்க பதிலடியை வரக்கூடிய தேர்தலில் தமிழ்நாடு நிச்சயம் வழங்கும். திராவிட மாடல் 2.0 அரசு அமைய நிச்சயம் பாடுபடுவேன்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# “மதவெறியை மாய்ப்போம்; மகாத்மாவைப் போற்றுவோம்”

**சென்னை, ஜன.31:**
“மகாத்மாவை மறைத்து, நாட்டை நாசப்படுத்தத் துடிக்கும் கோட்சேவின் வாரிசுகளுக்குத் தக்க பாடம் புகட்டி, காந்தி பிறந்த மண்ணைக் காத்திடுவோம்” என முதல்வர் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

மகாத்மா காந்தியின் 78-வது நினைவு தினத்தை முன்னிட்டு, நாடு முழுவதும் இன்று ‘தியாகிகள் தினம்’ அனுசரிக்கப்படுகிறது.

இந்த நிலையில், முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில், “#MartyrsDay: மதவெறியை மாய்ப்போம். மகாத்மாவைப் போற்றுவோம். அமைதி வழியின் வலிமையை உலகுக்குக் காட்டி, ஒற்றுமையுணர்வு தழைக்கப் பாடுபட்டதால், கோட்சேவின் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்ட நம் தேசத்தந்தை மகாத்மா காந்தி, ஒவ்வொரு இந்தியரின் உள்ளத்திலும் நிலைத்து வாழ்வார்.

மகாத்மாவை மறைத்து, நாட்டை நாசப்படுத்தத் துடிக்கும் கோட்சேவின் வாரிசுகளுக்குத் தக்க பாடம் புகட்டி, காந்தி பிறந்த மண்ணைக் காத்திடுவோம். வெல்வோம் ஒன்றாக” என்று குறிப்பிட்டுள்ளார்.

# சுதேசி கொள்கைக்கு முக்கியத்துவம் அளித்தவர் மகாத்மா காந்தி

## பிரதமர் மோடி அஞ்சலி!



**புதுடில்லி, ஜன.31:**
மகாத்மா காந்தியின் 78-வது நினைவு தினத்தையொட்டி அவருக்குப் பிரதமர் நரேந்திர மோடி அஞ்சலி செலுத்தினார்.

தேசத்தின் முதன்மைத் தலைவரான மகாத்மா காந்தியின் வாழ்க்கை மற்றும் பாரம்பரியம், அமைதி, நீதி மற்றும் சுதந்திரத்திற்காக அவர் செய்த இறுதித் தியாகத்தையும் போற்றும் வகையில், இந்தியா அவரது நினைவு நாளை தியாகிகள் தினமாகக் கடைப்பிடிக்கிறது.

தில்லி ராஜ்காட்டில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட காந்தியின் நினைவிடத்தில் காலை முதலே தலைவர்கள் குவிந்து வருகின்றனர். அதன்படி, இன்று காலை ராஜ்காட் சென்ற பிரதமர் மோடி மகாத்மா காந்தியின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அவருடன் குடியரசுத் தலைவர் திரெளபதி முர்மு ஆகியோரும் மரியாதை செலுத்தினர்.

இதுதொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் தளப் பதிவில், தேசத்தந்தை மகாத்மா காந்தியின் நினைவு நாளில் அவருக்கு எனது வணக்கங்கள்.

அவர் எப்போதும் சுதேசி கொள்கைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தார். இதுவே வளர்ந்த மற்றும் தற்சார்பு கொண்ட இந்தியாவிற்கான நமது உறுதிப்பாட்டின் அடிப்படைத் தூணாகவும் உள்ளது.

அவரது ஆளுமையும் செயல்களும் நாட்டு மக்களைக் கடமையின் பாதையில் நடக்க எப்போதும் ஊக்குவிக்கும், இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

# இடைக்கால பட்ஜெட்: பிப். 5ல் தமிழக அமைச்சரவைக் கூட்டம்!

**சென்னை, ஜன.31:**
2026 ஏப்ரல் அல்லது மே மாதம் தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் அதுகுறித்த அறிவிப்பு விரைவில் வரவுள்ளது.

தேர்தலையொட்டி தமிழ்நாடு அரசின் இடைக்கால பட்ஜெட் பிப்ரவரி மாதம் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதையடுத்து பிப். 5 ஆம் தேதி முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவை கூடுகிறது. இடைக்கால பட்ஜெட்டில் இடம்பெறவுள்ள முக்கிய அம்சங்கள் குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.




# சபரிமலை தங்கக் கவச முறைகேடு வழக்கு: நடிகர் ஜெயராம் வாக்குமூலம்!

**சென்னை, ஜன.31:**
சபரிமலை துவாரபாலகர் சிலைக்கு முலாம் பூச வழங்கப்பட்ட தங்கத்தில் முறைகேடு நடந்ததாகக் கூறப்படும் வழக்கில், நடிகர் ஜெயராமிடம் சிறப்பு புலனாய்வுக் குழு (SIT) சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

சபரிமலையில் தங்கம் அபகரிக்கப்பட்ட வழக்கில் நடிகர் ஜெயராமை கைது செய்ய விசாரணை அதிகாரிகள் முடிவு துவாரபாலகர் சிலைக்காக வழங்கப்பட்ட தங்கம் சட்டவிரோதமாக மாற்றப்பட்டு மோசடி செய்யப்பட்டதாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. விசாரணையின் ஒரு பகுதியாக, சிலைக்காக பயன்படுத்தப்பட வேண்டிய தங்கம் சென்னை கொண்டு வரப்பட்டபோது, அந்த தங்கம் நடிகர் ஜெயராமின் வீட்டில் வைத்து பூஜை செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் உன்னிகிருஷ்ணன் என்பவருடன் நடிகர் ஜெயராமுக்கு என்ன தொடர்பு உள்ளது என்பதையும், தங்கம் அவரது இல்லத்திற்கு கொண்டு வரப்பட்டதற்கான பின்னணி என்ன என்பதையும் அறிய எஸ்ஐடி தீவிர விசாரணை நடத்தி வருகிறது.

சபரிமலை தங்க கொள்ளை வழக்கு - சாட்சியாக மாறும் நடிகர் ஜெயராம்?


இதற்கு முன்னர் ஜெயராம் இந்த விவகாரத்தில் நேரடி தொடர்பு இல்லை என விளக்கம் அளித்திருந்தாலும், விசாரணையின் தொடர்ச்சியாக அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு தொடர்பாக மேலும் சில முக்கிய நபர்களிடம் விசாரணை நடத்த எஸ்ஐடி திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது.

சபரிமலை தங்கத் திருட்டு வழக்கு தொடர்பான விசாரணை தற்போது முக்கிய கட்டத்தை எட்டியுள்ள நிலையில், எதிர்வரும் நாட்களில் மேலும் பரபரப்பான தகவல்கள் வெளியாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.




## திருக்குறள் குறள்-516

**செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த உணர்ந்து செயல்**



செய்கின்றவனுடைய தன்மையை ஆராய்ந்து, செயலின் தன்மையையும் ஆராய்ந்து, தக்கக் காலத்தோடு பொறுந்துமாறு உணர்ந்து செய்விக்க வேண்டும்.

## சிந்திக்க ஒரு நொடி



மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியாகிவிட்டது.

கரையேற கற்றுக் கொள்ள வேண்டுமே தவிர மண் குதிரை கரையுதே என்று கவலைப்பட்டு பயனில்லை...

**உஷா முத்துராமன்**

## என்றும் மகாத்மா: நினைவு தின பேச்சரங்கம்



**வந்தவாசி, ஜன 31:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீகிருஷ்ணா கல்வி மையத்தில் மகாத்மா காந்தியின் 79 ஆவது நினைவு தினத்தையொட்டி 'என்றும் மகாத்மா' பேச்சரங்கம் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் தலைமை தாங்கினார். ஓய்வு பெற்ற ஓவிய ஆசிரியர் பெ.பார்த்திபன், ஆசிரியர் மஹாவீர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வழக்கறிஞர் சா.இரா. மணி பங்கேற்று என்றும் மகாத்மா என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். பிறகு காந்தியின் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இறுதியில் மாணவர்கள் உள்ளிட்ட அனைவரும் மத நல்லிணக்க உறுதிமொழியை ஏற்றனர்.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## கம்பன் விருது வழங்கும் விழா



சென்னை பாரதிய வித்யா பவன் ஏற்பாடு செய்த கம்பன் விருது வழங்கும் விழாவில் வெற்றியாளர்களை கவர்னர் ரவி, பாராட்டி விருது வழங்கினார்.

## மகாத்மா காந்தி படத்துக்கு கவர்னர் ரவி, மலரஞ்சலி



மகாத்மா காந்தி நினைவு நாளில் நேற்று அவரது படத்துக்கு கவர்னர் ரவி, மலரஞ்சலி செலுத்தினார்.

## போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு



ஆலந்தூர் தொகுதி பரணிபுத்தூர் ஊராட்சி தி.மு.க சார்பில் நடந்த திராவிட பொங்கல் விழா கோலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் தா.மோ. அன்பரசன் பரிசுகள் வழங்கினார்.

## மனிதநேய வார நிறைவு விழாவில் இளமனூர் பள்ளிக்குப் பரிசு



மதுரை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் மனிதநேய வார நிறைவு விழா சேதுபதி மேனிலைப் பள்ளியில் நடைபெற்றது. இதில் மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் போட்டிகளில் வெற்றி பெற்ற இளமனூர் பள்ளி மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். உடன் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் இராமகிருஷ்ணன் உள்ளார்.

## பெண்ணாடத்தில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் அமைச்சர்கள் சிவசங்கர், கணேசன் பங்கேற்பு

**கடலூர், ஜன.31:**

பெண்ணாடத்தில் போக்குவரத்து துறை லயன்ஸ் சங்கம் இணைந்து சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இதற்கு லயன்ஸ் சங்கத் தலைவர் வசந்தகுமார் தலைமை தாங்கினார். சாசனத் தலைவர் ஞானபிரகாசம், செயலாளர்கள் அழகுவேலன், வினோத் குமார், பொருளாளர் ஜெயபிரகாஷ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் சிறப்பு விருந்தினராக போக்குவரத்து துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். அவர்கள் பேசும்போது, போக்குவரத்து விதிகளை அனைவரும் தவறாமல் கடைபிடிக்க வேண்டும்.



இருசக்கர வாகனத்தில் செல்பவர்கள் கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டும். ஓட்டுனர் உரிமம் வைத்திருப்பவர்கள் தான் வாகனம் ஓட்ட வேண்டும். அதிவேகமாக வாகனங்களை ஓட்ட கூடாது என்றனர். தொடர்ந்து இரண்டு சக்கர வாகன பேரணியை கொடி அசைத்து துவக்கி வைத்து வாகன ஓட்டுநர்களுக்கு ஹெல்மெட் அமைச்சர்கள் வழங்கினார்கள். இந்த முகாமில் விருத்தாசலம் வட்டார போக்குவரத்து அலுவலர்கள், லயன்ஸ் சங்க உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திருக்குறள் திருப்பணிகள் திட்ட 26– ஆவது பயிற்சி வகுப்பு



பாளையங்கோட்டை குழந்தை இயேசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 30 .01. 2026 அன்று நடந்த திருக்குறள் திருப்பணிகள் திட்ட 26- ஆவது பயிற்சி வகுப்பில் திருக்குறள் திருப்பணிகள் திட்டக் கண்காணிப்புக் குழு உறுப்பினரும் ,பயிற்சிக் குழுத் தலைவருமான தமிழ்ச் செம்மல் கவிஞர் பேரா தலைமையுரை ஆற்றிய போது எடுத்த படம்.

## 10 இணைகளுக்கு முதல்வர் ஸ்டாலின் திருமணத்தை நடத்தி வைத்தார்



பெரம்பூரில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகையை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்து, 10 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்.

## தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி



காந்தியடிகள் நினைவுநாளான நேற்று முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது. அரசு ஊழியர்கள் உறுதிமொழி ஏற்றனர்.

## சட்டப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணினி



சென்னை பெருங்குடியில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணினிகளை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்.

## பொறுப்பேற்பு



திருநெல்வேலி மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவராக ராமேஸ்வரனும், கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவராக வி.பி. துரையும் பொறுப்பேற்று கொண்டனர்.

## ஸ்ரீ புஷ்பம் எக்ஸ்போ - 2026.



தஞ்சை மாவட்டம், பூண்டி, அ.வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீபுஷ்பம் கல்லூரியில் நடைபெறும் ஸ்ரீ புஷ்பம் எக்ஸ்போ - 2026. 29.01.2026 அன்று பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்கள் கலந்துகொண்ட ஸ்ரீபுஷ்பம் எக்ஸ்போ 2026. **செய்தி: T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்**

## அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமான பணி



சைதை தொகுதி கோட்டூர்புரம் பகுதியில் ரூ. 307.24 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் 1800 அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமான பணிகளை அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன் ஆய்வு செய்தனர்.

## அரசுப் பள்ளித் தூதுவர்கள் திட்டம்




சென்னை அசோக் நகர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று அரசுப் பள்ளித் தூதுவர்கள் திட்டத்தை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார். அரசுப் பள்ளித் தூதுவர்களோடு இணைந்து உறுதிமொழி எடுத்துக் கொண்டு, விழுதுகள் செயலியையும் தொடங்கி வைத்தனர்.

## செய்யாறில் த.வெ.க., சார்பில் மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டி கிழக்கு மாவட்ட செயலாளர் உதயகுமார் தொடங்கி வைத்தார்

**செய்யாறு, ஜன. 31:**

செய்யாறில் தமிழக வெற்றி கழகம் சார்பில் மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பிடித்த அணிகளுக்கு கிழக்கு மாவட்ட செயலாளர் உதயகுமார் பரிசு கோப்பைகளை வழங்கி கௌரவித்தார்.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு சட்டசபை தொகுதிக்கு உட்பட்டது ராமகிருஷ்ணாபுரம், பெருங்கட்டூர், ராந்தம். இந்த கிராமங்களில் த.வெ.க., சார்பில் மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட்டது. இந்த போட்டிகளில் வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, சென்னை, காஞ்சிபுரம் உள்ளிட்ட 32 அணிகள் பங்கேற்றன. போட்டிகள் 'நாக் அவுட்' முறையில் நடத்தப்பட்டது.

தொடக்க நாள் போட்டிகளை திருவண்ணாமலை த.வெ.க.,வின் கிழக்கு மாவட்ட செயலாளர் உதயகுமார் தொடங்கி வைத்தார். புருஷோத்தமன், யுவன் சங்கர், அரி கோபி, சரண்ராஜ், வெங்கடேசன் ஆகியோர் முன்



நின்று போட்டிகளை நடத்தி வைத்தனர்.

காஞ்சிபுரம் விஜய் கிரிக்கெட் கிளப் அணியினர் முதலிடத்தையும், பில்லாந்தி கிரிக்கெட் கிளப் அணி இரண்டாம் இடத்தையும், நெடும்பிறை கிரிக்கெட் கிளப் அணி மூன்றாம் இடத்தையும் பிடித்தது.

வெற்றி பெற்ற அணிகளுக்கு பதக்கம், கோப்பை, பண முடிப்பு ஆகியவற்றை கிழக்கு மாவட்ட செயலாளர் உதயகுமார் வழங்கி கௌரவித்தார்.

## வலங்கைமானில் 25 குடும்பங்கள் அதிமுகவில் இணைந்தனர்

**வலங்கைமான், ஜன.31:**

வலங்கைமான் ஒன்றியம், ஆலங்குடி ஊராட்சி காமராஜர் காலனி செந்தில் வீரமணி தலைமையில் திமுகவிலிருந்து விலகி சுமார் 25 குடும்பங்கள் அதிமுகவில் இணைந்தனர். புதிதாக கட்சியில் இணைந்தவர்களை அதிமுக மாவட்டச் செயலாளரான முன்னாள் அமைச்சர் இரா.காமராஜ் எம்எல்ஏ கைத்தறி ஆடை அணிவித்து வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் கட்சியின் வலங்கைமான் ஒன்றிய நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



## கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி



நாமக்கல் புதுச்சத்திரத்தில் ஞானமணி பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகளை அமைச்சர் மதிவேந்தன், ராஜேஷ் குமார் எம்.பி. வழங்கினர்.

## கொடைரோடு அருகே மினி வேன் கவிழ்ந்து விபத்து 5 பேர் படுகாயம்

சின்னாளப்பட்டி, ஜன.31:

திருப்பூர் மாவட்டம் பல்லடத்திலிருந்து விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்புக்கு பெண் பார்க்கச் சென்ற பாலகுரு என்பவரின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் என 21 பேர் மினி வேனில் பயணம் செய்தனர். இந்த நிலையில், திண்டுக்கல் மாவட்டம் திண்டுக்கல் மதுரை தேசிய நெடுஞ்சாலையில், கொடைரோடு அருகே காமலாபுரம் பிரிவு பகுதியில் சென்றபோது, இருசக்கர வாகனம் ஒன்று திடீரென குறுக்கே வந்தது. விபத்த தவிர்க்க முயன்ற ஓட்டுநர் தேவக்குமார் (35) திடீரென பிரேக் போட்ட தால், அவரது கட்டுப்பாட்டை இழந்த மினி வேன் சாலை யின் நடுவே கவிழ்ந்தது. இந்த விபத்தில் 5 பேர் படுகாயமடைந்தனர். மேலும் சிலர் லேசான காயமடைந்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற அம்மையநாயக்கனூர் காவல்துறையினர், காயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்து குறித்து காவல்துறை யினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## துளிர் திறனறிதல் தேர்வு 47 பள்ளி மாணவர்கள் பங்கேற்பு

மதுரை, ஜன.31:

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் பள்ளி மாண வர்களின் அறிவியல் திறனை மேம்படுத்தும் நோக்கில் ஆண்டுதோறும் நடத்தி வரும் துளிர் திறனறிதல் தேர்வு இந்த ஆண்டு ஜனவரி 27 செவ்வாயன்று நடை பெற்றது. இதன் ஒரு பகுதியாக, மதுரையில் உள்ள விருது நகர் நாடார் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாண வர்கள் மொத்தம் 47 பேர் தேர்வில் பங்கேற்று எழுதி னர். இந்தத் தேர்வை அறிவி யல் ஆசிரியர் என்.விஜய குமார் ஏற்பாடு செய்திருந் தார். அவருக்கு உதவியாக அறிவியல் ஆசிரியர்கள் பி.நாகராஜன், எஸ்.பால ஐயப்பன், எம். கணேண் குமார், ஆர்.ஜீவசூர்யா மற் றும் எஸ்.பத்மேஷ் ஆகி யோர் செயல்பட்டனர். மேலும் தமிழ்நாடு அறி வியல் இயக்கத்தின் மதுரை மாவட்ட பொருளாளர் ஆர். வெண்ணிலா நிகழ்வில் கலந்து கொண்டு மாணவர் களை ஊக்குவித்தார்.

## சாத்தூரில் வளர்ச்சித் திட்டப் பணிகள் மாவட்ட ஆட்சியர் ஆய்வு

சாத்தூர், ஜன.31:

சாத்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் சுக புத்ரா நேரில் ஆய்வு செய்தார். சாத்தூரில் தனியார் பாலிடெக்னிக் கல்லூரியில் "உலகம் உங்கள் கையில்" திட்டத்தின் கீழ் மாணவ, மாணவிகளுக்கு இலவச மடிக்கணினிகள் வழங்கப்படு வதையும், வெங்கடாசலபுரத்தில் அமல் படுத்தப்பட்ட அரசு திட்டங்கள் மற்றும் பய னாளிகள் விபரங்களை ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து உங்க கனவ சொல்லுங்க திட்டத்தின் படிவங்கள் வழங்கப்படுதல் மற்றும் நியாய விலைக் கடையில் பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும், சாத்தூர், தில்லைநகரில் புதிய வாக்காளர்களை சேர்ப்பதற்கான படிவம்-6 வழங்கும் பணிகளையும் ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் சாத்தூர் ஆணையாளர் ஜெகதீஸ்வரி, வட்டாட்சியர் உட்பட பலர் பங்கேற்றனர்.

## இணையத் தயார்: ஓ.பி.எஸ்; சேர்க்க முடியாது: இபிஎஸ்!

தேனி, ஜன. 31:

அதிமுகவில் இணைவதற்கு நாங்கள் தயார்... எங்களை இணைப்பதற்கு டிடிவி தினகரனும், எடப்பாடி பழனிசாமியும் தயாரா? என்று முன்னாள் முதல்வரும், அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் கழக ஒருங்கிணைப்பாளருமான ஓ. பன்னீர்செல்வம், பெரியகுளம் பண்ணை வீட்டில் அளித்த பேட்டியில் கூறியிருந்தார். "டிடிவி தினகரனும், எடப்பாடி பழனிசாமியும் அதிமுக வெற்றிபெற வேண்டும் என கூறுகிறார்கள். அதைத் தான் நானும் கூறுகிறேன். டிடிவி தினகரன் நினைத்தால் நாங்கள் இணைய வழிவகை செய்ய முடியும். தேர்தலில் போட்டியிடுவதற்காக இந்த இயக்கம் துவங்கவில்லை கட்சியை மீட்பதற்காகவே துவக்கப்பட்டது" என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். இதற்கு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி உடனடியாக பதிலளித்துள்ளார். அதில், "ஓ. பன்னீர்செல்வத்தை அதிமுகவில் இருந்து நீக்குவது என்பது பொதுக்குழு கூடி முடிவெடுத்தது. ஓபிஎஸ் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு விட்டார். பொதுக்குழுவில் எடுத்த முடிவில் அதிமுக உறுதியாக உள்ளது. எனவே, அதிமுகவில் ஓ. பன்னீர்செல்வத்தை மீண்டும் சேர்க்க வாய்ப்பே இல்லை !" என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

## இடைநிலை சீரமைப்புப் பணிகள் நிறைவு: 52 மெட்ரோ ரெயில்களின் சேவையை துவக்கி வைத்தார் இயக்குநர் மனோஜ் கோயல்




சென்னை, ஜன.31:

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் 2015 ஆம் ஆண்டு முதல், நான்கு பெட்டிகள் கொண்ட 52 மெட்ரோ இரயில்களைக் கொண்டு மெட்ரோ இரயில் சேவைகளை இயக்கி வருகிறது. பயணிகளின் பாதுகாப்பு, வசதி மற்றும் நேரந்தவறாமை ஆகியவை சென்னை மெட்ரோவின் முக்கிய முன்னுரிமைகளாகும். இதை உறுதி செய்வதற்காக, அனைத்து மெட்ரோ இரயில்களும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் வழக்கமான மற்றும் திட்டமிடப்பட்ட பராமரிப்புப் பணிகளுக்கு உட்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு மெட்ரோ இரயிலும் மாதாந்திர, காலாண்டு, அரையாண்டு மற்றும் ஆண்டுச் சோதனைகள் மூலம் முழுவதுமாக ஆய்வு செய்யப்பட்டு பராமரிக்கப்படுவதுடன், தகுதிச் சான்றிதழும் வழங்கப்படுகிறது. இது தவிர, ஒவ்வொரு மெட்ரோ இரயிலும் ஒரு பெரிய அளவிலான இடைநிலை சீரமைப்புப் பணிக்கு உட்படுத்தப்படுகிறது. இந்த முக்கிய சீரமைப்புப் பணியின் போது, இரயில் முழுமையாகப் பிரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. சக்கரங்கள் மற்றும் சஸ்பென்ஷன் அமைப்புகள் உட்பட இரயிலின் அடிப்பகுதியில் உள்ள முக்கிய பாகங்கள் அகற்றப்பட்டு, பரிசோதிக்கப்பட்டு, தேவைப்படும் இடங்களில் பழுதுபார்க்கப்பட்டு, மீண்டும் வண்ணம் பூசப்படுகின்றன. தேய்ந்துபோன பாகங்கள் மாற்றப்படுகின்றன.

மென்மையான பயணத்தை உறுதி செய்வதற்காக சக்கரங்கள் மறுவடிவமைப்பு செய்யப்படுகின்றன. மேலும் மறைந்திருக்கும் குறைபாடுகளைக் கண்டறிய மேம்பட்ட முறைகளைப் பயன்படுத்தி அச்சுகள் சோதிக்கப்படுகின்றன.

பிரேக்குகள், மின் சாதனங்கள் மற்றும் குளிரூட்டும் இயந்திரங்கள் போன்ற முக்கியமான அமைப்புகள் முழுமையாகப் பராமரிக்கப்படுகின்றன. சுகாதாரம் மற்றும் பயணிகளின் வசதியை உறுதி செய்வதற்காக, குளிரூட்டும் குழாய்கள் உட்பட இரயிலின் உட்புறம் மற்றும் வெளிப்புறங்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களைப் பயன்படுத்தி ஆழமாக சுத்தம் செய்யப்படுகின்றன.

பாகங்கள் மீண்டும் பொருத்தப்பட்ட பிறகு, இரயில் தொடர்ச்சியான விரிவான பாதுகாப்பு மற்றும் செயல்திறன் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகிறது. இதில் நிலையான சோதனைகள் மற்றும் சோதனைத் தடங்கள் மற்றும் பிரதான வழித்தடங்களில் வெவ்வேறு வேகங்களில் சோதனைஓட்டங்கள் ஆகியவை அடங்கும். அனைத்து பாதுகாப்பு மற்றும் செயல்திறன் தரங்களையும் பூர்த்தி செய்த பின்னரே, தகுதிவாய்ந்த அதிகாரியால் அந்த இரயில் பயணிகள் சேவைக்கு உகந்தது எனச் சான்றளிக்கப்படுகிறது.

52வது மற்றும் கடைசி மெட்ரோ இரயிலின் இடைநிலை சீரமைப்புப் பணி நிறைவடைந்ததன் மூலம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தனது முழு மெட்ரோ இரயில் தொகுதிக்கான திட்டமிடப்பட்ட சீரமைப்புப் பணியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

## கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் தொடரும்: அரசு மருத்துவர்கள் அறிவிப்பு

சென்னை, ஜன. 31:

தமிழக அரசு மருத்துவர்களுக்குக் கருணாநிதி ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்ட அரசாணை 354-ன்படி, ஊதிய உயர்வு மற்றும் பதவி உயர்வை உடனடியாக வழங்க வேண்டும். ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கு அறிவிக்கப்பட்ட ரூ.3,000 ஊக்கத்தொகையை நிலுவையின்றி வழங்க வேண்டும் உள்ளிட்ட பல் வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, அரசு மருத் துவர் சங்கங்களின் கூட்டமைப்பினர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனை வளாகத்தில், அரசு டாக்டர்கள் சங்கங்களின் கூட்டமைப் பினர், 48 மணி நேர உண்ணாவிரதப் போ ராட்டத்தை நேற்று முன்தினம் தொடங்கினர். சுகாதாரத் துறை அமைச்சர் மற்றும் செயலர் ஆகியோர் மருத்துவர்களுடன் சமரசப் பேச்சு வார்த்தை நடத்தினர். தெளிவான வாக்குறுதி கள் அளிக்கப்படாததால், மருத்துவர்கள் தங் கள் போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.

இதுகுறித்து கூட்டமைப்பின் ஒருங்கிணைப் பாளர்கள் பாலகிருஷ்ணன் மற்றும் ராமலிங் கம் ஆகியோர் கூறியதாவது: இன்று காலை உண்ணாவிரதம் நிறைவடைந்தாலும், கோரிக் கைகள் நிறைவேறும் வரை போராட்டம் ஓயாது. அடுத்த ஒரு வார காலத்துக்கு பயோமெட்ரிக் வருகைப் பதிவேட்டை பயன்படுத்தப் போவ தில்லை. அரசு சார்ந்த முக்கியக் கூட்டங்கள் மற்றும் அலுவல் ரீதியான வாட்ஸ்-அப் குழுக் களில் இருந்து மருத்துவர்கள் வெளியேறித் தங் கள் எதிர்ப்பைப் பதிவு செய்வார்கள். இந்த ஒரு வார போராட்டத்துக்குப் பிறகும் அரசு செவிசாய்க்கவில்லை எனில், மாநிலம் தழுவிய அளவில் போராட்டத்தைத் தீவிரப்படுத்தத் திட்ட மிட்டுள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## பா.ஜ.க. சுற்றுப்பயண பொறுப்பாளராக அண்ணாமலை நியமனம்

சென்னை, ஜன.31:

பா.ஜ.க. சுற்றுப்பயண பொறுப்பாளராக அண்ணாமலை நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் சட்டசபைக்கு வரும் ஏப்ரல் மாதம் தேர்தல் நடைபெற வாய்ப்புள்ளதாகவும், இதுதொடர்பான அறிவிப்புகளை தேர்தல் ஆணையம் விரைவில் வெளியிட உள்ள நிலையில் தமிழ்நாடு அரசியல் களம் சூடு பிடித்துள்ளது. அரசியல் கட்சிகள் கட்சி நிர்வாகிகளுடன் தொடர் ஆலோசனை, செயல்வீரர்கள் கூட்டம், நலத்திட்டங்கள் ஆலோசனை, கூட்டணி, தொகுதி பங்கீடு, பிரச்சாரம், பொதுக்கூட்டம் என பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில், அண்ணா தி.மு.க. பா.ஜ.க. இணைந்த தேசிய கூட்டணி சார்பில் கடந்த 23ம் தேதி செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்று பிரச்சாரம் செய்தார்.

இந்த நிலையில் தமிழக பாஜக சார்பில் சட்டமன்ற தொகுதிகளுக்கு தொடர் சுற்றுப்பயணம் செல்ல உள்ள பொறுப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு பொறுப்பாளர்களுக்கும் குறைந்தது இரண்டு முதல் அதிகபட்சமாக ஏழு தொகுதிகள் வரை ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழ்நாடு பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

சிங்காநல்லூர், மதுரை தெற்கு, விருகம்பாக்கம், காரைக்குடி, ஸ்ரீவைகுண்டம், பத்மநாபபுரம் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு பாஜக சுற்றுப்பயண பொறுப்பாளராக தமிழக முன்னாள் பாஜகத் தலைவர் அண்ணாமலை நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

திருப்பரங்குன்றம், ராதாபுரம், வால்பாறை, திருப்பூர் வடக்கு, உதகமண்டலம் மத்திய இணையமைச்சர் எல்.முருகன்

திருப்பூர் தெற்கு, குன்னூர், கோயம் புத்தூர் தெற்கு வானசி சீனிவாசன்

கும்மிடிபூண்டி, மயிலாப்பூர், நாங்குநேரி, பொள்ளாச்சி, கிளியூர் தமிழிசை சௌந்திரராஜன்

முதுகுளத்தூர், விளவன்கோடு, திருப்பதூர், சிவகங்கை, உடுமலைப் பேட்டை எச்.ராஜா

எழும்பூர், ராசிபுரம், பரமத்தி வேலூர் வி.பி. துரைசாமி

தென்காசி, பரமக்குடி, மேட்டுப் பாளையம், பழனி பொன். ராதாகிருஷ்ணன்

# "ஜனநாயகன்" வழக்கில் கேவியட் மனு தாக்கல் செய்த தணிக்கை வாரியம்

சென்னை, ஜன.31:

நடிகரும், த.வெ.க., தலைவருமான விஜய், 'ஜனநாயகன்' என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார். இந்த திரைப்படத்தை கே.வி. என். புரொடக்ஷன் என்ற நிறுவனம் தயாரித்துள்ளது. இந்த திரைப்படத்துக்கு தணிக்கை சான்று கேட்டு விண்ணப்பிக்கப்பட்டது. படத்தை பார்த்த தணிக்கை வாரிய குழுவினர், மதம் மற்றும் பாதுகாப்பு படை தொடர்பான காட்சிகள் இடம் பெற்றுள்ளதால், இந்த படத்தை மறுஆய்வு குழு பரிசீலனைக்கு பரிந்துரை செய்தனர்.

இதை எதிர்த்து கே.வி. என். நிறுவனம் தொடர்ந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு நீதிபதி பி.டி.ஆஷா, "இவ்வாறு மறுஆய்வு குழு பரிசீலனைக்கு பரிந்துரைத்தது செல்லாது. 'ஜனநாயகன்' படத்துக்கு தணிக்கை சான்றிதழை உடனே வழங்கவேண்டும்" என்று தணிக்கை வாரியத்துக்கு உத்தரவிட்டார். இந்த உத்தரவை எதிர்த்து தணிக்கை வாரியம் உடனடியாக மேல்முறையீடு செய்து, தனி நீதிபதியின் உத்தரவுக்கு தடை பெற்றது. பின்னர், இந்த மேல்முறையீட்டு வழக்கை தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவத்சவா, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் கொண்ட முதல் பெஞ்ச் விசாரித்து, தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் 'ஜனநாயகன்' படத்திற்கு உடனடியாக தணிக்கை சான்றிதழ் வழங்க உத்தரவிட்ட தனி நீதிபதி பி.டி ஆஷாவின் உத்தரவை ரத்து செய்துள்ளனர்.உரிய விளக்கம் அளிக்க சென்சார் போர்டுக்கு அவகாசம் வழங்கவில்லை. படத்தில் சில காட்சிகள் சமூகத்தில் பிரச்சினை ஏற்படுத்தும் வகையில் உள்ளதாக கூறப்பட்டுள்ளது என நீதிபதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மேலும், வழக்கை விரைவாக மீண்டும் விசாரித்து புதிய உத்தரவு பிறப்பிக்க தனி நீதிபதி பி.டி ஆஷாவுக்கு சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. தணிக்கை வாரிய தலைவரின் முடிவுக்கு எதிராக படக்குழு மனு தக்கல் செய்யவும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர். பி.டி.ஆஷாவிடம் மீண்டும் விசாரணைக்கு வர உள்ளதால் பட வெளியீடு மேலும் தள்ளிப் போகும். ஜனநாயகன் படம் இப்போதைக்கு வெளியாக வாய்ப்பில்லை என்பதால் ரசிகர்கள் சோகமடைந்துள்ளனர்.

சென்னை ஐகோர்ட்டின் இந்த தீர்ப்பை எதிர்த்து, சுப்ரீம்கோர்ட்டை நாடுவது குறித்து ஜனநாயகன் தயாரிப்பாளர் ஆலோசனை நடத்தி வருவதாக தகவல் வெளியானது

இந்நிலையில், தணிக்கை சான்றிதழ் கோரி 'ஜனநாயகன்' படக்குழு அணுகினால் தங்கள் பதிலை கேட்க வேண்டும் என சுப்ரீம் கோர்ட்டில் தணிக்கை வாரியம் கேவியட் மனு தாக்கல் செய்துள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## 10 நிமிடத்தில் சாப்பாடு ரெடி... 30 வயதிலே நீரிழிவு நோயும் ரெடி....



காலையில் எழுந்ததும் நம் வீட்டு சமையலறையில் இருந்து கேட்கும் விசில் சத்தம் தான், அந்த நாளின் அலாரம் கிளாக். "நேரமில்லை, சீக்கிரம் கிளம்பணும்" என்று சொல்லிக்கொண்டே ஓடும் இந்த நவீன வாழ்க்கையில், பிரஷர் குக்கர் என்பது இல்லத்தரசிகளின் உற்ற தோழனாகிவிட்டது.

அடுப்பில் வைத்து மூன்றே விசில் வந்தால் போதும், பஞ்சு போன்ற சாதம் தயார். ஆனால், இந்த வேகம் நம் உடலுக்கு வினையாக மாறுகிறதோ என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது. நேரத்தை மிச்சப்படுத்துவதாக நினைத்து, ஆரோக்கியத்தை நாம் அடகு வைத்துக்கொண்டிருக்கிறோமா? வாருங்கள் அலசுவோம்.

நம் பாட்டி காலத்தில் சோறு சமைப்பது என்பதே ஒரு கலை. பெரிய பானையில் அரிசி வேகவைத்து, அது பக்குவம் வந்ததும், அதைச் சாய்த்து அதிலிருக்கும் கஞ்சியை வடித்து விடுவார்கள். இந்த 'கஞ்சி வடித்தல்' வெறும் சமையல் முறை மட்டுமல்ல, அது ஒரு சுத்திகரிப்பு முறை. அரிசியில் இருக்கும் அளவுக்கு அதிகமான ஸ்டார்ச் எனப்படும் மாவுச்சத்து அந்த கஞ்சியோடு வெளியேறிவிடும்.

ஆனால், குக்கரில் நாம் வைக்கும் தண்ணீர், அந்த குக்கருக்குள்ளேயே ஆவியாகி, மீண்டும் அந்த அரிசிக்குள்ளேயே திணிக்கப்படுகிறது. வெளியேற வேண்டிய கெட்ட மாவுச்சத்து, சாதத்திலேயே தங்கிவிடுகிறது. இதைச் சாப்பிடுவது, மறைமுகமாக சர்க்கரையை அள்ளிச் சாப்பிடுவதற்குச் சமம்.

### தொப்பையும் நோய்களும்!

இன்றைய தேதியில் சாலைகளில் நடப்பவர்களில் பாதிப் பேர் அதிக உடல் எடையுடன் இருப்பதைக் காண்கிறோம். "நான் அளவா தான் சார் சாப்பிடுறேன், ஆனா வெயிட் குறையவே மாட்டேங்குது" என்று புலம்புபவர்கள் அதிகம். இதற்கு முக்கிய காரணம், நாம் சாப்பிடும் இந்த குக்கர் சாதம் தான். இதில் தங்கியிருக்கும் அதீத கார்போஹைட்ரேட், நம் உடலில் கொழுப்பாக மாறுகிறது. இதுவே நாளடைவில் உடல் பருமனை அதிகரித்து, நம்மை சர்க்கரை நோய், ரத்தக் கொதிப்பு மற்றும் இதய நோயாளிகளாக மாற்றுகிறது. பி.எம்.ஐ (BMI) எனப்படும் உடல் எடையை சீராகப் பராமரிக்க முடியாமல் போவதற்கு, இந்த சமையல் முறையே முதல் எதிரி.

### குழந்தைகளின் எதிர்காலம்!

பெரியவர்களுக்காவது வேலை, அலைச்சல் என்று கொஞ்சமாவது உடலுழைப்பு இருக்கிறது. ஆனால், இன்றைய குழந்தைகள், பள்ளி விட்டால் டியூஷன், விட்டால் மொபைல் கேம்ஸ் என்று ஒரே இடத்தில் முடங்கிக் கிடக்கிறார்கள். அவர்களுக்கு இந்த மாவுச்சத்து நிறைந்த குக்கர் சோற்றைப் போடுவது, எரியும் தீயில் எண்ணெய் ஊற்றுவது போன்றது. சிறு வயதிலேயே குழந்தைகளுக்கு உடல் பருமன் ஏற்படுவதற்கு இது மிக முக்கிய காரணமாக அமைகிறது.

### மாற்று வழி?

உடனே குக்கரைத் தூக்கி குப்பையில் போடச் சொல்லவில்லை. பிரியாணி போன்ற உணவுகளைச் சமைக்கும்போதோ அல்லது மிகவும் அவசரமான நாட்களிலோ குக்கரைப் பயன்படுத்துவதில் தவறில்லை. ஆனால், தினசரி மதிய உணவு என்பது நம் ஆரோக்கியத்தின் ஆதாரம். அதற்குச் சற்றே மெனக்கெட்டு, பாத்திரத்தில் வடித்துச் சமைக்கும் பழைய முறைக்கு மாறுவதே புத்திசாலித்தனம். வடித்த சாதத்தில் நார்ச்சத்து மட்டுமே மிஞ்சும் என்பதால், அது செரிமானத்திற்கு மிகவும் நல்லது.

## தலைமறைவான குற்றவாளி கைது

**விழுப்புரம், ஜன.31:**

கடந்த 8.8.2017 ஆம் ஆண்டு பெரியதச்சூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சாலை மடம் ரோட்டில் உள்ள மாணிக்கம் என்பவரது நிலத்தில் பெரியதச்சூர் கிராமத்தை சேர்ந்த பாலகிருஷ்ணன் மகன் சடகோபன் (வயது.48) என்பவரை கொலை செய்து கிணற்றில் வீசி சென்ற விக்கிரவாண்டி வட்டம்,ரெட்டிகுப்பம் கிராம பகுதியை சேர்ந்த மதி என்கின்ற மதியழகன் (வயது.40) கைது செய்யப்பட்டு, வழக்கு நீதிமன்ற விசாரணையில் இருந்த நிலையில் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் கடந்த ஆறு ஆண்டுகளாக தலைமறைவாக இருந்து வந்தார். இந்நிலையில் பெரியதச்சூர் காவல் நிலைய ஆய்வாளர் நாகராஜ் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் லியோ சார்லஸ் மற்றும் காவலர்கள் தலைமையிலான போலீசார் மதி என்ற மதியழகன்(வயது.40) என்பவரை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## துப்பாக்கியை காட்டி மிரட்டிய கடலூர் அதிமுக பிரமுகர் கைது

**கடலூர், ஜன.31:**

கடலூர் மாவட்டம், நடுவீரப்பட்டு குழந்தை குப்பம் கிராமத்தைச் சேர்ந்தவர் கிருஷ்ணமூர்த்தி இவர் அதிமுகவில் மேற்கு ஒன்றிய விவசாய அணி துணை செயலாளராக உள்ளார். அதே பகுதியைச் சேர்ந்த அதிமுக மேற்கு ஒன்றிய செயலாளர் வினோத் என்பவருக்கும் செம்மண் கிராவல் குவாரியில்தொழில்ரீதியாகஇருவருக்கும் பிரச்சனை இருந்து வந்த நிலையில் புதன்கிழமை கிருஷ்ணமூர்த்திக்கும் வினோத் இருவருக்கும் இடையே குவாரியில் வாக்குவாதம் ஏற்பட்டது. கிருஷ்ணமூர்த்தியின் மகன் கோபால் அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு இணைச் செயலாளராக உள்ளார். தான் அனுமதி பெற்று வைத்திருந்த கை துப்பாக்கியை எடுத்து வினோத் என்பவரை மிரட்டி தாக்கியது சம்பந்தமாக நடுவீரப்பட்டு காவல் நிலையத்தில் அளித்த புகாரில், அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு இணைச் செயலாளர் கோபாலை கைது செய்தனர். அவரிடமிருந்து துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை பறிமுதல் செய்தனர்.

## சென்னையில் பிகார் குடும்பம் கொலை: பெண் சடலம் குப்பைக் கிடங்கில் கண்டெடுப்பு!

சென்னை தரமணி பகுதியில் தங்கியிருந்த பிகாரைச் சேர்ந்த தொழிலாளி கௌரவ்குமார் (24), அவரது மனைவி முனிதா குமாரி (21), அவர்களது 2 வயது மகன் பிர்மணி குமார் ஆகியோர் கடந்த 25-ஆம் தேதி கொலை செய்யப்பட்டனர். இதில், கௌரவ்குமார் சடலம் இந்திரா நகர் முதலாவது அவென்யுவில் ஒரு சாக்கு மூட்டையிலும், பிர்மணிகுமார் சடலம் இந்திரா நகர் ரயில் நிலையத்தின் பின்புறம் செல்லும் பக்கிங்ஹாம் கால்வாயில் ஓரத்திலும் மீட்கப்பட்டன. ஆனால் முனிதா குமாரி சடலத்தை குப்பைத் தொட்டியில் வீசியதாக, கைதானவர்கள் விசாரணையின்போது தெரிவித்தனர். இந்தநிலையில்,3-ஆவது நாளாக வெள்ளிக்கிழமையும் (ஜன.30) இந்தப் பணியில் காவல் துறையினர் ஈடுபட்ட நிலையில், முனிதா குமாரியின் சடலம் பெருங்குடி குப்பைக் கிடங்கில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

# திருப்பதி தெப்போற்சவம்.. தெப்பத்தில் எழுந்தருளி அருள்பாலித்த கல்யாண வெங்கடேஸ்வரர்



**திருப்பதி, ஜன.31:**

திருப்பதி கோவிந்தராஜ சுவாமி கோவிலில் தெப்போற்சவம் கடந்த 26-ம் தேதி தொடங்கி விமரிசையாக நடைபெற்று வருகிறது. அலங்கரிக்கப்பட்ட தெப்பத்தில் உற்சவ மூர்த்திகள் எழுந்தருளி திருக்குளத்தில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்கள். அதன்பின்னர் மாட வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்கள்.

தெப்ப உற்சவத்தின் முதல் நாளில் கோதண்டராம சுவாமியும், இரண்டாம் நாளில் ருக்மணி சத்யபாமா சமேத பார்த்தசாரதியும் தெப்பத்தில் வலம் வந்து அருள்பாலித்தனர்.

மூன்றாம் நாளான (28-ம் தேதி) ஸ்ரீதேவி, பூதேவியுடன் கல்யாண வெங்கடேஸ்வர சுவாமி தெப்பத்தில் வலம் வந்து பக்தர்களுக்கு தெய்வீக தரிசனம் அளித்து அருள்பாலித்தார். மாலை 6:30 மணி முதல் இரவு 8 மணி வரை இந்நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் மாட வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

தெப்ப உற்சவ நிகழ்வில் திருமலையின் பெரிய ஜீயர் மற்றும் சின்ன ஜீயர் சுவாமிகள், தேவஸ்தான அதிகாரிகள் மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

# திருப்புங்கூர் சிவலோகநாதர் கோவில் கும்பாபிஷேகம்



**மயிலாடுதுறை, ஜன.31:**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுகா திருப்புங்கூர் கிராமத்தில் சௌந்தரநாயகி சமேத சிவலோகநாத சுவாமி கோவில் அமைந்துள்ளது. தேவார பாடல் பெற்ற இக்கோவிலில் நந்தனாருக்காக நந்தி வழி விலகி சிவபெருமான் காட்சி தந்த தலமாக திகழ்கிறது. இத்தலம் காரிய தடை நிவர்த்தி ஸ்தலமாகவும் விளங்குகிறது.

பிரசித்தி பெற்ற இக்கோவிலில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கோவில் நிர்வாகம், தருமபுரம் ஆதீனம், சென்னை மகாலட்சுமி சுப்பிரமணியன் அறக்கட்டளை, கோவை அரண் பணி அறக்கட்டளை ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட திருப்பணிகள் நிறைவடைந்த நிலையில், இன்று காலை கும்பாபிஷேகம் விமரிசையாக நடந்தது.

**புதுக்கோட்டை: நெய்வேலி வீரத்தாயி அம்மன் கோவில் கும்பாபிஷேகம்**

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கடந்த 23ஆம் தேதி பூர்வாங்க பூஜையும், 27ஆம் தேதி முதல் யாகசாலை பூஜைகளும் நடைபெற்றன. இன்று காலை 6ம் கால யாகசாலை பூஜை நிறைவடைந்து பூர்ணாஹுதி மற்றும் மகா தீபாராதனை நடந்தது. அதன்பின்னர், காலை 8 மணிக்கு யாகசாலையில் இருந்து கடம்புறப்பாடு நடைபெற்றது. புனித நீர் குடங்களுடன் கோவிலை வலம் வந்து ராஜகோபுரம், சுவாமி, அம்பாள் மற்றும் பஞ்சமூர்த்திகள் சன்னதி விமானங்களை அடைந்தனர்.

அதன்பின்னர் தருமபுரம் ஆதீனம் 27 வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் முன்னிலையில் மங்கள வாத்தியங்கள் இசைக்க, சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் ஓதி, புனித நீரை ஊற்றி ஏக காலத்தில் கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தனர். தொடர்ந்து மூலவர்களுக்கு அபிஷேக ஆராதனை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

# செங்கோட்டையில் தைப்பூச விழா... நடராஜர் வெள்ளை சாத்தி பவனி

**செங்கோட்டை, ஜன.31:**

செங்கோட்டையில் தர்மஸம்வர்த்தினி அம்பாள் சமேத குலசேகரநாதர் திருக்கோவிலில் தைப்பூச திருவிழா 10 நாட்கள் விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. ஒவ்வொருநாளும் காலை சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்காரம் தீபாராதனை நடைபெறுகிறது. காலை, மாலை, இரவு வேளையில் சுவாமி, அம்பாள் வாகனத்தில் எழுந்தருளி வாணவேடிக்கையுடன் திருவீதி உலா நடைபெறுகிறது. இதில் சுற்றுவட்டார பகுதி மக்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்கின்றனர். 7ம் திருநாளன்று காலையில் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. மாலையில் பல்லக்கில் சுவாமி அம்பாள் வீதி உலா காட்சி நடைபெற்றது. அந்தி வேளையில் கோரதத்தில் முக்கிய ரத வீதிகளில் சுவாமி அம்பாள் பவனி வந்து அருள்பாலித்தனர். கோரதத்தை பக்தர்கள் பக்தியுடன் வடம்பிடித்து இழுத்தனர். ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

இரவு 10.30 மணியளவில் சுவாமி, அம்பாள் பல்லக்கில் பவனி வருதல், ஸ்ரீநடராஜர் வெள்ளை சாத்தி சப்பரத்தில் பவனிவருதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

# ஒரே நாளில் 2-வது முறையாக தங்கம் விலை குறைவு...

**சென்னை, ஜன.31:**

ஆண்டின் முதல் மாதமான இம்மாத தொடக்கத்தில் ஒரு கிராம் ரூ.12,440-க்கும், ஒரு சவரன் ரூ.99,520-க்கும் தங்கம் விற்பனை செய்யப்பட்டது. அதன்பின்னர், தங்கம் விலை ருத்ரதாண்டவம் ஆடத் தொடங்கியது.

அதிலும் கடந்த 12-ந்தேதிக்கு பிறகு தங்கம் விலையின் வேகம் யாரும் எதிர்பாராத வகையில் இருந்தது. சில நாட்கள் தங்கம் விலை உயர்வு நடுத்தர வர்க்கத்தினருக்கு அதிர்ச்சியை கொடுத்தது. நேற்று தங்கம் விலை கிராமுக்கு ரூ.1,190-ம், சவரனுக்கு ரூ.9,520-ம் அதிகரித்து, ஒரு கிராம் ரூ.16,800-க்கும், ஒரு சவரன் ரூ.1,34,400-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

நேற்று காலையில் தங்கம் விலை அதிரடியாக குறைந்தது. அதன்படி கிராமுக்கு ரூ.600-ம், சவரனுக்கு ரூ.4,800-ம் குறைந்து, ஒரு கிராம் ரூ.16,200-க்கும், ஒரு சவரன் ரூ.1,29,600-க்கும் விற்பனையாகி சற்று ஆறுதல் அளித்தது. இந்த நிலையில் இன்று ஒரே நாளில் 2-வது முறையாக தங்கம் விலை குறைந்துள்ளது.

அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று பிற்பகலில் சவரனுக்கு ரூ.2,800 குறைந்து, ஒரு சவரன் ரூ.1,26,800-க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.350 குறைந்து, ஒரு கிராம் ரூ.15,850-க்கு விற்பனை செய்யப்படுகிறது. நேற்று ஒரே நாளில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.7,600 குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தங்கம் விலையைப் போல வெள்ளி விலையும், பிற்பகலில் அதிரடியாக குறைந்துள்ளது. அதன்படி வெள்ளி விலை பிற்பகலில் கிராமுக்கு ரூ.10-ம், கிலோவுக்கு ரூ.10 ஆயிரமும் குறைந்து, ஒரு கிராம் ரூ.405-க்கும், ஒரு கிலோ ரூ.4,05,000-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.




## மாற்றுத் திறனாளிகளுக்கு பதவி உயர்வில் 4% ஒதுக்கீடு

**சென்னை, ஜன.31:**

அரசுப்பணிபதவிஉயர்வில்மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சத விகிதம் ஒதுக்கீடு வழங்க தகுந்த பதவிகளை அடை யாளம் கண்டு அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது. இதன்படி, சார்பு செய லாளர், பிரிவு அலு வலர் உள்ளிட்ட 13 பணி யிடங்களில் மாற்றுத்திற னாளிகளுக்கு பதவி உயர்வு அளிக்கலாம் என்றும், மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற வகையில் பதவி கள் அடையாளம் காணப் பட்டு அரசாணை வெளி யிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## எஸ்.ஐ. தேர்வு முடிவுகள் நிறுத்தி வைப்பு

**சென்னை, ஜன. 31:**

கடந்த ஜனவரி 27 அன்று வெளியிடப்பட்ட காவல்துறை உதவி ஆய்வாளர் தேர்வு முடிவுகள் திரும்பப் பெறப் படுவதாக அறிவிக்கப் பட்டுள்ளது. மென்பொருள் பிரச்சனை காரணமாக இந்த முடிவுகள் நிறுத்தி வைக்கப் பட்டு உள்ளதாகவும்; உதவி ஆய்வாளர் தேர்வு முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும் என்று சீருடைப் பணியாளர் தேர்வா ணையம் தெரிவித்துள்ளது.

## அரிய வகை நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை

**சென்னை, ஜன. 31:-**

'பிரைமரி ஆக்சலூரியா' எனும் அரிய வகை மரபணு கோளாறால் பாதிக்கப்பட்ட 2 வயது சிறுவனுக்கு, சென்னை அடையாறில் உள்ள எம்ஜிஎம் மலர் மருத்துவமனை வெற்றிகரமாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்துள்ளது. இந்த நோயால் சிறுவனின் கல்லீரல் நச்சுப்பொருளை வெளியேற்றத் தவறியதால், அவனது சிறுநீரகம் செயலிழந்து டயாலிசிஸ் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டான். டாக்டர் அனில் வைத்யா தலைமையிலான மருத்துவக் குழு, சிறுவனின் பாட்டி தானமாக வழங்கிய கல்லீரலைக் கொண்டு இந்தச் சிக்கலான சிகிச்சையை மேற்கொண்டது. கல்லீரல் சீரானதால், தற்போது சிறுவன் டயாலிசிஸ் தேவைப்படாத நிலைக்கு முன்னேறியுள்ளான். எதிர்காலத்தில் அவனுக்குச் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## இளைஞர் வெட்டிக் கொலை

விழுப்புரம் மாவட்டம் சின்னகோட்டக்குப்பத்தைச் சேர்ந்த ரவுடி அப்பு (எ) ஜவகர் (24), புதனன்று இரவு மர்மக் கும்பலால் வெட்டிக்கொலை செய்யப்பட்டார். இவர் மீது 3 கொலை வழக்குகள் உட்பட 10-க்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளன.

# உங்கள் போனில் நான்கு விஷயங்கள் இருந்தால் போலீஸ் உங்கள் வீடு தேடி வரும்: எச்சரிக்கை...!

இன்றைய நவீன உலகில், ஸ்மார்ட்போன் என்பது வங்கி, அலுவலகம், கேமரா மற்றும் அந்தரங்க டைரி என அனைத்துமாகி விட்டது. ஆனால், நாம் கையில் வைத்திருக்கும் இதே ஸ்மார்ட்போன் நமக்கே ஒரு எதிரியாக மாறக்கூடும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் செய்யும் ஒரு சிறு கவனக்குறைவு அல்லது வேடிக்கைக்காக சேமித்து வைக்கும் ஒரு புகைப்படம் உங்களை கம்பி எண்ண வைக்கலாம். உங்கள் போனில் எதெல்லாம் இருக்கக்கூடாது? எதெல்லாம் உங்களைச் சிக்கலில் தள்ளும்? (Mobile safety tips) என இந்தக் கட்டுரையில் பார்க்கலாம்.

1. ஆபத்தான மற்றும் சட்டவிரோத வீடியோக்கள்:

இந்திய சட்டப்படி, குழந்தைகள் சம்பந்தப்பட்ட ஆபாச வீடியோக்களை பார்ப்பது, சேமிப்பது அல்லது பிறருக்குப் பரப்புவது ஜாமீனில் வெளிவர முடியாத, மிகக் கடுமையான குற்றமாகும். "யாரோ எனக்கு வாட்ஸ்அப்பில் அனுப்பினார்கள், நான் பார்க்கவில்லை" என்று நீங்கள் கூறினாலும் சட்டம் அதை ஏற்காது. உங்கள் போனில் அத்தகைய கோப்புகள் கண்டறியப்பட்டால், வாரண்ட் இல்லாமலேயே காவல்துறை உங்களைக் கைது செய்ய முடியும்.

2. போலி ஆவணங்கள் மற்றும் ஹேக்கிங் கருவிகள்:

அங்கீகரிக்கப்படாத ஐடி கார்டுகள், போலி ஆதார் அட்டைகள் அல்லது மற்றவர்களின் கணக்குகளை ஹேக் செய்ய உதவும் சாப்ட்வேர்களை உங்கள் போனில் வைத்திருப்பது சட்டப்படி குற்றம். ஆன்லைனில் பணம் சம்பாதிக்கலாம் என நினைத்து தரவிறக்கம் செய்யப்படும் சில 'Hacking Tools' உங்களை ஒரு குற்றவாளியாகச் சித்தரிக்கப் போதுமானவை.



3. வதந்திகள் மற்றும் வெறுப்புப் பேச்சுக்கள்:

சமூக வலைதளங்களில் மதக் கலவரத்தைத் தூண்டும் விதமாகவோ அல்லது குறிப்பிட்ட சமூகத்தைப் புண்படுத்தும் விதமாகவோ வரும் மெசேஜ்களை பார்வேர்ட் (Forward) செய்வதைத் தவிருங்கள். வதந்திகளைப் பரப்புவது 'சைபர் டெரரிசம்' கீழ் வரக்கூடும். குறிப்பாக, நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் தகவல்கள் உங்கள் போனில் இருந்தால் அது தேசத்துரோக வழக்காக மாற வாய்ப்புள்ளது.

4. தடை செய்யப்பட்ட மற்றும் 'ஸ்பை' ஆப்ஸ்:

அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட செயலிகள் அல்லது பிறரின் போனை உளவுபார்க்க உதவும் 'Spyware' செயலிகளை வைத்திருப்பது உங்களைச் சட்டச் சிக்கலில் மாட்டிவிடும். பல லோன் ஆப்ஸ் உங்கள் தகவல்களைத் திருடி பிளாக்மெயில் செய்யப் பயன்படுத்தப்படுகின்றன. தெரியாத நபர்களிடமிருந்து வரும் லிங்குகளைக் கிளிக் செய்து ஆப்ஸை இன்ஸ்டால் செய்யாதீர்கள்.

காவல்துறையிடம் அகப்படாமல் இருக்க நீங்கள் செய்ய வேண்டியவை:

உங்கள் போனில் ஒரு சட்டவிரோத வீடியோ அல்லது மெசேஜ் வந்தால், அதை உடனடியாக டெலிட் செய்யுங்கள். அதேசமயம், அவை கூகுள் டிரைவ் அல்லது கிளவுட் (Cloud) பேக்கப்பில் சேமிக்கப்படாமல் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

அறிமுகமில்லாத எண்களிலிருந்து வரும் போட்டோ, வீடியோக்களை டவுன்லோட் செய்யாதீர்கள். வாட்ஸ்அப்பில் 'Media Auto-download' வசதியை ஆஃப் செய்து வைப்பது சிறந்தது.

வாட்ஸ்அப்பில் "Disappearing Messages" வசதியை ஆன் செய்து வைப்பதும், 2-Step Verification பயன்படுத்துவதும் உங்கள் பாதுகாப்பை அதிகரிக்கும்.



வேடிக்கைக்காகவோ, ஆர்வத்திற்காகவோ எதையும் பகிராதீர்கள். சைபர் போலீஸ் உங்கள் போன் கேலரி மட்டுமல்லாமல், நீங்கள் அழித்த தரவுகளையும் மீட்கும் தொழில்நுட்பம் கொண்டவர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

உங்கள் ஸ்மார்ட்போன் உங்கள் பாதுகாப்பிற்கு உதவியாக இருக்க வேண்டுமே தவிர, அது உங்களுக்கே எதிராக மாறும் ஆயுதமாக இருக்கக்கூடாது. டிஜிட்டல் உலகில் விழிப்புணர்வுடன் இருப்பதே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் சட்டச் சிக்கல்களில் இருந்து காப்பாற்றும்.

# "இதோ... இதோ... என் பல்லவி"

ஒரு மெல்லிய குலுக்கலுடன் அந்த எக்ஸ்பிரஸ் ரயில் சென்னை நோக்கிப் பறக்க ஆரம்பித்தது.



டிக்கெட் கன்ஃபார்ம் ஆகாததால் நின்று கொண்டு பயணித்த ராகவனுக்கு டி.டி. ஆர். கருணையால் உட்கார இடம் கிடைத்தது. "அப்பாடா இதுவாச்சும் கிடைச்சதே?" சில நிமிடங்களில் இன்னொரு இளைஞனும் வந்து அவனோடு அமர, இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர். வண்டி வேகம் பிடிக்க ஆரம்பித்ததும் ஹியர் போனை காதில் செருகிக் கொண்டு, பாட்டுக் கேட்க ஆரம்பித்தான் ராகவன்.

பக்கத்தில் உட்கார்ந்து இருந்தவன் ராகவனை தொட்டு உசுப்பி, " சார் ஐ யாம் கிரி... நீங்க தப்பா நினைக்கலேன்னா அந்த ஹியர் ஃபோனின் ஒரு பக்க ஸ்பீக்கரை எனக்கு தரலாமே... நானும் பாட்டுக் கேட்டுகிட்டே வருவேனே?" கெஞ்சலாய்க் கேட்டான். அந்த கிரியின் கெஞ்சல் ராகவனைக் கரைக்க, "ஓ.கே." என்றபடி ஒரு காதுப்பகுதி ஸ்பீக்கரைக் கழற்றித் துடைத்து அதை அவனிடம் தந்தான் ராகவன். அவனும் சந்தோஷமாய் செருகிக் கொண்டு பாட்டுக் கேட்க ஆரம்பித்தான்.

"இதோ.. இதோ.. என் பல்லவி!... எப்போது கீதம் ஆகுமோ?.... இவன்... உந்தன்... சரணம் என்றால்... அப்போது வேதம் ஆகுமோ?"
பாடலை இருவரும் மெய்மறந்து ரசித்தனர். சில நிமிடங்களில் இருவர் முகத்திலும் இறுக்கம்.
பாடல் முடிந்ததும் "வெடுக்"கென காதிலிருந்த ஹியர் போன் ஸ்பீக்கரை எடுத்தான் ராகவன். அவன் கை அனிச்சையாய் மொபைலை ஆஃப் செய்தது.

கிரியும் தன் காதிலிருந்த ஸ்பீக்கரைக் கழற்றி ராகவனிடம் தரும் போதுதான் கவனித்தான் ராகவன் கண்களில் கண்ணீர். ராகவனும் அந்த ஸ்பீக்கரை கிரியிடமிருந்து வாங்கும் போது பார்த்தான் கிரியின் கண்களிலும் அதே கண்ணீர்.
"ஏன் சார் அழுதுட்டீங்களா?" ராகவன் கேட்க.
"ஆமாம்!" என்ற கிரி, "நீங்களும் அழுதிருக்கீங்க போலிருக்கே சார்?" திருப்பிக் கேட்டான்.

"யெஸ்!... என் பிரிந்து போன காதலி ஞாபகம் வந்து விட்டது....அவளுக்கு இந்த பாட்டுன்னா உயிர்!" என்று ராகவன் சொல்ல, அதைக் கேட்டு அதிர்ந்த கிரி,

"என்ன சார் சொல்றீங்க?... என் கண்களின் கண்ணீருக்கும் அதேதான் காரணம்!... இது என் காதலி சுவாதிக்கு பிடிச்ச பாட்டு!.. என்னை உதறிட்டுப் போயிட்டா... எல்லாம் விதி" சோகமானான் கிரி.
"என்ன சொன்னீங்க?... என்ன சொன்னீங்க?.. உங்க காதலி பேரு சுவாதியா?" அவசரமாய்க் கேட்டான் ராகவன்.
"ஆமாம்"

"சார்... என்ன ஆச்சரியம்.... என் காதலி பேரும் "சுவாதி"தான்!... அவளுக்கும் பிடிச்சது இதே பாட்டு தான்!"

"ஹூம்... நம்ம ரெண்டு பேர் கண்களிலும் கண்ணீரை வரவழைத்துவிட்டு அந்த சுவாதிகள்... எங்கியோ... யாரோ ஒருத்தர் கூட சந்தோஷமா வாழ்ந்திட்டிருக்கா... நாம இங்கே உட்கார்ந்து அழுதிட்டிருக்கோம்!" என்றான் ராகவன் விரக்தியாய்.
அதே நேரம்.
அவர்கள் இருவரையும் காதலிப்பது போல் நடித்து, அவர்களிடமிருந்து நிறையப் பணத்தை அபகரித்து விட்டு, ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி விலகி ஓடிய அந்த சுவாதி, இதே ரயிலின் இன்னொரு பெட்டியில்,
"இதோ... இதோ... என் பல்லவி' பாடியவாறு பிச்சை எடுத்துக் கொண்டிருப்பது பாவம் இந்த இருவருக்கும் தெரியாது.
ஏனென்றால், அது இறைவனின் விளையாட்டு.



**-முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

# "மடிப்பிச்சை"

வானம் வெளுத்திருந்தது. இரண்டு நாட்கள் பெரிய மழை இல்லை எனினும், சூரியன் இல்லாத வானம் ஒளியிழந்து ஆங்காங்கே இருளைப் பரப்பியிருந்தது.
ஞாயிறு விடுமுறைக்குப் பின் வரும் திங்கட்கிழமை காலையைப் போல. ஞாயிறு ஆட்டம் திங்களை உம்மென்று ஆக்கும். அதுபோல, மழை இல்லை எனினும், சூரியன் இன்னும் பளிச்சென்று வரவில்லை. மழையின் பாதிப்பு சாலையில் ஆங்காங்கே இருந்தது.
தன் வண்டியை சரியான இடத்தில் ஓரமாக நிறுத்திவிட்டு உணவு உண்பதற்காக ஓட்டலுக்குள் செல்ல முற்பட்டான் ராஜராஜன் என்கிற ராஜன். "ராஜன்" னே பேர் வெச்சுருக்கலாமே! எதுக்கு "ராஜராஜன்" னு சொல்லிட்டு என்கிற "ராஜன்" னு கேப்பீங்க. கதைதானே! விட்ருங்க.
அப்போது ஓட்டலின் வாசலில் ஒருத்தி, "ஐயா! ஏதாச்சும் கொடுத்துட்டு போங்கய்யா! " என்றாள்.

பிச்சை என்ற பேரில் சிலபேர் அதட்டிக் கேட்பார்கள்; கொடுக்காவிடில் திட்டுபவர்களும் உண்டு. ஆனால், இவள் அப்படிப் பட்டவளாய்த் தெரியவில்லை. இவள் குரலில் கெஞ்சல் ஒன்றுமில்லை. அமைதியாய்த்தான் கேட்டாள். ஏனோ அவள் முகத்தில் தெளிவு அளவின்றி இருப்பதாய் உணர்ந்தான் ராஜன். அந்த அமைதி அவனை வெகுவாகக் கவர்ந்தது.
அவளை இன்னும் உற்று நோக்க நினைத்தான். ஆனால் பார்ப்பவர்கள் மட்டுமன்றி அவளும் தன்னைத் தவறாக எண்ணக்கூடும். என்ன செய்வது என்று யோசித்தான் அவன். இப்போ "ராஜன்" றதையும் விட்டாச்சு. இனிமே "அவன்"தான் அவன் பெயர் இதில்.
"சரி! வாம்மா! சாப்(ப)டதானகாசு கேட்ட? வா உள்ள உக்காந்து சாப்(ப)டலாம்" என்றான் அவன்.
"நானா? உள்ளயா? அதெல்லாம் சரி வராதுங்கய்யா... நீங்க போய் சாப்டுங்க." என்றாள் அவள்.
ஏம்மா! இதுலஎன்ன இருக்கு? உனக்கும் எனக்கும் சேர்த்து காசு நான் கொடுக்கப்போறேன். சாப்(ப)டறதுலஉனக்குஎன்ன கஷ்டம்? என்றான் அவன். "இல்லங்கய்யா! இப்படி வாசல்ல கொடுக்கறவங்ககாசுலநா வெளிய சாப்டுப்பேன். உள்ள போய்லாம் சாப்டு பழக்கமே இல்லீங்கய்யா!" என்றாள்.

"அட! பரவால்லம்மா வா! இன்னிக்கு ஒருநாள் வந்து சாப்(பு)டு, நா இருக்கேன். என் கூடயே உக்கா(ர்)ந்து சாப்(பு)டு" என்றான் அவன்.
"அவன் அழைத்த விதம் ஏனோ அவளுக்கும் பிடித்திருந்தது. சரிங்கய்யா! வரேன்" என்றாள் அவள். அட! இவளுக்குப் பேரே வக்கலியே" ன்னு கேப்பீங்க. அவள் பெயர் "அவள்" தான் இதில்.
"நாளைப் பொழுது என்றும் நமக்கென வாழ்க அதை நடத்த ஒருவனுண்டு கோயிலில் காண்க"
ஏனோ அவள் சொன்னத கேட்டதும், கண்ணாதாசனின் இந்தப் பாடல் வரிகள் அவன் மனதுக்குள் கணீரென்று ஒலித்தன.
அவன் விடவில்லை. சரிம்மா! நல்லா நடத்து. ஒரு நிலைக்கு வந்தப்பறம் என்ன plan? என்று கேட்டான் அவன்.
எந்த பிளானும் இல்லீங்கய்யா! ஓடற வரை ஓட்டும். நடக்கற வரை நடக்கட்டும். திட்டம் போட்டுல்லாம் இத நடத்த முடியாது. இது வியாபாரமில்ல திட்டம்போட, கடவுள் போட்ட பிச்சை. அவர் பாத்துப்பாரு.

அவன் அதிர்ந்தான். "சரி. நல்லா நடத்து. எதுனா வேணுன்னா ... னு தன் நம்பர் கொடுக்க முற்பட்டான் அவன். இல்லீங்கய்யா. உங்க நம்பர நீங்க ஒருத்தர்கிட்ட போன்ல சொல்லச்ச, மனசுல குறிச்சுண்டேன். அது எப்பவும் மறக்காது" என்று அவள் சொல்ல, மீண்டும் மீண்டும் அதிர்ந்தான் அவன். ஏற்கனவே மேல ஒரு "மீண்டும்" போட்டாச்சு. அதனால, ரெண்டு "மீண்டும்" இங்க.
"அப்பறம், ஓட்டல்லதான எப்பவும் இருப்ப?" ன்னு கேட்க,



"இல்லீங்கய்யா! ராத்திரி ஓட்டல் வேலை முடிஞ்சப்பறம், நா இந்தக் கோயில்லதான் வந்து படுப்பேன். காலைல எழுந்து ஓட்டலுக்குப் போய்டுவேன்" என்றாள் அவள்.
"என்ன....து....ஓட்டல் ஆரம்பிச்சப்பறமும் இந்தக் கோயில்லதான் தங்குவியா?" என்றான் அவன். அதற்கு நிறைய காரணங்கள் சொன்னாள். எல்லாம் நல்ல பதில்களே. ஆனால், கடைசியில் அவள் சொன்ன பதில்....
எதுவும் நிரந்தரமில்லீங்கய்யா! உள்ள இருக்கற அந்த சாமிதான் நிரந்தரம். நா என்னவா இருக்கணும் னு அதுக்குத் தெரியும். தினைக்கும் அந்த சாமிகிட்ட சொல்லிட்டுதான் பிச்சை எடுக்க வருவேன்... அதனால இதெல்லாமே அவர் போடற பிச்சைதான். நானோ, நீங்களோ, மத்தவங்களோ ஒரு கருவி. அவ்ளோதாங்கய்யா!" என்றாள் அவள்.

அவன் மீண்டும் மீண்டும் மீண்டும் அதிர்ந்தான். பதிலுக்கு ஏதும் பேச முடியவில்லை அவனால்.
"ஐயா!" ... அழைத்தாள் அவள்.
"என்னம்மா?" என்றான் அவன்.
"நன்றிங்கய்யா" என்றாள் அவள். அவனுக்குப் புரிந்தது. அவன் ஏன்? எதற்கு நன்றில்லாம்? என்று அவளிடம் ஏதும் கேட்கவில்லை.

அவன் ஏன் கேட்கவில்லை? அவனுக்குப் புரிந்தது... "நானும் ஒரு கருவிதான்". இதை இயக்குபவன் எதிரே உள்ளே இருக்கின்றான்.
"நல்லாரும்மா!" விடைபெற்றுப் புறப்பட்டான் அவன். "சாமி பாத்துப்பாருங்கய்யா!" திடமாகச் சொன்னாள் அவள்.
சிறிது தூரம் வந்தவன், ஓடிச்சென்று அவள் கைப்பிடித்தான். கும்பிட்டான். அவன் கண்களில் நீர் வழிந்தது. விம்மி நின்றான்.

மனிதர்கள் பலவிதம். இவள் எவ்விதம்? அவனுக்குப் புரியவில்லை. "சாமி பாத்துப்பாருங்கய்யா!" ... இந்த வார்த்தை அவனுக்குள்ளே பலவிதமாய் அதிர்ந்து கொண்டே இருந்தது. அந்த சாமி இப்போது அவனுக்குள்ளேயும் சிரித்தது. தன் வண்டியை விட்டுவிட்டு அப்படியே நடக்கத் தொடங்கினான் அவன்.
அப்போ, அவன் வண்டீ..... ன்னு கேக்கறீங்களா? "சாமி பாத்துப்பாருங்க!". அப்(பி)டியே விட்ருவோம்.
"மனிதன் என்பவன்
தெய்வமாகலாம்
வாரிவாரி வழங்கும்போது
வள்ளலாகலாம்
வாழைபோல தன்னைத் தந்து
தியாகி ஆகலாம்
உறுதியோடு மெழுகு போல
ஒளியை வீசலா....ம்
மனிதன் என்பவன் தெய்வமா...
கலாம் ...
மனிதன் என்பவன் தெய்வமா....
கலாம் ...
தெய்வமாகலாம்"

**B VENKATAKRISHNAN**
ThiruvallikkeNi

# ஔவைக் குறளும் 2,3



■ Banumathi Nachiyar





தினம் ஒரு செல்பி என்று போட்டவுடன் டி கே கணேசன் சார் அவர்கள் அதோட ஏதாவது ஒரு மெசேஜ் அனுப்பலாமே என்று ஆலோசனை கூறினார்.
தேடல் தானே வாழ்க்கை. ஒரு கதை புத்தகம் எழுதுவதற்காக கௌசல்யா அவர்களிடம் பேசிக் கொண்டிருக்கும் பொழுது அவ்வையின் ஞானக் குறள் என்ற ஒரு நூல் இருப்ப

**பரமாய சக்தியுட் பஞ்சமா பூதந்
தரமாறித் தோன்றும் பிறப்பு**

**விளக்கம்**

பரம் என்ற ஆதி நிலை இப் பிரபஞ்சமே. சக்தியின் வெளிப்பாடு பஞ்சமா பூதம். உயிர்கள் தாங்கள் கண்ட நிலையில் வரிசைப்படுத்துவது போல் வான், காற்று, நெருப்பு, நீர், நிலம் என வரிசைப்படுத்தினர். இவைகள் ஒன்றோடு ஒன்று ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் கலந்து தோன்றுவது சிறப்பாகும். அவைகள் தரமாறி மாறினால் ஜென்மம் உண்டாகிறது. பிறப்பு உண்டாகிறது. பரம்பொருளிடத்தில் உண்டான சக்தியில் அடங்கிய பஞ்சமா பூதங்கள், தங்களில் ஒன்றோடு ஒன்று மாறினால் ஜென்மமானது உண்டாகிறது.

**பஞ்சமா பூதங்களின் பரிணாமமே தேகம் என்பதாகும்.**

பரமாய சக்தி என்பது பர மாய சக்தி என்றும் பரம் ஆய சக்தி என்றும் பிரித்து, பரத்தில் இருக்கும் மாய சக்தி எனவும் பரமாகிய சக்தி எனவும் பொருள் கொள்ளலாம்.
நாளை அடுத்த செல்பியுடன்
பின்னூட்டம் @ T K GANESAN

**1. வீட்டுனெறிப்பால் - குறள் 2**

பரவெளிச் சக்தியானது
தன்னுள் இணைந்து
விண்,வாயு, அக்னி,நீர்,
நிலம் என்ற ஐம்பூதங்களுள் உயிராக விளங்குவதால்
பிறப்பு என்பது உருவாகிறது.

==============================


**ஓசை பரிச முருவஞ் சுவைநாற்ற
மாசை படுத்து மளறு**

ஐம்பூதங்கள் ஆன உயிர் தோன்றுவதைக் கூறியவர் இக்குறளில் ஐம்பொறிகளினால் உண்டாகும் புலன் உணர்ச்சியைக்கூறி அவை ஆன்மாவைக் கெடுக்கும் சேறு என்கிறார்.
ஒலி, தொடுஉணர்வு, உருவம், சுவைஉணர்வு, மணம் ஆகிய ஐந்தும் பஞ்சதன் மாத்திரைகள் என்கிறார்.
இந்த ஐந்தும் ஆசையை உண்டாக்கி ஆன்மாவைக் கெடுக்கும் சேறாகும் என்பது கருத்து.
உயிர்கள் தோன்றக் காரணமான ஐம்பூதங்களைக் கூறியவர் இக்குறளில் ஐம்பொறிகளைக் கூறி அதனால் உண்டாகும் ஐம்புலன் உணர்ச்சிகளைக் கூறுகிறார்.
ஐம்பொறிகளாகிய செவி, தோல், கண், நாக்கு, நாசி ஆகியவைகளே அவர் வரிசைப்படுத்தும் முறை செவியால் ஓசையை உணர்கிறோம் தோலால் ஸ்பரிசம் உணர்கிறோம் கண்ணால் உருவம் காண்கிறோம். நாக்கால் சுவை உணர்வை உணர்கிறோம். மூக்கால் மணத்தை நுகர்கிறோம்.
எனவே ஐம்பொறிகளால் உண்டாகும் உணர்வுகளின் ஆசைகள் ஆன்மாவைச் சேறில் தள்ளிவிடும் துன்பத்தைக் கொடுக்கும். தேகத்தில் அமைந்த ஆன்மாவிற்குச் சேறாய் ஐம்பொறிகளால் ஏற்படும் ஆசையே காரணமாகும். நாளை மற்றொரு செல்பியுடன் மற்றொரு குறள்

பின்னூட்டம் அருமையான விளக்கம்......
ஔவையாரின் ஞானக்குறள் 3-இல் வரும், இது ஐம்புலன்களான ஓசை (ஒலி), பரிசம் (தொடு உணர்வு), உருவம் (காட்சி), சுவை (சுவை), நாற்றம் (மணம்) ஆகியவற்றைத் தூண்டி, மனதை மாசுபடுத்துவதைக் குறிக்கிறது; அதாவது, இந்த உலக இன்பங்கள் ஆன்மாவைத் தடுமாறச் செய்துவிடும் என்பதைக் கூறுகிறது. ஐம்புலன்களின் வழிச்செல்லும் சிற்றின்பம் தற்காலிகமானது மற்றும் அது ஆன்மாவை மாயையில் பந்தப்படுத்தும் என்பதை இது விளக்குகிறது.
@M A RAMMAMOORTHY

(தொடரும்).

# தைப்பூசத்தின் சிறப்புக்கள்



தை மாதம் பௌர்ணமியில் வரும் தைப்பூச சிறப்புகளை இன்று காண்போம்.

தைப்பூசம் என்றாலே தீமையை நன்மை வென்ற நாள்! இந்த நாளில் தொடங்குவதெல்லாம் துலங்கும். இந்த வருடம் தைப்பூசமானது பிப்ரவரி மாதம் 1ஆம் தேதி பௌர்ணமி நாளில் வருகிறது. தைப்பூசம் முருகப் பெருமான், சிவன், ஆகிய தெய்வங்களுக்கும் ராமலிங்க அடிகளார் அவர்களுக்கும் உகந்த நாள். தைப்பூசம் என்றவுடன் முதலில் நாம் ஞாபகத்தில் வருவது முருகப்பெருமானே!

## வேலவனை வேண்டுவதால் கிட்டும் நன்மைகள்

முருகப் பெருமானுக்கு உகந்ததாக கூறப்படும் நட்சத்திரங்கள் பங்குனி உத்திரம், ஆடி கிருத்திகை, வைகாசி விசாகம், தைப்பூசம், ஆகும். இந்த தைப்பூச திருநாளில் முருகனை நாம் வேண்டி விரதம் இருந்து வழிபட்டால் என்னென்ன கிட்டும் என்பதை பார்ப்போம். வாழ்வில் தலைவிதியையே மாற்றும் வடிவேலை வணங்கினால் வல்வினைகள் தீரும். போர் கடவுளாம் தேவ சேனாதிபதியை வணங்கினால் தீய சக்திகள் நம்மை அண்டாது. துன்பமே துவண்டு ஓடிவிடும். சண்முக நாதனை வணங்கினால் சகல சம்பத்தும் நம்மை வந்து அடையும். ஞானவேலை வழங்கினால் ஆழமான அறிவும் அகலமான மனமும் கூர்மையான புத்தியும் நம்மை வந்து அடையும். கந்தவேளை வணங்கினால் கடன் தொல்லை தீரும். மொத்தத்தில் குரு குகனை வணங்கினால் உங்கள் வாழ்க்கையை அவர் குருவாக பார்த்துக் கொள்வார்.

## தைப்பூச மகிமை

தைப்பூசத்தில் நிகழ்ந்ததாக கூறப்படும் நிகழ்வுகளை ஒன்றன்பின் ஒன்றாக பார்ப்போம் ஆறுமுகமாக உதித்த முருகப்பெருமானை பார்வதி அன்னை அள்ளி அணைத்தது இந்த நன்னாளில் தானாம். அவனுக்கு ஞானம் மற்றும் ஒளியின் அடையாளமான வடிவேலை கொடுத்து "வென்று வா" என்று அன்னை அனுப்பியதும் இந்த நன்னாளில் தானாம். வேல் பெற்ற முருகன் தீய சக்திகளை அழித்ததும் இந்த நன்னாளில் தானாம். வள்ளியை அவன் மணந்ததும் இந்த நாளில் தானாம். மொத்தத்தில் உலகம் தோன்றியதே இந்த நன்னாளில்தானாம். இத்தகைய நன்னாளில் அந்த ஞானப் பழத்தை வேண்டி விரதம் இருப்பது எத்தகைய சிறப்புடையது!

## தைப்பூச விரதம்

தைப்பூச விரதம் 48 நாட்கள் அல்லது 21 நாட்கள் அல்லது 11 நாட்கள் அல்லது ஒன்பது நாட்கள் அல்லது ஒரே ஒரு நாள் கூட விரதம் இருந்து அனுஷ்டிக்கலாம். தைப்பூசத்தன்று காலையில் எழுந்து நீராடி திருநீர் அணிந்து தூய மனதுடன் முருகனுக்கு மஞ்சள் அல்லது சிகப்பு மலர் சாத்தி வேலை பூஜை செய்வதென்றால் ஒரு வெள்ளி அல்லது பித்தளை கிண்ணத்தில் அரிசி நிரப்பி மலர்களை வைத்து அதில் வேலை சொருகி சட்கோண தீபம், வெற்றிலை தீபம் போன்ற தீபங்கள் ஏற்றி அவருக்கு பிடித்தமான தேன், தினை மாவு ,அல்லது பால் பாயாசம், சர்க்கரை பொங்கல் என நிவேதனம் செய்து வேண்டலாம். எதுவும் இயலா விடினும் ஒரு தீபம் ஏற்றி இரு கல்கண்டை வைத்து கூட நிவேதனம் செய்யலாம். நாம் பால்பழம் மட்டும் அருந்தி உபவாசம் இருக்கலாம். முடிந்தால் இரு வேளையும் கோவிலுக்கு சென்று வேண்டி வரலாம். இல்லத்திலேயே இருந்து கந்த சஷ்டி கவசம், திருப்புகழ், வேல்மாறல், போன்றவற்றை பாடலாம். இயலாதவர்கள் முருகா என்று ஒரு சொல்லால் அழைத்து உருகினாலே போதும். அவன் அருள் கிட்டும்.

## அருணகிரிநாதர் அருளுரை

கந்தர் அலங்காரத்தில் அருணகிரிநாதர் அவர்கள் முடியாத பிறவி கடலில் புகார் என்று தொடங்கும் 33வது பாடலில் முருகா என்று கூறினாலே என்னென்ன நன்மைகள் கிட்டும் என்று பட்டியலிட்டு இருக்கிறார். இத்தனை வழங்கும் முருகனை வணங்காதவர்கள் 'கோழி கொடியோன் அடிபணியாமல் குவளையத்தே வாழும் மதியிலிகாள்' என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

## தைப்பூச வரலாறு

தைப்பூசம் பற்றிய விபரங்கள் 1500 ஆண்டுகளுக்கு முன்பே தேவார திருப்பதிகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது பிற்கால சோழர்கள் காலத்தில் கோவில்களில் இந்நாளில் கூத்துக்கள் நடைபெற்றுள்ளது. திருவிடைமருதூரில் உள்ள மகாலிங்கேஸ்வரர் கோவிலில் தைப்பூசத்தை ஒட்டி நான்கு நாட்கள் கூத்து நடைபெற்றதாக கல்வெட்டுகள் கூறுகின்றன.

## தைப்பூசம் கொண்டாடப்படும் இடங்கள்

தைப்பூசம் தமிழர்கள் மட்டுமல்லாது கேரளத் தவரும் 'தைப்பூயம்' என்று கொண்டாடுகிறார்கள். எல்லா முருகன் திருத்தலங்களிலும் இந்த தைப்பூச திருநாள் கொண்டாடப்படுகிறது. பழனி மலையிலும் திருச்செந்தூரில் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகிறது. பக்தர்கள் பாத யாத்திரை செய்து சின்ன ரதம், சக்கரை காவடி, தீர்த்த காவடி, பறவை காவடி, பால் காவடி மீன் காவடி, மயில் காவடி, போன்ற காவடிகளை சுமந்து காவடி சிந்து பாடியும், பால்குடம் எடுத்தும், அலகு குத்தியும், வேண்டுதல்களை நிறைவேற்றி கோவிலில் தரிசனம் செய்கிறார்கள்.

தமிழகம் மட்டுமல்லாது தமிழர்கள் வாழும் உலகின் பல பாகங்களில் தைப்பூசம் கொண்டாடப்படுகிறது. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, மொரிஷியஸ், தென்னாப்பிரிக்கா, ரியூனியன், ஆஸ்திரேலியாவின் விக்டோரியா, பிஜு ஆகிய இடங்களிலும் தற்பொழுது அமெரிக்காவில் உள்ள பல இந்து கோவில்களிலும் தைப்பூசம் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகிறது. என்னப்பன் முருகனை வேண்டி எல்லாம் பெறுவோம்

## சிதம்பரம்

முருகனுக்கு மட்டுமல்லாது தைப்பூசம் சிவ ஸ்தலங்களிலும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. சிதம்பரத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இந்த நன்னாளில்தான் சிவபெருமான் உமா தேவியாரோடு நடனமாடி உலகத்தவரை மகிழ்வித்ததாக கூறப்படுகிறது. மேலும் இரண்ய வர்மன் என்ற கௌடவ தேசத்து அரசனுக்கு (தற்போதைய மேற்கு வங்காளம்) இந்த நன்னாளில்தான் சிவபெருமான் நேரில் காட்சி அளித்ததாகக் கூறப்படுகிறது. அதனால் இந்த தைப்பூசம் சிதம்பரத்தில் மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. சிவ ஸ்தலங்களில் இந்த நன்னாளில் சிவனை வழிபட்டு அருள் பெறலாம். தேவ குருவான பிரகஸ்பதியின் ஜென்ம நட்சத்திரமும் இதுவே. எனவே குருவை இந்த நன்னாளில் வழிபாட்டால் பல நன்மைகள் கிட்டும். வள்ளலார் அவர்கள் இந்த தை மாத புனர்பூச நட்சத்திரத்தில் தான் ஒளி வடிவாக இறைவனை சென்றடைந்தார். எனவே அதற்கு அடுத்த நாளான தைப்பூசதன்று வடலூர் மேட்டுக்குப்பத்தில் ஜோதி தரிசன நிகழ்ச்சி நடைபெறுகிறது. வள்ளலார் அவர்களின் அருளைப் பெற இந்த நன்னாளில் தயிர் சாதம் நிவேதனம் செய்து அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை என்று ஜெபித்து அவரின் அருள் பெறுவோமாக.



வனஜா நாகராஜன்
யு.எஸ்.ஏ

---

தினம் ஒரு தலைவர்கள்

# சரோஜினி நாயுடு வரலாறு

சரோஜினி நாயுடு அல்லது சரோஜினி சட்டோபத்யாயா (பிப்ரவரி 13,1879, ஐதராபாத் - மார்ச் 2,1949, லக்னோ) இவர் பாரத்திய கோகிலா (இந்தியாவின் நைட்டிங்கேல்) என்றும் அழைக்கப்படுகிறார். இவர் ஒரு பிரபலமான சிறுமுது அறிஞர், கவிஞர், எழுத்தாளர் , சுதந்திரப் போராளி மற்றும் சமூக ஆர்வலர் ஆவார். இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது பெண் தலைவரும்[ உத்தரப்பிரதேச மாநிலத்தின் முதல் பெண் ஆளுனரும் ஆவார். அவரது பிறந்த நாள் இந்தியாவில் மகளிர் தினமாக கொண்டாடப்படுகிறது.

இளமைக் காலம்

சரோஜினி சட்டோபாத்தியாயா, பின்னாளில் சரோஜினி நாயுடு, இந்தியாவின் ஹைதாராபாத் மாநிலத்தில் ஒரு வங்காள குலின் பிராமணக் குடும்பத்தில் மூத்த மகளாக 13 பிப்ரவரி 1879 அன்று பிறந்தார். இவர் இவரது குடும்பத்தின் 8 குழந்தைகளில் மூத்தவராவார். இவரது தந்தை விஞ்ஞானியும் தத்துவவியலாளரும் கல்வியாளராகவும் விளங்கிய அகோரநாத் சட்டோபத்யாயா. இவரது தாய் வரதா சுந்தரி ஒரு பெண் கவிஞர் ஆவார். இவரது தந்தை நிசாம் கல்லூரியின் நிறுவனர் ஆவார். மேலும் இவரது நண்பர் முல்லா அப்துல் காமுடன் இந்திய தேசிய காங்கிரசின் முதல் உறுப்பினராக விளங்கினார். அவர் பின்னர் அரசியலில் ஈடுபட்டதற்காக அவரது தலைமை ஆசிரியர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார்.

## கல்வி

12 ஆவது வயதில் சரோஜினி நாயுடு அவரது மெட்ரிகுலேஷன் பரீட்சையில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தேர்ச்சி பெற்றார். அவர் மாநில அளவில் முதலிடம் பெற்றார். 1891 முதல் 1894 வரை அவர் தன்னுடைய படிப்பில் சிறு இடைவெளி விட்டு, பல்வேறு தலைப்பிலான புத்தகங்களைப் படித்தார். 1895 ஆம் ஆண்டு, பதினாறு வயதில் முதன் முதலாக நிஜாம் அறக்கட்டளையின் உதவித்தொகை லண்டனிலுள்ள கிங்ஸ் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் கிர்டன் கல்லூரியில் மூலம் படிப்பதற்காக சென்றார். உருது, தெலுங்கு, ஆங்கிலம், பாரசீகம், பெங்காலி ஆகிய மொழிகளைப் பேச சரோஜினி நாயுடு கற்றுக்கொண்டார். அவருக்கு பிடித்தமான கவிஞர் பெர்சி பைஷ் ஷெல்லி ஆவார்.

## திருமணம்

இங்கிலாந்தில் தங்கியிருந்த போது தனது 17 வயதில் முத்யாலா கோவிந்தராஜுலு நாயுடு என்ற ஒரு பிராமணர் அல்லாத தொழில்ரீதியான ஒரு மருத்துவரை சந்தித்து, அவரைக் காதலித்து தனது 19வது வயதில் திருமணம் செய்து கொண்டார். 1898 ஆம் ஆண்டு சட்டப்படி சென்னையில் அவர்கள் திருமணம் செய்து கொண்டனர். சாதியிடை திருமணங்கள் அனுமதிக்கப்படாத காலகட்டத்தில் அவரை திருமணம் செய்து கொண்டார். அதற்கு முற்போக்கு சிந்தனையுள்ள அவரது தந்தையின் ஒப்புதலும் கிடைத்தது. அவரது திருமண வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக இருந்தது. இவர்களது திருமணம் சென்னையில் டாக்டர் நஞ்சுண்டராவ்வின் 'சசி விலாஸ்' இல்லத்தில் நடைபெற்றது.அவர் சாதீயக் கட்டுப்பாடுகளின் தீவிர எதிர்ப்பு அலைகளைத் தாண்டி இத்திருமணத்தை நடத்தி வைத்தார். ஜெயசூர்யா, பத்மஜா, ரந்தீர், லீலாமணி என அவர்களுக்கு நான்கு குழந்தைகள் பிறந்தனர். பின்னர் அவரது மகள் பத்மஜா மேற்கு வங்காளத்தின் ஆளுனர் ஆனார்.

## அரசியல் வாழ்க்கை

மகாத்மா காந்தியுடன் சரோஜினி நாயுடு

இந்திய சுதந்திர போராட்டம் 1905 ஆம் ஆண்டில் வங்காளம் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் இந்திய சுதந்திர போராட்டத்தில் பங்கேற்றார். 1903-17 காலகட்டத்தில் சரோஜினி அவர்கள் கோபால கிருஷ்ண கோகலே, ரபீந்திரநாத் தாகூர், முகம்மது அலி ஜின்னா, அன்னி பெசண்ட், சி.பி.ராமஸ்வாமி ஐய்யர், மோகன்தாஸ் காந்தி, ஜவஹர்லால் நேரு ஆகியோரின் அறிமுகத்தைப் பெற்றார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மகாத்மா காந்தியுடன் இணைந்து தண்டி





யாத்திரையில் ஈடுபட்டார். காந்தி, அப்பாஸ் தியாப்ஜி மற்றும் கஸ்தூரி பாய் காந்தி ஆகியோர் கைதுக்குப் பின் தர்சண சத்தியாகிரகத்தில் துடிப்புடன் பங்கேற்றார். 1915 முதல் 1918 ஆண்டுகளுக்கிடையில் அவர் இந்தியா முழுவதும் இளைய சமுதாயத்தினரின் நல்வாழ்வு, பணியாளர் நலன், பெண் கொடுமை மற்றும் தேசியப் பற்று குறித்து பல்வேறு சொற்பொழிவுகளை மேற்கொண்டார். ஜவகர்லால் நேருவை 1916 ஆம் ஆண்டு சந்தித்ததற்குப் பின் அவர் சம்பரன் இன்டிகோ பணியாளர்கள் பிரச்சினையைக் கையில் எடுத்தார். 1925 ஆம் ஆண்டில் அவர் காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பதவிக்கு தேந்தெடுக்கப்பட்ட முதல் பெண் இவரே ஆவார்.

1919 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம் ரௌலெட் சட்டத்தினைப் பிறப்பித்தது. இதன் வழியாக விழிப்புணர்வு ஆவணங்களை வைத்திருப்பது சட்டத்திற்கு புறம்பானதாகக் கருதப்பட்டது; மோகன் தாஸ் காந்தி அவர்கள் எதிர்த்துப் போராட ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கினார், இதில் முதலில் இணைந்தவர் சரோஜினி நாயுடு ஆவார்.

ஜுலை 1919 ஆம் ஆண்டு சரோஜினி அவர்கள் இங்கிலாந்திற்கான ஹோம் ரூல் லீக்கின் தூதர் ஆனார். ஜுலை 1920 இல் அவர் இந்தியாவிற்கு திரும்பினார். ஆகஸ்ட் 1 அன்று மகாத்மா காந்தி அவர்கள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கினார். 1924 ஆம் ஆண்டு, கிழக்கு ஆப்பிரிக்க இந்திய காங்கிரசில் பங்கேற்ற இரண்டு இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்களுள் ஒருவராக சரோஜினி அவர்கள் திகழ்ந்தார்.

அக்டோபர் 1928 ஆம் ஆண்டு நாயுடு நியூ யார்க்கிற்கு சென்றார். அங்கு நிலவிய ஆப்ரிக்க அமெரிக்க மற்றும் அமெரிக்க இந்திய இனப் பாகுபாடுகளைக் கண்டு கவலையுற்றார். அங்கிருந்து திரும்பிய பின்னர் காங்கிரஸ் காரிய கமிட்டியின் உறுப்பினரானார். ஜனவரி 26, 1930 இல் தேசிய காங்கிரஸ் பிரித்தானிய ஆட்சியிடமிருந்து சுதந்திரம் கோரியது. மே 5, அன்று மோகன் தாஸ் காந்தி கைது செய்யப்பட்டார். அதன் பின் சில நாட்களிலேயே நாயுடு அவர்களும் கைது செய்யப்பட்டு பல மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். காந்தி அவர்களுடன் ஜனவரி 31, 1931 இல் அவர் விடுதலை செய்யப்பட்டார். அந்த ஆண்டின் பிற்பகுதியில் அவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டனர். மோசமான உடல் நிலை காரணமாக நாயுடு உடனடியாகவும் காந்தி 1933 ஆம் ஆண்டும் விடுதலை செய்யப்பட்டனர். 1931 ஆம் ஆண்டு அவர் காந்திஜி மற்றும் பண்டிட் மாலவியாஜி ஆகியோருடன் இணைந்து வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்றார். அக்டோபர் 2, 1942 ஆம் ஆண்டு அவர் வெள்ளையனே வெளியேறு போராட்டம் காரணமாக கைது செய்யப்பட்டார். அவர் காந்திஜியுடன் 21 மாதங்கள் சிறையில் இருந்தார். மோகன் தாஸ் காந்தி அவர்களுடன் நாயுடு அவர்கள் ஒரு பாசமான உறவினைக் கொண்டிருந்தார். காந்தி அவரை செல்லமாக "மிக்கி மவுஸ்" என்று அழைப்பார். 1947 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற ஆசிய உறவுகள் மாநாட்டில் நாயுடு பங்கேற்றார்.

## இந்தியாவின் முதல் பெண் ஆளுனர்

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாள் இந்தியா சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு அவர் யுனைட்டட் ப்ரொவின்சஸ் (தற்போது உத்தரப்பிரதேசம் என்று அழைக்கப்படுகிறது) ன் ஆளுநராக பதவியேற்றார். இதன் வழியாக இந்தியாவின் முதல் பெண் ஆளுநரானார். மார்ச் 2, 1949 அன்று மாரடைப்பால் அவர் மரணமடைந்தார்.

கவிதைத் துறை

அவரது முக்கிய பங்களிப்பும் ஆர்வமும் கவிதை துறையில் இருந்தது. சரோஜினி நாயுடு கவிதைத் துறைக்காக பல பாராட்டுகளைப் பெற்றுள்ளார். இவரது கவிதைகளில் அழகான வார்த்தைகள் இருக்கும், மேலும் அது பாடக் கூடிய வகையிலும் இருக்கும். 1905 ஆம் ஆண்டு அவரது முதல் பாடல்கள் தொகுப்பு தி கோல்டன் த்ரெஷோல்டு என்னும் பெயரில் வெளியிடப்பட்டது . மேலும் இரண்டு பகுதிகள் வெளியிடப்பட்டது: தி பேர்ட் ஆஃப் டைம் (1912) மற்றும் தி புரோக்கன் விங் (1917). 1918 ஆம் ஆண்டு, பீஸ்ட் ஆப் யூத் வெளியிடப்பட்டது. பின்னர் அவரது தி விஸார்டு மாஸ்க் மற்றும் எ டிரஷரி ஆஃப் போயம்ஸ் ஆகிய புத்தகங்கள் வெளியிடப்பட்டன. 1961 ஆம் ஆண்டு அவரது மகள் பத்மஜா தனது தாயின் வெளியிடப்படாத கவிதைகளை தி ஃபெதர் ஆஃப் டான் என்னும் தலைப்பில் வெளியிட்டார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# மெல்லிசை

## திரைவிமர்சனம்



தனியார் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக பணியாற்றுகிறார் கிஷோர். மனைவி, மகன், மகள் என அன்பான குடும்பத்துடன் வாழந்த வருகிறார். இசை மீது தீராத ஆசைக்கொண்ட கிஷோருக்கு எப்படியாவது பாடகராக வேண்டும் என்பது கனவு. ஆனால், அந்த ஆசை நிறைவேறாமல் போகிறது.

ஆனால், அவரது மகள் தனது தந்தை எப்படியாவது பாடகராக வேண்டும் என்று ஆசைப்படுகிறார். இதற்காக பல மேடைகளை ஏறுகிறார். அதன் மூலம், வாழ்க்கையில் முன்னேற்றத்தை கண்டு வரும் கிஷோருக்கு மீண்டும் சறுக்கல் ஏற்படுகிறது. இதனால், மனமுடைந்து போகிறார்.

இந்த சூழலில் இருந்து கிஷோர் எப்படி வெளியே வருகிறார்? அவரது வாழ்க்கை என்னவானது? என்பதே படத்தின் மீதி கதை..

**நடிகர்கள்**

கதையின் நாயகனாக நடித்திருக்கும் கிஷோர், ஏக்கங்களோடு வாழும் ஒரு குடும்ப தலைவரின் கதாபாத்திரத்திற்கு கச்சிதமாக பொருந்தி இருக்கிறார். கிஷோரின் மனைவியாக நடித்திருக்கும் சுபத்ரா ராபர்ட், இயல்பாக நடித்து ஸ்கோர் செய்து இருக்கிறார்.

மகன் மற்றும மகளாக நடித்திருக்கும் தனன்யா வர்ஷினி, ஜஸ்வந்த் மணிகண்டன் பலம் சேர்த்திருக்கிறார்கள்.

**இயக்கம்**

குடும்பத்தாரின் ஆதரவும், அன்பும் இல்லாமல் சரிந்து போகும், சராசரி மனிதர்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் வகையில் படத்தை உருவாக்கி இருக்கிறார் இயக்குனர் திரவ். சுவாரஸ்யமாக கதையை நகர்த்தியிருக்கிறார்.

**இசை**

பின்னணி இசை காட்சிகளுக்கு ஏற்ப பயணித்திருக்கிறது.

**ஒளிப்பதிவு**

ஒளிப்பதிவாளர் தேவராஜ் புகழேந்தி கதைக்களத்திற்கு அதிகமான வலிமையை சேர்த்திருக்கிறது.

ரேட்டிங்-3/5



பிக் பாஸ் 7ம் சீசனில் போட்டியாளராக கலந்துகொண்டவர் பூர்ணிமா ரவி. அந்த ஷோவுக்கு வரும் முன்பு பூர்ணிமா you-tube வீடியோக்களில் நடித்து வந்தார். பிக் பாஸ் சென்று வந்த பிறகு அவர் படவாய்ப்புக்காக காத்திருக்கிறார். இருப்பினும் பெரிய பட வாய்ப்புகள் வர வில்லை.

இந்நிலையில் பூர்ணிமா தற்போது ஷார்ட் உடையில் செம கிளாமர் ஆக போஸ் கொடுத்து போட்டோஷூட் எடுத்து இருக்கிறார்.

# கருப்பு பல்சர்

## திரைவிமர்சனம்




மிடில் க்ளாஸ் வாலிபரான அட்டகத்தி தினேஷ், ஆர்ஓ ப்யூரிபையர் வாட்டர் சப்ளை செய்து வருகிறார். திருமணத்திற்காக, மணமகள் தேவை என மேட்ரிமோனியலில் விளம்பரம் செய்கிறார்.

அப்படி, ரேஷ்மாவை சந்திக்கும் தினேஷ்க்கு அவரை பிடித்துப்போகவே இருவரும் பழகுகிறார்கள். இருவரும் காதலிக்கிறார்கள்.

காதலிக்கும்போது, தன்னிடம் கருப்பு நிற பல்சர் இருப்பதாக தினேஷ் கூற, அந்த பைக்கில் தன்னை அழைத்து செல்லும்படி ரேஷ்மா ஆசையாக கூறுகிறார்.

இதனால், தினேஷ் வேறு வழியின்றி பழைய கருப்பு பல்சர் ஒன்றை விலைக்கு வாங்குகிறார். ஆனால் அந்த பைக்கை வாங்கியதில் இருந்து தினேஷுக்கு பிரச்சனை மேல் பிரச்சனை வருகிறது. தன்னை சுற்றி அமானுஷ்ய விஷயங்கள் நடக்கின்றன.

அப்போது, இந்த பைக்கில் ஆவி புகுந்து இருப்பது தெரியவருகிறது. இதன்பிறகு, பைக்கில் அமானுஷ்ய சக்தி புகுந்தது எப்படி? தினேஷை துரத்த காரணம் என்ன? என்பதே படத்தின் மீதி கதை..

**நடிகர்கள்**

பட்ஜெட் போட்டு வாழும் இளைஞராக வரும் அட்டகத்தி தினேஷ், தனது வழக்கமான எதார்த்த நடிப்பில் இரு வேடங்களில் கலக்கி இருக்கிறார். அழகாக வந்து தனது கதாப்பாத்திரத்திற்கு கச்சிதமாக பொருந்தி இருக்கிறார் ரேஷ்மா. மன்சூர் அலிகான், மதுநிகா, சரவண சுப்பையா, கலையரன் கண்ணுசாமி உள்ளிட்டோரும் தங்களது பங்கை சரியாக செய்திருக்கிறார்கள்.

**இயக்கம்**

வழக்கமான கதை என்றாலும் திரைக்கதை எடுத்திருக்கும் விதத்தில் கூடுதலாக கவனம் செலுத்தி இருக்கலாம். பைக்கில் காளையின் ஆவி புகுந்தது வித்தியாசமான முயற்சி.

**இசை**


இன்பாவின் இசை படத்திற்கு பலம்

**ஒளிப்பதிவு**

பாஸ்கர் ஆறுமுகத்தின் ஒளிப்பதிவு படத்திற்கு கச்சிதம்.

ரேட்டிங்- 1.5/5

# ‘வாரணாசி’ ரிலீஸ் தேதி அறிவிப்பு!





இயக்குநர் ராஜமௌலி, நடிகர் மகேஷ் பாபு கூட்டணியில் பிரம்மாண்டமாக உருவாகி வரும் படம் வாரணாசி. இப்படத்தில் பிரியங்கா சோப்ரா, பிருத்விராஜ் சுகுமாரன் மற்றும் பிரகாஷ் ராஜ் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்து வருகின்றனர்.

ராஜமௌலியின் தந்தை விஜயேந்திர பிரசாத் படத்திற்கு கதை எழுதியுள்ள நிலையில், ஆஸ்கர் விருதுபெற்ற கீரவாணி படத்திற்கு இசையமைக்கிறார்.

படம் ரூ.1000 கோடி பட்ஜெட்டில் உருவாகி வருவதாக கூறப்படுகிறது. இந்நிலையில் இப்படம் அடுத்தாண்டு ஏப்ரல் மாதம் 7ஆம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. தமிழ் புத்தாண்டு மற்றும் உகாதி பண்டிகை காலத்தை ஒட்டி வெளியிடப்படுகிறது.

# மீண்டும் இணையும் மெகா ஹிட் கூட்டணி



நடிகர்கள் பிரபுதேவா, வடிவேலு கூட்டணியில் புதிதாக உருவாகி வரும் படத்திற்கு ‘BANG BANG’ எனப் பெயரிடப்பட்டுள்ளது. படத்தை சாம் ரோட்ரிகஸ் இயக்க, யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். படத்தின் தலைப்பு மற்றும் அறிவிப்பு புரோமோவை இயக்குநரும், நடிகருமான எஸ்.ஜே. சூர்யா வெளியிட்டுள்ளார்.

காதலன், மனதை திருடிவிட்டாய், ராசைய்யா, மிஸ்டர் ரோமியோ, லவ் பேர்ட்ஸ் மற்றும் எங்கள் அண்ணா போன்ற படங்களின் மூலம் 90ஸ்களில் ரசிகர்களை மகிழ்வித்த இந்த காமெடி கெமிஸ்ட்ரி கூட்டணி தற்போது மீண்டும் இணைந்துள்ளது ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத் தியுள்ளது.

மலையாளத்தில் வெளிவந்த Vrudhanmare Sookshikkuka என்கிற படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமானவர் அனன்யா. இவர் நாடோடிகள் படத்தின் மூலம் தமிழில் என்ட்ரி கொடுத்தார். இதை தொடர்ந்து எங்கேயும் எப்போதும் படத்தில் கதாநாயகியாக நடித்திருந்தார். தமிழ் மற்றும் மலையாளத்தில் பிரபலமான நடிகையாக இவர், இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருப்பார். இந்த நிலையில், இன்ஸ்டா பக்கத்தில் அனன்யா தற்போது வெளியிட்டுள்ள லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.



# “வித் லவ்” டிரெய்லர் வெளியானது

டூரிஸ்ட் ஃபேமிலி படத்தின் மூலம் பிரபலமானவர் இயக்குநர் அபிஷன் ஜீவிந்த். தற்போது வித் லவ் படம்மூலம் இவர் கதாநாயகனாக அறிமுகமாகிறார். இதில் ஜீவிந்த்க்கு ஜோடியாக அனஸ்வரா ராஜன் நடித்துள்ளார்.

இப்படத்தை ‘டூரிஸ்ட் ஃபேமிலி’, ‘லவ்வர்’ படங்களில் இணை இயக்குநராக பணியாற்றிய மதன் இயக்கியுள்ளார். MRP என்டர்டெயின்மெண்ட் தயாரிப்பில் ஷான் ரோல்டன் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

இப்படத்தின் டீசர், முதல் பாடல் எல்லாம் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றுள்ள நிலையில், படம் பிப்ரவரி 6ஆம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

படம் வெளியாக இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், வித் லவ் படத்தின் டிரெய்லர் வெளியாகியுள்ளது.



முனிஸ்வர் துணை
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்க அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots * Flats * House * Villa * Bungalows
* Farm Land * Ware Houses * Factory Sites * Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website | Real Estate Website | E. Commerce Website
Restaurant Website | Shopping Website | News Website
MLM Binary Website | MLM Level Website | MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY AT ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 - Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

WANTED MALE/FEMALE
SALES ASSISTANT
PREFERABLE IN & AROUND ALANDUR
9962258000
Since 1953 SLJ Sri Lakshmi Jewellery
ALANDUR, CHENNAI - 16.

WANTED
EXECUTIVES
Age Limit 40 Years
For Chennai, Tiruvallur, Chengalpattu
Attractive Salary Package, PF, ESI & Bonus with Allowances
999 BRAND
+91 893 999 7476
Email: 999lungies@kasz.in

WANTED
MARKETING HEAD REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஜூஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998

REQUIRED
Bank & Finance
LOAN CONSULTANCY
TELECALLER (F)
Age Below 30 | Fresh/Exp 2Yrs
Qual: +2 or Any Degree
Sal: 12 to 18K + Inc
West CIT Nagar, T.Nagar-35.
ct: 97907 88886

WANTED
Experienced candidate for Office Manager position.
Good salary offered.
Contact: 87544 55567
Email: requires2025@gmail.com






பெண்ணே நீ விழித்தெழு
இருளைக் கிழித்தெழு
அறியாமையைத் தகர்த்தெழு
அறிவியலை இழுத்தெழு
கண்ணீர் அருவிகள்
தொலைத்தெழு.......

அடிமைத் தனத்தை
உடைத்தெழு அன்பிற்கு அடி
பணிந்திடு.. வம்பிற்குத் தலை
நிமிர்ந்தெழு.......

தலைக் கனத்தை கைவிட்டு
நம்பிக்கையை கையில்
எடுத்து உயர்ந்த இடத்தில்
நிலைத்து நில்.....

அதட்டல் மிரட்டல் உருட்டல்
எல்லாம் புரட்டிப் போட்டு படிப்
படியாக படிப்பில்
உயர்ந்து நில் .......

ஏற்ற தாழ்வுகளையும்
முரண்பாடுகளையும்
மடக்கி கசக்கி சுறுட்டிப்
போட்டு மகளிராலும்
முடியும் என்று நிரூபித்து விடு
நல்ல செயலில்...............

நன்மைக்குத் தன்னடக்கம்,
நாவடக்கம் இவற்றைத்
துணையாக எடு ....
தீமைக்குச் சுட்டெரிக்கும் விழி
கொண்டு வெகுண்டு எழு ....

மனையாள மட்டுமே
மனையாள் என்ற தவறான
கறையை கரம் பிடித்தவன்
நெஞ்சில் இருந்து
துடைத்து தூக்கிப் போடு........

அன்பாலும் ஆதரவாலும்
எடுத்துக் கூறி வளைத்துப்
பிடி உன் பிடியில் கணவனை
மடி கொடுக்க மட்டும்
துணைவி இல்லை பிடி
கொடுக்கவும் என்று
புரியவை...

புன்னகையில் பெண் ஒரு
மலர் தென்றலாகும் போது
ஒரு மங்கை கொன்றலாக
தடவும் போது அவள்
ஒருநல்ல துணைவி பொறுமை
இழந்தால் புயலாக மாறும்
கண்ணகி என உணர வை
ஆண் ஆதிக்கம் கொண்ட
சிலருக்கு...

ஆணும் பெண்ணும் ஓர்
உயிரே பிறப்பும் இறப்பும்
ஒன்றே என்று உணரவை
ஆனால் ஆணவத்தில்
ஆட்டம் போடாதே பெண்ணே
அதைஉன் உள்ளத்தில்
இருந்து தூக்கிப் போடு
கண்ணே.....

பாரதி கண்ட கனவு
கலையாமல் சிலையாகாமல்
உயிர்த்தெழ வேண்டுமாயின்
நீ பாரதிப் பெண்ணாக
விழித்தெழ வேண்டும்.....

### எண்ணித் துணிக கர்மம் ...

சிந்தனையில் தெளிவு
இருந்தால் நல்ல பாதை
தெரியும் அதிவேகம் அவல
நிலைக்கு தள்ளிவிடும்
நல்ல சிந்தனை எண்ணி
அதையே விதையாக
விதைத்து விட்டால்
விருட்சமாக வளரும்
அந்த விருட்சத்தில்
அமர்தல் நிம்மதி அன்றோ
ஒரு நிமிடத் தடுமாற்றம்
வாழ்க்கையை நிலை
கொள்ள வைக்கும்
தடுமாற்றத்தில்
தெளிவு பெற அறிவு
பயன்படும் செய்யும் செயலில்
துணிவு இருந்தால் வெற்றி
உனதே அதுவே காவியம்
ஆகி உனக்கு வெளிச்சப்
பாதை காட்டும்
நல்ல சிந்தனையை
எண்ணிஅதையே
கர்மம் என்று செய்து
முடி...



**உஷா முத்துராமன்**



### பாதையெல்லாம் சோலையாகும்

விழிகள் மூடிப்படுத்திருந்தால் விடியல் விழிக்குத்தெரியாது
விழித்த விழிக்கே இருள்விரட்டி விடிந்த ஒளியின் எழில்தெரியும்
வழியா வியர்வை உடலிருந்தால் வாழ்க்கை இருளில் போய்முடியும்
பொழியும் வியர்வை உடலுக்கே பொலியும் அழகு வாழ்வமையும்!

விரல்கள் பத்தும் அருங்கருவி வீணாய் வைத்தால்
வெறுங்கருவி விரல்கள் இயங்கும் திறன்பெற்றால்
வியக்கும் மாற்றம் உனில்விளையும் வரங்கள் எல்லாம்
கனவுகளில் வாய்க்கும் அற்புத மந்திரங்கள் விரல்கள்
ஒன்றே இந்நிலத்தில் விளைக்கும் அற்புத சரித்திரங்கள் !

காலை மடக்கி அமர்ந்திருந்தால் கடந்து போமோ
பாதையினை காலை மாலை மாறிமாறி கடந்து செல்லும்
உனைவிட்டே நாளை என்று கடத்தாமல் நடக்கக்காலை
எடுத்து வைத்தால் பாலை மணலும் பூக்களாகும்
பாதையெல்லாம் சோலையாகும் !



வெல்லும் முயற்சி இல்லாமல் வெற்றி
உன்னில் விளையாது புல்லும் உனக்கு
வில்லாகும் புதிய முயற்சி உனக்கிருந்தால்
அல்லும் பகலும் சோராமல் ஆற்றும் உறுதி
தளராமல் சொல்லும் வியர்வை முத்துகளால்
சொர்ணம் போல வாழ்வொளிரும் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



### அம்புவிழிகள்

காலையில் கண்விழித்து கனிவுடல் குளிப்பாட்டி சேலையில்
புதிதொன்று செழிப்புடன் சேரக்கட்டி ஈரத்தலை துவட்டி
எண்ணெய் சிறிது பூசி இரட்டைப் பின்னலிட்டு இமைகளில்
மைதீட்டி மூன்றாம் பிறை போல முல்லைப் பூ சரம் மாட்டி
வட்டமுக நெற்றியிலே வட்ட நிலா பொட்டிட்டு முற்றத்தில்
நடந்தபடி மூன்று இட்லி தின்று தீர்த்து கல்லூரிப்
புத்தகங்களைக் கச்சிதமாய் அடுக்கி ஏந்தி
அடுப்பறையில் இருக்கும் அம்மாவுக்கு கை
அசைத்து தென்றலாய் நீ வருவாய் தெருவில்
குளிர்ச்சி பெறும் அங்கு வருவோரின் அன்பு
விழிகள் உன்னை கண்டு அழகென உளறிப்
போகும் அன்றோ!



**எஸ். சந்திரசேகரன் அமுதா**
செஞ்சிக்கோட்டை

### ஹைக்கூ !

கவலை இல்லை
பாராட்டைப் பற்றி குயில் !

வருத்தமில்லை
கருமை பற்றி காகம் !

கர்வம் இல்லை
வெண்மை பற்றி புறா !

விடிந்து வெகுநேரமாகி
கூவியது சோம்பேறி சேவல் !

வானில் வட்டமிடும்
பருந்து பயத்தில் குஞ்சுகள் !

கிளை வெட்ட வெட்ட
உயர்ந்தது தென்னை !

அறிந்ததில்லை இளநீரின்
சுவை தென்னை !

இரண்டையும் காணலாம்
என்றாவது ஒருநாள்
சூரியன் சந்திரன் !

மீண்டும் துளிர்த்தது
பட்டமரம் மழை !

வகைகள் எத்தனை
வரையறுக்க முடியாது
மலர்கள் !

ரொட்டி யார் போட்டாலும்
வாலாட்டும் நாய் !

குறைக்கும் நாய்
கடிக்காது பொய் கடிக்கும் !

திரைகடல் ஓடி
திரவியம் தேடினால்
சுடுகிறான் சிங்களன் !

வேற்றுமையில் ஒற்றுமை
இந்தியா மட்டுமல்ல
இணைகளும்தான் !

உள்ளே அனுமதி இல்லை
மதிப்பு உண்டு காலணி !

வேண்டாம் சூடம்
சுற்றுச்சூழல் மாசு !

பெயருக்கு இல்லாமல்
காரணப் பெயராகட்டும்
அறங்காவலர் !

அறம் செய்ய விரும்பினால்
போதாது செய்க அறம் !

சொல் செயல் சிந்தனை
அறம் இருந்தால்
சிறக்கும் வாழ்க்கை !

குப்பை கூட நிலத்திற்கு
உரமாகும் மனிதன் ?

மக்காத மக்கும் குப்பை
வேறுபாடு தெரியாத
மக்காக மக்கள் !

நோயின்றி நலமாக வாழ
நடைப்பயிற்சி !

உலகில் யாருமில்லை
எல்லாம் பொருந்திய இணை !

சாதியில் இல்லை
எண்ணத்தில் உள்ளது
உயர்வு தாழ்வு !

விட்டுக்கொடுங்கள்
ஒழியும் வன்முறை
நிலவும் அமைதி !

உடைத்தே போடுகின்றனர்
நடுத்தர மக்கள் முந்திரி !

கடைசித் திருமணம்
உணர்த்தியது
கடலைமிட்டாய் !

உடைந்து இருந்தால் கோபம்
உடைத்து உண்ணும்
அப்பளம் !

பெண்ணிற்கு மட்டும்
கற்பிக்கப்பட்ட கற்பனை
கற்பு!
------------------

நடிப்பில் வென்றனர்
நடிகர் திலகத்தை
அரசியல்வாதிகள் !

வந்தார் நேர்மையான
அரசியல்வாதி
கண்டது கனவு !

பேசினார் பொதுநலம்
அருகில் தேர்தல் !

மனிதனாகச் சாதிக்க
விலக்கு மது !

கேளிக்கை அல்ல
கேடிகளுக்கானது மது !

மகிழ்ச்சி என்று தொடங்கி
துன்பத்தில் முடியும் மது !

வன்முறை வளர்க்கும்
நட்பை அழிக்கும் மது !

வாரம் ஒரு நாள் தொடக்கம்
தினமும் என்றாகும் மது !

ஓசியில் தொடங்கி
திருட்டில் முடியும் மது !

வெறும் வாசகமல்ல
முற்றிலும் உண்மை
குடி குடி கெடுக்கும் !

போராடித் தோற்றன
மரங்கள் புயல் !

வளமான
மனிதாபிமானம் ஏழை வீட்டில்!
உணரவில்லை தன் பலம்
பிச்சையெடுக்கும் யானை !

மரம் விட்டு உதிர்ந்த
கவலையால்
இலை சருகானது !

பார்வையாளர் கூட்டிட
பொய் பேசுகின்றன
தொலைக்காட்சிகள்.



**கவிஞர்
இரா.இரவி!**

ஒரு முறைதான் என் மீது
அமர்ந்து விட்டு போனாய் ...
என் நிறம் மாறிப் போனது ..
இப்போதெல்லாம்
கவலைகள் சூழும்போது
எனக்கு வண்ண வண்ண
இறக்கைகள் முளைத்து
விடுகின்றன
எத்தனை தூரம்
வேண்டுமானாலும்
சிறகடித்து பறக்க
முடிகிறது..
விண்ணில் என்
பயணத்தில் வண்ணங்கள்
வாரி இறைத்து
திரும்புகிறேன் ..
தரைக்கு வந்ததும்
பதிவு செய்கிறேன்
புது புதுக் கவிதைகளை..
உன்னால் தான்
அது சாத்தியமானது..
அந்த ஒரு முறை நீ
என் மீது வந்து
அமர்ந்து விட்டுப்
போனதிலிருந்து..!



**ரிஷபன்**


### உறக்கம் !

நிம்மதியான உறக்கம்
கிடைக்கும் போதெல்லாம்
நம்மை எழுப்பி விடுவதில்
வீட்டில் மனைவியும்
பேருந்தில்
நடத்துனரும்
முக்கிய
பங்காற்று
கின்றனர்!



**எம்.பி.
தினேஷ்.**
கோவை.




## நூல் விமர்சனம்

நூலின் பெயர்: யுக புருஷன்
ஆசிரியர்: ஜே.செல்லம் ஜெரினா
வெளியீடு: வானதி பதிப்பகம்
விலை : ₹150
தொடர்புக்கு: 044– 2434 2810/2431 0769

பேனாவுக்கு பதிலாக குறுவாளால் எழுதப்பட்ட நாவல் என்கிறார் எழுத்தாளர் வேதா கோபாலன் தன் அணிந்துரையில்...

ஜெரினாவின் எட்டாவது வரலாற்று நாவலாம், இது எட்டாத புகழைத் தரும் என்றால் மிகையில்லை.

மொகலாய சாம்ராஜ்யத்தை எதிர்த்து நின்ற ஒரே ரஜபுத்திர வீரன் மேவார் ராணா பிரதாப் சிங். அவன் சொல்வதை புரிந்து கொள்ளும் உற்ற துணையான "சேதக்" எனும் குதிரை உடனான சம்பாஷணையில் கதை ஆரம்பமாகிறது.

அந்தக் காலத்தில் பஜாஜ் சேட்டக் என ஸ்கூட்டருக்கு " சேதக்" என்ற இந்தக் குதிரையின் நினைவாகத்தான் பெயரிட்டார்களோ எனத் தோன்றியது.

துங்கா தேவி, இந்தர்ஜா, சந்தன் சிங் என கற்பனையும் நிஜ மாந்தர்களுடன் உலவ விட்டுள்ளார்.

அலைகள் ஓய்வதில்லை படத்தில், " உனக்கு மட்டும் கேட்கும் எனது உயிர் உருகும் சத்தம்" என இடம் பெற்ற பாடல் வரிகள் போல , துங்கா மரிக்கும் போது, இப்படி உயிரைக் கொடுக்க , நான் அப்படி உனக்கு என்ன செய்தேன் பெண்ணே என ராணா கேட்க, " இப்படிப் பேசாதீர்கள். இதோ! இந்த நொடி போதுமே! உங்கள் உள்ளம் எனக்காக உருகும் ஓசை கேட்கிறதே! " என்கிறாள்.

கெடுவான் கேடு நினைப்பான் என உணர்த்தும் வேங்கய்யன் மரணம்.

இறக்கும் தருவாயிலும் அக்பருக்கு ஒரு போதும் அடிபணியக் கூடாது, அரியணை ஏறப்போகும் மகன் அமர்சிங்கிங்கிற்கு, பாமாஷா உள்ளிட்டோர் துணை நிற்க வேண்டுமெனச் சொல்கிறார். அமர்சிங்கும் 17 முறை போரிட்டதாக பின் குறிப்பு சொல்கிறது. விறுவிறுப்பான நடையில் 15 அத்தியாயங்களில் ஒரு சரித்திர நாவல். படிக்கும் எல்லோருக்கும் நிச்சயமாகப் பிடிக்கும்.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

மயங்காதே...
என்னை மயக்காதே
பெண்ணே காதல் நீரில்
நனையவச்ச...சேலை
முந்தானையில்
தலை துவட்டி விட்ட....!
பார்வையாலே வசிகம்பன்னி..
பக்குவமா என்னை
பதுக்கி வச்ச....!

உன் அழகில் மூழ்கி
போனேன்... அப்படியே
மயங்கி போனேன்....!

மாவீரனா இருந்த என்னை...
மங்குனியா ஆக்கி புட்ட...!
சிரிச்சி சிரிச்சி என்னை உன்
சிறையில் அடைச்சி புட்ட....!

உன் அழகில் உருகி
போனேன்....
உனிடம் மட்டும் நான்
அடங்கி போனேன்....!

பாம்பாட்டியா நீ இருந்து
பதுங்கு குழியில் பதுக்கி
வச்ச...!

வருசம் பல ஆனாலும்
வஞ்சி மகள் என்னை நீ
மறைச்சி வச்ச...!

மது குடித்து மயங்கியவன்
காலை தெளிந்திடுவான்...
உன் மாங்கனியை கடிச்சவன்
மயக்கத்திலிருந்து
எப்போதான்
விடுபடுவான்....!!



**பொன்.
கருணச்**
நவி மும்பை



### நல்லதோர் வீணை!

நல்லதோர் வீணை நம் குழந்தை நலம் கெட
புழுதியில் எரிவது முறையோ?
பிறந்தது பெண் குழந்தை என்று தெரிந்தால்
பேசாமல் தெருவில் வைத்து விடும் அவலம்!
பிஞ்சுக் குழந்தை செய்திட்ட குற்றமென்ன ?
பிறந்த குழந்தைக்குத் தண்டனை தரலாமோ?
குழந்தையில் ஆண் என்றால் மதிப்பதும்
குழந்தை பெண் என்றால் மதிக்காததும் ஏனோ?
கணினியுகத்திலும் நாட்டில் இன்னும் சிலர் காட்டு
மிராண்டிகளாக நடப்பது தான் சரியோ? பெண்ணுரிமை பேச்சு
அளவிலேயே உள்ளது
பிறக்க உரிமை இல்லாத அவல நிலையே! ஆணை வரவென்றும்
பெண்ணை செலவென்றும் அறிவிலித்தனமாகப் பேசுவதை
முதலில் நிறுத்துங்கள்! கள்ளிப்பால் ஊற்றும் கொடுமையை
ஒழியுங்கள் கனிவோடு பெண் குழந்தையை வளருங்கள்!
நெல்மணிகளிட்டு கொலை செய்வது நிறுத்துங்கள்
நிலத்திற்கு வந்த மாமணியாக மதித்து வளருங்கள்!
பிறந்த பெண் குழந்தையிடம் பாசம் காட்டுங்கள்
பேதலிக்காது பெருமையோடு மகளை வளருங்கள்!
பெண் இனத்தின் சாதனைகள் சொல்லில் அடங்காது
பெருமைமிகு பெண் இனத்தை வளர விடுங்கள்!
ஆணாதிக்கம் சிந்தனைகளை அழித்து விடுங்கள்
ஆண், பெண் சமம் நினைவில் கொள்ளுங்கள்!
மூச்சு உள்ளவரை பாசம் காட்டுபவள் மகள்
மோசம் செய்யாது நேசம் வைப்பவள் மகள்!
வயிற்றிலிருந்து வந்த தேவதை மகள் வையகத்தின் மகிழ்வை
உணர்த்துபவள் மகள்!
வாழ்வாங்கு வாழ்ந்திட வழி செய்பவள் மகள்
வாய்விட்டுச் சிரித்து கவலை களைபவள் மகள்!
நல்லதோர் வீணை நம் பெண்குழந்தை
நாளும் போற்றி சீராட்டி வளர்த்திடுவோம்.

**கவிஞர் இரா .இரவி !**



### அகல்விளக்கு

இருளகற்றி ஒளி தரும்

களிமண் தாங்கி
கை வளைவுக்குக்
கட்டுப்பட்டு
கண்ணிறைக்கும் வடிவமாக
கனலுள் வெந்து
கடைகளில் வீற்றிருக்கும்

வண்ணம் ஏற்று
வடிவில் மாறும் சில நேரம்
எண்ணெய் வாங்கி
எரி திரி வழியே ஊடுருவி
எழிலாய் ஒளி நல்கும்

இருக்கும் இடம் நிறைக்கும்
எண்ணெய் கிடைத்ததை
ஏற்கும் பஞ்சுதிரி
தன்னை உருக்கும் தீக்குச்சி

இருப்பதை இழந்தும்
கிடைத்ததை ஏற்றும்
சூழலின் பிடியை நாம் பற்ற
சூழும் இருள் போகும்
என்பதற்குச் சான்று

பரவிக் கிடக்கும் இருளும்
பட்டொளி வீசும்

அறியாமை இருள் நீங்க
அறிவெனும் அகல் விளக்கு
அனுபவத்தில் வழிகாட்டும்

கற்கும் கல்வி மடமை
போக்கும் பெரியோர் சொல்
பேதமை நீக்கும்

அகல் விளக்கின் ஒளியாய்
அகிலத்தில்
நாம் மிளிர
அறியாததை
அறிவோம்
அறிந்ததைப்
பகர்வோம்.



**தமிழ்நிலா**






தினம் தினம் எப்பொழுது மலர்வாய்,எப்பொழுது மலர்வாய் என்று விழித்தவுடன் வந்து என்னை கேட்டுக் கொண்டிருப்பாயே?இன்று மொட்டாக இருந்த நான் மலர்ந்து விட்டேன். விரைந்து வந்து என்னை உன் கூந்தலில் சூட்டிக் கொள்வாயே,என் கண்ணின் மணியே!

உன் கூந்தலில் வாழ்வதற்காகவே நான்
உயிர்பிழைத்தேனே....!
இப்படிக்கு,
உன் நினைவில் வாழும்
ரோஜா.

**வே. சுபலட்சுமி,** அரூர்

## தமிழர்களும் தமிழும்

தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா
என்றுரைத்த காலம் எங்கே?

தமிழை மறைமுகமாய் இங்கே
தள்ளும் கல்விக் கூடங்கள்
எத்தனை? தாய்மார்கள் தான்
எத்தனை? எத்தனை? ?
தலைகுனிவு தானே
வருகிறதே! நான் வளர்ப்பேன்
தமிழை என்றே நாள்தோறும்
சூளுரை தரும் நல்லதம்பி
தமிழ் வீட்டிலே நஞ்சுகுஞ்சு
யெல்லாம் கற்பதோ
நாக்கினிலே படாத
ஆங்கிலமும்! தலைமையிடத்து
மொழி இந்தியுமே!
தொன்று தொட்டு வந்தாலும்
தொன்மை யானதே
என்றாலும் தமிழை தத்தளிக்க
படகிலே தனியாய் மிதக்க
விடும்காலமே இன்றே!

தம் மொழியை காக்கவே
பிற மொழி கற்கா சீன
நாட்டின் பற்றுக்கூட சிங்கார
தமிழனிடம் இல்லையே!
என் மொழி தமிழென
ஏட்டினில் எழுதி
காண்பித்தாலும்
ஏனோ விளம்பரப் பலகை கூட
பிறமொழி கலப்படமே!
இங்கே!
அங்காடியின்
பெயரும் ஏனோ
அரைகுறை
தமிழே! அன்றாட
காய்ச்சியானாலும்
அவனோ மகனை
சேர்த்தானே
ஆங்கிலம் பள்ளியிலே!

ஆர்வமில்லா தமிழினமே
ஆங்கிலமும் வேண்டுமே
ஆனாலும் அது
தமிழ்மொழியை முழுவதுமாய்
மறைக்கும் அமாவாசை
மதியாய் வேண்டாமே!

மங்காமல் ஒளிரும்
கதிரவனாய் மக்கள்
மத்தியில் வேண்டுமே
மங்கா புகழ் தமிழ்!

விளக்கும் திரியும் போல
கணினியும்
இணையதளமும் போல
வெற்றிலையும் பாக்கும் போல
தமிழும் தமிழனும் என்றும்
தனியே பிரியாது வேண்டுமே!

நயவஞ்சகமாய் நசுக்கும்
தமிழை நாமெல்லாம்
தேரோட்டியாய்
தழைத்திட செய்திட
வேண்டுமே!

உளியாலே சிற்பம் அழகு!
உப்பாலே உணவு அழகு!
நற்சொல் பேசுவதே நாக்கிற்கு
அழகு! நம்மாலே தமிழுக்கு
அழகு! நாடே போற்ற

நல்லதமிழை நயமாய்
காப்போமே!

நாள்தோறும் காப்போமே!
நற்றமிழை! செந்தமிழை!

**பா.கலைமகள்,**
விழுப்புரம்.



## விருந்து வைப்போம்

தை மாத பனியடி
தரையெல்லாம் நடுங்குதடி
பனிக்காற்று பலமாக வீசுதடி
பனிக் காற்று பலமாக வீசுதடி
வீட்டில்கணப்பு எரிந்த காலம்
இதமாக இருந்ததடி

மரங்களை வெட்டி
இயற்கையை பகைத்தோம்
நாசமாகி போனது மண்
சுவரும் கூரை வீடும் மாறி
மாட மாளிகை எழுந்தது
பரம்பரை தானியத்தை
இழந்தோம்

காலநடை செல்வத்தைபறி
கொடுத்தோம் பாலும் மோரும்
தயிரும்வெண்ணையும்
நாம் இழந்தோம் அத்தை
மகனையும் மாமன்
மகளையும் மணந்த
காலம் மாறி

போச்சு பண்பாடும்
மாறி போச்சுசொந்தங்
கள் சுழி மறைந்து

போச்சு தேரை உறவாகுமா
தென்னை மரத்தின் நிழலா
ஆகுமாபாடி உறவாகுமா
பனை மரத்து
நிழல் ஆகுமா வினாவாக
கேட்டார் பழமொழி
உறவுகள் பிரிந்து போயி
உற்றாரை இழந்து போனோம்
நாடகமே நடக்க நடக்கிறது
உண்மையாகிறது

தமிழரின் விருந்து விருதா
ஆகி விட்டது பெயர்
மாறிவிட்டது பந்தியை விருந்த
என்கின்றான் படுபாவிகள்
மாற்றம் ஏமாற்றம் முன்னோர்
முறைகள் மறைந்து

பழந்தமிழர் வாழ்வுக்கு
திரும்புவோம் உறவில்
மணப்போம் விருந்து
வைத்து உறவினர்
அழைப்போம்வைப்போம்
பண்பாட்டைபாதுகாப்போம்.
வாரீர் வாரீர்

**பேராசிரியர் முனைவர்**
**வேலாயுதம் பெரியசாமி**
சேலம்



## பரிமாணம்...

சில்லென்ற சிறுதூரலாகவும்...

செல்கள் குதுகலிக்கும்...
குளிர் தென்றலாகவும்...
உற்சாகம் ஊட்டிய உன்
நினைவுகள் தான்...

அத்தியாவசிய நேரத்தில்...
சக்தி இழந்த...அலைபேசியின்

சேமிப்புக்
கலம் போல..
திண்டாட்டம்
போட வைத்து
விடுகிறது... நீ
தர்ணா புரியும்
தருணங்களில்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## கவனம் தேவை...

இயற்கை வெளியெங்கும்...
பசுமை..

பலவண்ண மலர்கள்
நிறங்கள்.. செழுமை...

வெள்ளை உடை ...மனிதர்கள்
உலாவரும்.... பூமி...

கறுப்பு எண்ணங்கள்
உள்ளிருக்கும்...கவனி...

பசுமை வழிச் சாலை...அல்ல...
வாழ்க்கை...

முள்படுக்கைகளையும்..
முன்வந்து அளிக்கும்...
வேடிக்கை...

பாதையெங்கும் பூப்பூக்கும்...

பல வண்ணங்களில் ..கவலை
நாகங்கள்.. ஒளிந்திருக்கும்...

மாயவலை உன்முன்னே...
மிக கவனம்... கண்முன்னே...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## கவனம் சிதைக்கும்

ஆற்றுக் கரையோரம்
அழகான வயல்வெளி
சேற்றுக் கறையாகி
சேர்ந்த உடலெல்லாம்
மழைஅதிகம் பொழிந்து
வயலைப் பாழாக்க
களையறுக்கும் அரிவாள்
கையில் கொண்டே
கவனம் சிதைக்கும்
கலையான சிரிப்பு
புவனம் காப்பதே
எங்கள் உழைப்பு

**வைரமணி** , சென்னை



## மதுவின் மனசாட்சி !

இறந்தவர் வீட்டில் சென்ற
பிறகு சந்தடி சாக்கில்
கிடைக்கும் மதுவின்
போதையில் அழுகையும்
சோகமும்...
அடக்க முடியாமல்
வெளிவருவது போலதான் !

திருமண விழாவில் சென்று
கிடைக்கும் மது போதையில்...
சந்தோஷத்துடன் ஆடல்,

பாடலுடன்
கால்கள்
தானாக
நடனமாடுகை
யில்!
மதுவிற்கும்
இருவேறு
மனசாட்சி உண்டோ ! என்ற
கேள்வி எழச் செய்கிறது .

**எம்.பி.தினேஷ்,** கோவை

1.ஊமை ஒரு கனவுகண்டால்
பேச்சுப் போட்டியில் முதல்
பரிசு வாங்குவது போல

2. சீனி சிறியதுதான் ஆனால்
அது தரும் இனிப்பு பெரியது
மிளகு சிறியது தான் ஆனால்
அது தரும் காரம் பெரியது
உங்கள் வாழ்க்கையில்
சின்ன சின்ன
விஷயங்களுக்கு
முக்கியத்துவம் தாருங்கள்
அது உங்களுக்கு அழகான
வாழ்வை தரும்


3. பொழுதுபோக்கே
இல்லாமல் உழைப்பதும்தவறு
உழைப்பே இல்லாமல்
பொழுது போக்குவதும் தவறு

4.நாம் இல்லாத ஒரு
இடத்தில் கூட நமக்கு
மரியாதை கிடைக்கும்
என்றால் அதுவே நாம்
வாழ்ந்ததற்கான அடையாளம்

5. நிலநடுக்கம் என்றால்
ராணுவத்தை கூப்பிடுகிறோம்
வெள்ள அபாயம் என்றால்
ராணுவத்தை கூப்பிடுகிறோம்
குழந்தை ஆழ்துளை
கிணற்றில் விழுந்து விட்டால்
ராணுவத்தை கூப்பிடுகிறோம்
ஆனால் திறப்பு விழா சுப

நிகழ்ச்சிகள்
பண்டிகை
காலத்தில்
நடிகைகளை
கூப்பிடுகிறோம்

**நடேஷ்**
**கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## அவள்

விரல்களை மீட்டுகிறேன்
வீணை எங்கிருந்து வந்தது?
கண்களை நோக்குகிறேன்
காந்தம் எங்கிருந்து
இழுக்கிறது? கூந்தலை
முகர்கிறேன் கூடை மலரைக்
கவிழ்த்தது யார்?
சிரிக்கத்தான் செய்தாய்
கிண்கிணிகள்

குலுங்கியதேன்?
உன்னோடுதான்
நிற்கிறேன்
பூங்காவினுள்
எப்போது
வந்தேன்?

**கே. பி.**
**ஜனார்த்தனன்**

## வரி

வரி நம் வாழ்வின் நிழல்.
வருமானத்தோடு நம்முடன்
அதுவும் சேர்ந்து நடக்கும்.
வீதிகள், பாலங்கள்
கட்டமைக்க அதன் பங்காக
வரி மறைந்து பேசும்.
சில நேரங்களில் நமக்குச்
சுமையாகத் தோன்றும்.
ஆனால் சமுதாயம் முன்னேற
வரி மூச்சாக மாறுகிறது.
நியாயமான வசூலானால்
அது நமக்கு இடர்ப்பாடு
எனினும் நாட்டுக்கு வலிமை
சேர்க்கும். ஆனால் அதுவே
அநியாயமானால் ஏற்றுக்
கொள்ள முடியாமல் மனது
மறுக்கும். வலியைத் தரும்.
கொடுத்து வாழும் பண்பின்
அடையாளமே வரி.
நாட்டின் எதிர்கால
முதலீடு. வளர்ச்சிக்கும்
வழி வகுக்கும். முடி ஆட்சி
காலமான சேர, சோழ
பாண்டியர் காலத்தில்
இருந்தே வரிவசூல்
நடைமுறையில் இருந்து
வருகிறது. நெல் மணிகள்
போன்ற தானிய வகைகள்
கூட மூன்றில் ஒரு பங்கு
வரியாகப் பெறப்பட்டன.
பொதுமக்களிடம் இருந்து
பெறப்படும் வரிகள் பல்வேறு
வடிவங்களில் இன்றளவும்
தொடர்கின்றன.

## உதவி புரிந்திட...

வெட்டுவதற்கு
கோடாரி வேண்டும்
அந்த கோடாரிக்கு...
கைப்பிடி போட...
துண்டு மரம் வேண்டும்.

அந்த மரம் இருந்தால்தான்...
எவ்வளவு பெரிய
மரம்மாக இருந்தாலும்...
வெட்டிட.. முடியும்.

ஒரு மனிதன் வாழ்ந்திட
இன்னொரு.. மனிதன் உதவி
எப்பொழுதும் தேவை
அதனால்.. தான் கடவுள்
கணவன்.. மனைவி உறவு
அண்ணன்.. தம்பி உறவு
அக்கா.. தங்கை உறவை
படைத்துள்ளான்.. உலகில்.

**சுரேஷ்,** திருச்சிற்றம்பலம்



## குழந்தைகளைக் கவரும் வண்ணங்கள்!

வண்ண வண்ணப்
பொருட்கள் கவர்ந்திடும்
கண்களை இழுத்துத்
தொட்டிட வைத்திடும்
சின்னக் குழந்தையும்
குதித்து மகிழ்ந்திடும்
புன்னகை மலர்ந்து பிடித்து
இழுத்திடும் !!

## காதல் கனிந்த திருமணம் !!

பார்த்த நாள்முதலாய்க்
காதல் கொண்டோமே
சேர்ந்தே பள்ளி முதல்நாமும்
படித்தோமே

பழகியே அன்பை இருவரும்
வளர்த்தோமே நிழல்போல்
நீயும் என்னுடன் வந்தாயே

கல்லூரிக் காலமும் இனிதே
கழிந்ததே நல்ல நமது
பெற்றோர்கள் நம்வாழ்வு

சிறந்திடவே சிந்தித்து
ஆவன செய்தனரே
பறப்போமா இறக்கைக்
கட்டிப் பார்முழுக்க

கல்யாண
நாளைப்
பார்க்கச்
சொல்லலாமா
இறையருள்
என்றும்
பெற்று வாழ்வோமே !!

**சண்முக சுப்பிரமணியன்**
திருநெல்வேலி

## பிச்சைக்காரன் கனவு

பகலில் கையேந்தும் அவன்
இரவில் கனவுலக மன்னன்!

கனவுக்குள் நுழைந்தவுடன்
கட்டுப்பாடுகள் இல்லை!
ஐந்து நட்சத்திர விடுதி முன்
ஆடி காரில் இறங்குவான்!

பிளேட் நிறைக்கும்
அசைவ உணவை
ஆசை தீர உண்ணுவான்!

அடுத்து வரும்வெயிட்டருக்கு
ஆயிரத்தை டிப்ஸாக்குவான்!
நிஜத்தில் காசு இல்லாதவன்
கனவில் காசோலை
வீசுவான்!

ரேஷன் கார்டு இல்லாதவன்
கிரெடிட் கார்டைத்
தேய்ப்பான்!
கிழிந்த சட்டைக்காரன்
கோட்சூட்டில் மிளிர்வான்!

கப்பலுண்டு அவன் பெயரில்
கடல்மாதா ஃபேக்டரி...
அலைகளெல்லாம்
வேலைக்காரர்கள்!

காலையில் விழித்ததும்
மீண்டும் தரை, மீண்டும் கை
பழைய சாக்கு,
பழைய பாத்திரம்!

ஆனால் கண்களில்

இன்னும்
மிச்சமாய்
கடல்
வாசனை!

**முகில்**
**தினகரன்**
கோயமுத்தூர்



உன்னை மட்டும்
கண்களால் காணாமல்
இருந்திருந்தால்
அந்த காதல் காணாமலே
போயிருக்கும்!

உன்னை பற்றிய கனவுகள்
கலையாமல் மட்டுமல்ல
இன்னும் நனையாமலும் தான்
கிடக்கின்றன!

மறதி மிகப்பெரிய வரம்
ஏனோ உன்னை மறக்க
முடியாமல் தவிக்கும்
மரமண்டைக்கு
கடைசி வரை
புரிவதேயில்லை

நான் அழகா அந்த
நிலவு அழகா என கேள்வி
கேட்கிறாய் ?
நீயிருக்கும் போது அந்த
நிலவு எப்படி அழகாகும்!

நிறைய காதல் கனவுகள்
கண்டேன் என்றோ ஒரு நாள்
நினைத்தது போல
மாற்றம் வருமென
எண்ணினேன் ஏனோ
ஏமாற்றம் மட்டுமே
பரிசாய் கிடைத்தது!


சீக்கிரம் அந்த கடற்கரையை
விட்டு தூரப் போ இதுவரை
தீர்க்காத காதலை
தீர்த்து கொள்ள போகிறது
அந்த கடலலைகள்!

அந்த கடலலைகள்
என்ன புண்ணியம்
செய்ததோ?
உன் பாதம் தொட!

செந்தாமரையை கண்ட பின்
வெண் தாமரையை
காதலிக்க மனமில்லை!


எல்லா காதலும்
தொடக்கத்தில்
இனிக்க தான் செய்கிறது
ஏனோ முடிவு மட்டும்
கொஞ்சம் கசப்பாய் தான்
இருக்கிறது !

**லி.நௌஷாத் கான்**



## கம்மல்

ஜிமிக்கி:
பெயர் கூறிய நொடி
முதல்– கண் கூட இமைக்க
மறுக்கிறது !!

பேராபத்தும் சரி பெருமன்பும்
சரி– இவளின் நடனத்தில்
மயங்கி

கிறங்கி போகிறது!!!–
அரிதாரங்கள்

பூசாமல்– ஒப்பனைகள்
இல்லாது பேரழகியாக
வலம் வர

இவளின் துணை போதுமே!!–
கட்டியவனை

சொக்க வைக்கும் மாந்திரீகம்
தெரிந்த இவள் தான் –
அவனின் தாபத்தில் உள்ள
கோபத்தையும்


கோபத்தில்
உள்ள
குழந்தையையும்
காண்கிறாள்!!!
நன்றி

**பானுஸ்ரீ**
பாண்டிச்சேரி



## செய்தித்தாள்களின் சீர்மை!

நேரிசை வெண்பா!
இந்திய செய்தித்தாள்
ஈடிலாத் தந்தையாம்

விந்தையாம் வீறாம்
அகஸ்டசே சிந்தையில்

செய்தித்தாள் தோன்றியே
சீர்மையாய்க் கண்டாரே

நெய்மணக்க
வாழ்த்துவோம் நேர்ந்து!

மக்களை மேம்படுத்த
மாண்புடன் ஊக்குவிக்க

தக்கநல் செய்திகளைத்
தாங்கியே.அக்கறையாய்

காணவும் கற்கவும்
வண்ணமயச் செய்தித்தாள்
பேணலாம் என்றுமே பீடு!

## புதிர்போடு!

அறுசீர் மண்டிலம்

மூளைத் திறனை
மேம்படுத்த மூளை நன்கு
வேலை செய்ய ஆளும்
புதிர்கள் தோன்றினவே
அழகுக்குறுக்கெழுத்தும்தான்!
நாளும் அறிவைப்
பெருக்கிடவே நன்மை
யாவும்
பெருகிடவே காலம்
என்னும்
பொழுதினையே
கழிக்க உதவும்
புதிர்களெலாம்!
அறிவுத் திறனை அதிகரிக்க
அழகாய்க்குறுக்கெழுத்துதவும்!
திறமை தன்னை
வெளிப்படுத்த தேர்ந்த
புதிர்கள் கண்டிடுமே!
உறவும் நட்பும் ஒன்றாகி
உணர்வு பூர்வ அன்பாகும்!
மறதி தன்னை மூழ்கடித்தே
மாண்பாய் ஆற்றல்
ஓங்கிடுமே!

## ஞாயிறு

நிலைமண்டில ஆசிரியப்பா!


கதிரவ அமைப்பில்
காணும் விண்மீன்
அதிக வெப்பம்
அழகாய்க் கொண்டதே!

காந்தப் புலத்தைக்
கண்ணாய்க் காட்டும்
ஏந்தும் ஒளியை
எழிலாய்த் தானே!

மஞ்சள் குறுமீன் மாண்பாய்
அழைப்பர்! பஞ்ச மின்றிப்
பருப்பொரு ளாகும்!

நாயிறு என்பதே ஞாயிறு
ஆனதே பாயிரம் எழுதிப்
பாங்காய்ப் போற்றலாம்!

கதிரின் வீச்சுக்கடுமை யாகும்
உதய மாகும் ஒளியுங்கூட!


வெப்பச் சலன வீறு
விளைவே
ஒப்பிலா ஞாயிறே
ஒண்மையாய் வாழ்கவே!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel

Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599

SATHLOKHAR
SYNERGYS E&C GLOBAL LIMITED
Enduring Relationships
EPC & Infra Turnkey Contractors
CIVIL | PEB | MEP | INTERIORS | SOLAR
NSE Listed Company
We are looking for enthusiastic and self driven Engineers to join our growing team.
Vacancies
Civil | PEB | MEP Engineers
Qualification
Diploma or BE in Civil, Mechanical & EEE, Any degree / +2 passed
Experience
only 0 to 3 years
Apply Now
hr@sathlokhar.com
Contact: 98408 96529
Build your career with a company committed to construction engineering excellence.

MLMPERFECT.COM
Start Any MLM Software @ Rs.999/Month
+ EMI Available
EMI
Trusted by 1000+ satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247
7684053514

Wanted REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக நிருபர்கள் தேவை
PRESS
PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய் 8122664699

WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com

Just499
TOURS & TRAVELS WEBSITE
We Provide Complete Tours & Travels Website Solution
ONLY Rs. 499
Website: just499.com
WhatsApp: 7789951009
Phone: 7789951009
Email: orderjust499@gmail.com

WANTED
NEWS COORDINATOR
Salary Rs. 25000 Plus
*Salary is not a constraint for right candidate
Responsibilities:
1. Appoint Reporters and Photographers in Tamil Nadu Districts and Taluks
2. Will coordinate with reporters and the news desk
3. Should have a minimum of six years of experience in a print and TV newsroom.
4. Will report to the editors at the Chennai office
PRGI No. TNBIL/25/A1569
வைகறையில் பேப்பர்பாய்
Send CV to padmamediapublications@gmail.com
Call 9337501889

தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE

TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009

UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971

Launch Your Own Secure Crypto MLM Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துகள்!
అజంతా
அஜந்தா
பாக்குடன்
உங்கள்
தீபாவளியை
கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 63804 53463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed
Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your
Website/App need
at one place
Small
Business
website
E - commerce
Website
Corporate
Website
Enterprise
website
Mobile App
Development
contact us at
9337501889


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com


உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த
பாஸ்கர்
www.anandabhaskar.com


தினம் தோறும்
உள்ளூர், உலக செய்திகள் வரை
தரும் தரமான
நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com

## ஆடிட்டிங் சர்வீஸ்

GST, வருமானவரி (I.T)
குறைந்த செலவில்
தாக்கல் செய்ய
தொடர்பு கொள்ளவும்
73582 73545 / 94448 13400

## அடகு நகை மீட்டு மறு அடகு வைத்து

G-Rs. 10000/- கடன் வழங்கப்படும்
அடகு நகை மீட்டு மார்க்கெட் விலையை விட அதிக விலைக்கு வாங்கப்படும்.
KRISH FINCORP
8838358029, 9840134150

## Landbazzar

பகுதி நேர வேலைவாய்ப்பு
PART TIME JOB
SALARY
20,000/- Rs
NO SALES TARGET
- Retired person's / VRS
- Self Employee / Busniess Man
- Extra Income Needers / House wifes

5 APPOINTMENTS ONLY
97900 21367

## ஸ்ரீ கிருஷ்ணர் உபாசகர் பரிகார புகழ்

ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 63804 53463
EXPERT IN VEDIC ASTROLOGY
- PREDICTION & SOLUTIONS
- MONEY
- LOVE
- HEALTH
- FAMILY
- BUSINESS
- CAREER
- MARRIAGE

## Low Cost Matrimony Website



999 SITE
MATRIMONY WEBSITE
RS. 999/-
Call/Whatsapp - +91 7789951009

## WANTED

CNC & VMC OPERATOR, SETTER
LINE INSPECTOR
SHIFT SUPERVISOR
HI-TEK ENGINEERING INDUSTRIES
Survey No. 472/2A, SPH Road, Sengadu
Ayakolathur, Thiruvallur. - 602 105
99419 11817 / 99416 98979

## WANTED

- MARKETING MANAGER
- ACCOUNTANT
- CNC LATHE MILLING OPERATOR & PROGRAMMER
- PLASMA & BENDING OPERATOR
- LATHE MILLING MACHINERY OPERATOR

AMBATTUR TAPSTIA, KATTUR
Contact: 95660 61750

## Looking for CCTV Network ENGINEERS & TECHNICIANS

for a 2000 plus Camera - CCTV Project across Tamilnadu and Kerala.
Apply with your Biodata to
8086660679
via whatsapp or Mail id:
jobs.groupdivine@gmail.com
We are also looking for SUB-CONTRACTORS
Send details to 8086660679
via whatsapp or Mail id:
info@groupdivine.in

## SECURITY - ESCORTS

- SECURITY - ESCORTS
- SECURITY SUPERVISOR
- SECURITY ASSISTANTS

In & around Chennai - Mamandur
Salary Rs. 19000/- onwards
Qual: Min. 10th / Age below 50 yrs.
Young, Energetic, Experienced
044-26452323/ 9884966085
SENTRYFORCE SECURITAS PVT LTD
No.24/27, Jade Terrace, Balfour Road Kilpauk, Ch - 10.

## PERAMBUR / MOOLAKADI THORAIPAKKAM

SG (Male)
Qul: 10th, Age blw 50yrs 8Hrs, Take Home Salary Rs. 18,500 (26 Days) with 4 Off. + Food.
Ct: 9884991302 / 9094783384
9884991728
Wanted FIELD OFFICER
மூலக்கடை. 7010477903

## PHARMACIST REQUIRED

Diploma in Pharmacy with Tamilnadu Pharmacy Council Registration Certificate with 3 yrs exp.
Maya Nursing Home
Ashoknagar, Chennai
Call: 98413 83989

## ஆட்கள் தேவை

மருத்துவமனையில் பராமரிப்பு வேலைக்கு
40 வயதுக்குள் உள்ளவர்கள் அணுகவும்
RK சிறப்பு மருத்துவமனை
93457 81110

## அசோக்நகரில் உள்ள மாயா நர்சிங் ஹோம்க்கு

அருகில் வசிக்கும்
வார்டு பாய் ஆயாக்கள் தேவை
சம்பளம் ரூ.18,000
ஆண் / பெண் - வயது: 35க்குள்
9361390688 / 9841383989

## MOUNT HOSPITAL

@ Adambakkam & Thoraipakkam Req.
- HOSPITAL ADMIN
with Insurance Experiance
- STAFF NURSES
- RECEPTIONIST
- LAB TECHNICIAN
- PHARMACIST
- DRIVERS

730 530 5231

## அசோக்நகரில் உள்ள மாயா நர்சிங் ஹோம்க்கு

அருகில் வசிக்கும்
வார்டு பாய் ஆயாக்கள் தேவை
சம்பளம் ரூ.18,000
ஆண் / பெண் - வயது: 35க்குள்
9361390688 / 9841383989

## POWERCARE SOLUTIONS PVT. LTD

(Manufacturer of Diesel Generator)
Requires
BDM, AREA, SALES MGR
(Exp. min 3yrs.Good Sal + Inc)
Fresh/ Exp ITI/ DIP/ ENGG
(MECH, EEE)
Ct: 89259 93101, 91766 85440

## கேரளாவில் உள்ள பிரபல ஹோட்டலுக்கு அனுபவமுள்ள

தோசை மாஸ்டர் & டீ மாஸ்டர் தேவை
உணவு, தங்குமிடம் இலவசம்
விருப்பமுள்ளவர்கள்
ஆதார் கார்டு / அடையாள சான்றுடன் நேரில் வரவும்
8711 808080

## சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில்

பூச்சி மருந்து அடிக்க ஆட்கள் தேவை.
உணவு, தங்குமிடம் மற்றும் ESI, PF உண்டு
சம்பளம் அனுபவத்திற்கேற்ப
பள்ளி சான்றிதழ், 2 போட்டோ, ஆதார் எடுத்துவரவும்,
சிட்டி பெஸ்ட் கன்ட்ரோல் சர்வீஸஸ்
2/7, வேலாயுதம் காலனி, சாலிகிராமம்
Ct: 9994843057 / 9384725836

## SHANMUGA PRIYA TOURS & TRAVELS

Porur, Chennai
நிறுவனத்திற்கு அனுபவமுள்ள
TELE CALLERS
பெண்கள் தேவை
Salary: 15,000/- TO 20,000/-
99412 44226

## ST COURIER®

The People's Choice
Domestic-International-Cargo-E commerce
சென்னை போரூரில் பணிபுரிய கீழ்கண்டவர்கள் தேவை
- நைட் / மார்னிங் - டியூட்டி
Full / Part Time ஆட்கள் தேவை.
(ஸ்கேனிங், லோடிங், அன்லோடிங்)
- வேன் டெலிவரி ஆட்கள்
(குறிப்பு: பைக் தேவையில்லை)

தகுதி: 10 வது, 12 வது, டிகிரி.
சம்பளம்: Upto Rs. 20,000 + Perks
Ct: 99406 11849

## Aruvi SUPERMART

Shop Smart, Shop Smiles.
ACCOUNTANT
STOCK INVENTORY
DELIVERY BOY
Min 3 yrs Experience
SF No. 138/9A2, Kundrathur Main Rd, Mangadu, Chennai-122.
9087411008, 9087982000

## Breaking News Card.com


www.breakingnewscard.com
We Create Professional Breaking News Cards
Daily 4 Cards Plus get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY



# பல்சுவை களஞ்சியம்




## ஒரு விவசாயின் ஏக்கம் !!



பசுமைசோலை என்னும் அழகிய கிராமத்தில், மிகப்பெரிய நந்தவனம் இருந்தது. அந்த நந்தவனம் முழுவதும் பூக்கள் பூத்து இருந்தன. இதனால் நந்தவனம் முழுவதும் நறுமணம் வீசியது. தினமும், இரண்டு வண்டுகள் நந்தவனத்திற்கு வருவதும், அங்கே இருக்கிற பூக்களில் இருந்து தேனை குடிப்பதுமாக இருந்தன. நந்தவனத்தில் இருக்கிற பூக்களுக்கு தங்களிடம் தினமும் தேனைக்குடிக்கிற இந்த வண்டுகள், ஒரு நாளாவது நமக்கு ஏதாவது உதவி செய்ததுண்டா என மிகுந்த மனவருத்தம் அடைந்தன. ஆனால் வண்டுகள் இரண்டும் இதை பற்றியெல்லாம் கவலைப்படுவதாக இல்லை. நேரம் காலம் புரியாமல் நந்தவனத்திற்கு வருவதும், அங்குள்ள தேனை ஆசை தீர குடிப்பதுமாக இருந்தன.

ஒரு நாள் அதிகாலையில் ஆவலோடு இரண்டு வண்டுகளும் நந்தவனப் பூக்களின் மீது அமர்ந்தன. உடனே அங்கு இருந்த பூக்கள் எல்லாம் ஒன்றாக சேர்ந்து வண்டுகளே..! வண்டுகளே..! என்றது. வண்டுகள் ஆச்சரியத்துடன்!! ஆ.. பூக்களா பேசுகின்றன.. என்று ஆச்சரிப்பட்டன. உடனே வண்டுகள், பூக்களிடம் உங்களுக்கு என்ன வேண்டும் சொல்லுங்கள் என்றது. வண்டு நண்பர்களே..!! தினமும் எங்களை தேடி வந்து நன்றாக தேனை குடிக்கிறீர்கள். ஆனால் எங்களுக்காக இதுவரை என்ன செய்தீர்கள்... இப்போது நினைத்தாலும், நீங்கள் இருவரும் எங்களுக்கு உதவலாம். ஆம்! எங்களுக்கு கடுமையான வெப்பத்தினால் நிறைய தண்ணீர் தேவைப்படுகிறது. தாங்கள் இங்கே வரும் போது, கொஞ்சம் தண்ணீர் எடுத்து வந்து எங்களுக்கு தரலாமே என்று கேட்டன.


பூக்களே..!! உங்களிடமிருந்து தேனை உண்பது மட்டும் தான் எங்களுடைய வேலை. உங்களுக்கு தண்ணீர் கொடுப்பது எங்களின் வேலையில்லை. நீங்கள் கேட்பது, உங்களின் உரிமையும் அல்ல.. என்று இரண்டு வண்டுகளும் திமிராக பேசின. வண்டுகள் பேசியதை கேட்டு பூக்கள் மிகவும் கவலைப்பட்டன. இப்படியே சில நாட்கள் சென்றன. கடுமையான வெப்பம் மற்றும் வறட்சியின் காரணமாக பூக்கள் எல்லாம் வாட துவங்கியது. எதை பற்றியும் கவலைபடாத வண்டுகள் மீண்டும் தேனை குடித்துவிட்டு சென்றன. வாடி காட்சி அளித்த பூக்கள், தண்ணீர் இல்லாத காரணத்தால், ஒவ்வொன்றாக இறக்க துவங்கின. நந்தவனமே வறண்டு காணப்பட்டது. பூக்களெல்லாம் காய்ந்து போயின.

இதுவரை எதை பற்றியும் கவலைப்படாதா வண்டுகள், முதல் முறையாக உணவிற்காக திண்டாட துவங்கின. பூக்கள் இல்லை. அதனால், தேன் இல்லை. வண்டுகள் நிலை மிகவும் பரிதாபமானது. நம் சுயநலத்தால் தான் இந்நிலை என வண்டு வருந்தியது. பூக்கள் கேட்ட போது நாம் உதவி செய்து இருக்க வேண்டும். தண்ணீர் பஞ்சம் போகின்ற வரையிலாவது நம் சக தோழர்களை வைத்து, தண்ணீர் ஊற்றி காப்பாற்றி இருக்கலாம். இருக்கும் போது தெரியாத பூக்களின் அருமை அவை காய்ந்த போது தான் நமக்கு தெரிகிறது என்று சொல்லியவாறு இரண்டு வண்டுகளும் செத்து மடிந்தன.

தத்துவம் :

விவசாயிகளின் பிரச்சனைகளை விவசாயிகளே பார்த்து கொள்ளட்டும் என்று இல்லாமல் நாமும் நம்மால் முடிந்த அளவிற்கு விவசாயிகளுக்கு உதவிகளை செய்வோம்.

## மாரடைப்பு (Heart Attack) குறித்த விழிப்புணர்வு



பிரபல இதயநோய் நிபுணர் பேராசிரியர் சொக்கலிங்கம் அவர்கள் சொன்ன தகவல் இது...

மாரடைப்பு (Heart Attack) குறித்த விழிப்புணர்வு:

S, T, R என்ற இந்த மூன்றெழுத்துக்களை மறக்கக் கூடாது.

S = SMILE
T = TALK
R = RAISE BOTH ARMS

ஒரு திருமண நிகழ்விலோ, பொது இடங்களிலோ அல்லது வீட்டில் இருக்கும் போதோ, ஒரு ஆணோ அல்லது பெண்ணோ தடுமாறுவதை, அல்லது கீழே விழுவதைக் கண்டால், உடனே நாம் அவர் மேல் கவனம் செலுத்த வேண்டும். ஆனால், அவர் நம்மிடம் தனக்கு ஒன்றும் இல்லை, நான் நன்றாகத்தான் இருக்கிறேன் என்றெல்லாம் சொல்லுவார். நாமும், ஏதாவது பித்த மயக்கமாக இருக்கும் என்று லேசாக விட்டு விடுவோம் ஆனால் உண்மையில் அது ஒரு மாரடைப்புக்கான அறிகுறியாக இருக்கும் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள்..

மாரடைப்பை முன்கூட்டியே உணரக் கூடிய ஒரு உறுப்பு நமது தலைமைச் செயலகமான மூளையாகும். மூளை அறிவிக்கும் முன்னெச்சரிக்கையே அந்த தடுமாற்றமாக இருக்கலாம். அதனை S T R அதாவது,

SMILE (சிரிக்க சொல்வது

TALK (பேச சொல்வது

RAISE BOTH ARMS (இரண்டு கைகளையும் மேலே தூக்க சொல்வத

இது போன்ற செயல்களை செய்யச் சொல்வது மூலம், அவர்களுக்கு ஏற்படப் போகும் மாரடைப்பை (ஹார்ட் அட்டாக்) முன்கூட்டியே கண்டு பிடித்து விடலாம்.

அதாவது, இம்மூன்றையும் அவர் சரியாகச் செய்ய வேண்டும்.. இல்லையேல் பிரச்சனை பெரிதுதான். உடனடியாக, மருத்துவமனைக்கு கொண்டு செல்வதால், உயிரிழப்பை தடுக்கலாம். மருத்துவர்கள் கூறும் எச்சரிக்கை என்ன வென்றால், இந்த சோதனை செய்த, 3 மணி நேரத்திற்குள் மருத்துவமனைக்கு வந்து விட்டால் போதும், எளிதாக உயிர் இழப்பை தடுத்துவிடலாம், என்று உறுதியாக கூறுகிறார்கள்.

இவை மூன்றும், அவர் நல்லபடியாக சரியாக செய்து விட்டார் என்றால், மேலும் உறுதிபடுத்த ஒரு முக்கியமான செயலை செய்ய வேண்டும் என்று சமீபத்திய மருத்துவ ஆய்வு கூறுகிறது.

அதாவது, அவருடை நாக்கை நீட்ட சொல்ல வேண்டும்,

அவர் தனது நாக்கை நேராக நீட்டிவிட்டார் என்றால், அவர் நார்மலாக, நலமாக உள்ளார் என்று தீர்மானிக்கலாம் அவ்வாறு நேராக நீட்டாமல் ஒரு பக்கமாக அதாவது வலது அல்லது இடது பக்கமாக வளைத்து நீட்டினால், அடுத்த 3 மணி நேரத்திற்குள் எப்பொழுது வேண்டுமானாலும், அவருக்கு அட்டாக் வரலாம்.

இதனை படிக்கும், அன்பர்கள் வீட்டில் உள்ள அனைவரிடமும், உறவினர்களிடமும், நண்பர்களிடமும், மனிதாபிமான அடிப்படையில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துமாறு, கேட்டுக்கொள்கிறேன்.


மருத்துவர்களின் புள்ளி விவரப்படி, இதனை அனைவரிடமும் எடுத்து சொல்வதன் மூலம் 10 சதவீத மரணத்தை தவிர்க்கலாம் என்றும் சொல்கிறார்!



**-நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

# மீம்ஸ்










## விடுகதை

| | |
|---|---|
| இவனும் ஒரு பேப்பர் தான் ஆனால் மதிப்போடு இருப்பான் அவன் யார்? | பணம் |
| வீட்டுக்கு வந்த விருந்தாளியை வரவேற்க ஆளில்லை அது என்ன? | செருப்பு |
| ஒற்றை கால் மனிதனுக்கு ஒன்பது கை அது என்ன? | மரம் |
| தாகம் தீர்க்கும் தண்ணீர் சொம்பு அந்தரத்தில் தொங்குது அது என்ன? | இளநீர் |
| சின்ன கதவுகள், லட்சம் முறை மூடி திறந்தாலும் ஓசை வராத கதவுகள் அது என்ன? | கண் இமைகள் |
| எண்ணெய் குடித்துவிட்டு ஏழு கடல் தாண்டுவான் அவன் யார்? | விமானம் |

# ஜோக்ஸ்



தொண்டர் 1: "தேர்தல்ல தோல்வி அடையாமல் இருக்க
என்ன வழி?"

தொண்டர் 2: "போட்டி போடாமல் இருந்திடறதுதான் ஒரே வழி!"

=========================
======================

"சுவரில் எழுதாதே'ன்னு இருந்தது. நான் போயி..."

"என்ன செய்தே?"

" 'சரி எழுதலை'ன்னு எழுதிட்டு வந்திட்டேன்"

===================

ஆசிரியை : "ஒரு ரூபாய்க்கு ஒரு ஆப்பிள், அப்படின்னா பத்து ரூபாய்க்கு எத்தனை ஆப்பிள்?"

மாணவன்: "ஒரு ரூபாய்க்கு எந்த கடையில ஆப்பிள் விற்குதுன்னு சொல்லுங்க, நான் போய் வாங்கி வறேன்"

=========================
======================

"ஏனப்பா கால் கை நல்லாத்தானே இருக்கு, இப்படி உட்கார்ந்து பிச்சை எடுக்கலாமா?"

" 'உடம்பை ரொம்ப அலட்டக்கூடாது'னு டாக்டர் சொல்லிட்டார் சார்"

=========================
======================

"இந்த விவாக மேடையில் மணமக்களையே காணோமே?"




"இது விவாக மேடை இல்லை தலைவரே; 'விவாத மேடை' !

=========================
======================

மிருகக் காட்சி சாலையில் புலி ஒன்று, பார்வையாளரில் ஒருவனைக் கொன்றுவிட்டது.

அதைக் கண்டு பக்கத்து கூண்டில் இருந்த எலி கேட்டது. எதுக்கு அவனைக் கொன்னேனு...

புலி : அந்தப் பரதேசி நாய் மூணு மணி நேரமா என்னைப் பார்த்துச் சொல்றான் "எவ்ளோ பெரிய பூனை"ன்னு.

************

காதல் என்பது கரண்ட் போன நேரத்துல வர கொசு மாதிரி...

தூங்கவும் முடியாது...
தூரத்தவும் முடியாது....

************

அம்மா: என்னடா... இன்னிக்கு ஸ்கூல்ல இருந்து இவ்வளவு சீக்கிரமா வந்துட்டே?

பையன்: எங்க மிஸ் ஒரு கேள்வி கேட்டாங்க, நான் மட்டும் தான் பதில் சொன்னேன்.

அம்மா: (சந்தோசமாக) என்ன கேள்வி கேட்டாங்க?

பையன்: யார்ரா அது மிஸ் மேல சாக்பீஸ் அடிச்சதுன்னு கேட்டாங்க.

************

மனைவி : என்னங்க பாருங்க உங்க பையன் பாடப்புத்தகத்தை எப்படிக் குதறி வச்சிருக்கான்னு?

கணவன் : நான் தான் சொன்னேனே, அவன் படிப்புல புலின்னு.

************

கணவன்: எனக்கு கால் வந்த நான் வீட்ல இல்லன்னு சொல்லு! கொஞ்ச நேரம் கழித்து மொபைலில் கால் வருகிறது...

மனைவி: ஹலோ! என் கணவர் வீட்ல தான் இருக்கார்!

கணவன்: ஏண்டி அப்படி சொன்ன?

மனைவி: அது என்னோட லவர்!
கணவன்: ?!?.....

# வாழ்வுதரும் ஆரோக்கியம்



## பயத்தங்காயின் மருத்துவப் பயன்கள்



இதனுடைய சுபாவம் குளிர்ச்சி ஆகும். இந்தக் காய் பசியைத் தூண்டி நீரைப் பெருக்கும். கபத்தை அகற்றும். காற்றை நீக்கும்.
இதைப் பருப்புடன் சேர்த்து கூட்டு செய்தோ, கறி செய்தோ சாப்பிடலாம். சுவையாக இருக்கும். சற்று பிஞ்ஞாக சமைப்பதே நலம். ஆனால் ஒரு கண்டிஷன். இந்தக் காயை மருந்து உண்ணும் காலங்களில் கண்டிப்பாக சாப்பிட வேண்டாம்.

## சுரைக்காயின் நன்மைகள்



சுரைக்காயை ஏதாவது ஒரு வகையில் உணவில் சேர்த்து வந்தால் உடல் சூடு குறையும், வெப்ப நோய்கள் ஏதும் அணுகாது.
சிறுநீர் நன்கு வெளியேற சுரைக்காய் சிறந்த மருந்தாக விளங்குகிறது.
சுரைக்காயை மதிய உணவுடன் சேர்த்து அருந்தி வந்தால் பித்தம் சமநிலைப்படும்.
சுரைக்காய் நரம்புகளுக்கு புத்துணர்வைக் கொடுத்து, உடலை வலுப்படுத்தும்.
பெண்களுக்கு உண்டாகும் சோகையைப் போக்கும், இரத்தத்தைச் சுத்தப்படுத்தும்.
குடல் புண்ணை ஆற்றும், மூலநோய் உள்ளவர்களுக்கு சுரைக்காய் சிறந்த மருந்து.
சுரைக்காயின் சதையை சிதைத்து உடலில் தேய்த்து சிறிது நேரம் கழித்து குளித்து வந்தால் உடல் எரிச்சல் குறையும். சுரைக்காயைச் சுட்டு சாம்பலாக்கி தேனில் குழைத்து சாப்பிட்டு வந்தால் கண்நோய் தீரும்.
சுரையின் இலைகளை நீரிலிட்டு ஊறவைத்து அந்த நீரைப் பருகி வந்தால் வீக்கம், பெருவயிறு, நீர்க்கட்டு நீங்கும். காமாலை நோய்க்கும் பயன்படுத்தலாம்.

## கேரட்டின் பயன்கள்



வைட்டமின் ஏ சத்து நிறைந்துள்ள காரணத்தால், இவை ஆரோக்கியமான கண்களுக்கும், சருமத்திற்கும், உடல் வளர்ச்சிக்கும் மிகவும் உதவுகின்றது.

தினமும் ஒரு கேரட் சாப்பிடுவதன் மூலம், உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளை அகற்றலாம் குடல் புண்கள் வராமல் தடுக்கிறது.


நெஞ்சு எரிச்சலுக்கு தினமும் காரட் சாறு பருகுவது நல்லது. வாய்வு பிடிப்பு நீங்கும். வயிற்றை சுத்தமாக்கும்.

குடல்வால் நோய் வராது.

கல்லீரல், மற்றும் வயிற்றில் கற்கள் அல்லது புண்கள் இருந்தால் காரட் ஜஸ் நல்ல மருந்து.

மஞ்சள் காமாலை சீக்கிரம் குணமாக தினமும் காரட் சாறு அருந்துவது நல்லது.

## நல்ல தூக்கம் அவசியம்





ஒவ்வொரு மனிதனும் 100 ஆண்டுகள் முழுமையாக வாழ விரும்புகிறான். ஆனால் பலர் பல்வேறு நோய்களால் 70 வயதிற்கு முன்பே இறக்கின்றனர். சுகாதார அமைப்பான லான்செட் கமிஷன் தனது உலக சுகாதாரம்-2050 அறிக்கையில், தற்போதைய அகால மரணங்களின் எண்ணிக்கையை 2050-ம் ஆண்டுக்குள் பாதியாகக் குறைக்க முடியும் என்று வெளிப்படுத்தியுள்ளது.

இது சாத்தியமாக, அந்தந்த நாடுகள் சுகாதாரப் பராமரிப்புக்காக சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது.

அனைவரையும் சுகாதார விழிப்புணர்வுடன் வைத்திருப்பது மட்டுமல்லாமல் பல முறையான மாற்றங்களைச் செய்வதன் மூலமும் அகால மரணங்களைக் கணிசமாகக் குறைக்க அரசாங்கங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை விரிவாகக் கோடிட்டுக் காட்டியுள்ளது.

2001 முதல் 2018 வரை இந்தியாவில் சுமார் 37 மில்லியன் மக்கள் அகால மரணமடைந்துள்ளனர். இந்த இறப்புகளுக்கு 4 தொற்றா நோய்கள் முக்கிய காரணமாகும்.

அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் இதய நோய் (58.3 சதவீதம்), புற்றுநோய் (18.6 சதவீதம்), நாள்பட்ட சுவாச நோய்கள் (15.5 சதவீதம்) மற்றும் நீரிழிவு நோய் (5.6 சதவீதம்) ஆகியவற்றால் ஏற்பட்டுள்ளன.

காற்று மாசுபாடு, ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கம் மற்றும் மோசமான வாழ்க்கை முறை ஆகியவை இதற்குக் காரணங்களாக இருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இவற்றுடன் சாலை விபத்துகளும் நாட்டில் அகால மரணங்களுக்கு வழிவகுக்கும். தற்கொலைகளும் அதிக அளவில் உள்ளன.

எச்.ஐ.வி., காசநோய் நீரிழிவு நோய் உயர் ரத்த அழுத்தம் சாலை விபத்துகள் கடுமையான சுவாச நோய்கள் மற்றும் குழந்தை இறப்பு போன்ற 15 காரணிகள் சராசரி ஆயுட்காலத்தைக் குறைக்கின்றன.

8 வகையான தொற்றுகள் தாய்வழி சிக்கல்கள் மற்றும் 7 தொற்றாத நோய்கள் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே இவற்றை எதிர்த்துப் போராடுவதற்கு அதிக நிதி செலவிடப்பட வேண்டும்.

புகைபிடித்தல் மற்றும் மது பழக்கங்களை விட்டுவிடுங்கள்.

நீங்கள் ஒவ்வொரு நாளும் 15,000 அடிகள் நடக்க வேண்டும். உங்கள் உணவுப் பழக்கத்தை மாற்ற வேண்டும் மன அழுத்தத்தைக் குறைக்கவும். குறைந்தது 5 முதல் 7 மணி நேரம் நல்ல தூக்கம் அவசியம்.

கார்போஹைட்ரேட்டுகள் அதிகமாகவும் புரதம் அதிகமாகவும் உள்ள உணவை உண்ணுங்கள் பருவகால பழங்கள். கீரைகள் மற்றும் காய்கறிகள் உணவில் அதிகமாக இருக்க வேண்டும். ரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோயை தொடர்ந்து பரிசோதிக்க வேண்டும்

பெண்கள் மார்பகப் புற்றுநோய் மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கான பரிசோதனையைப் பெற வேண்டும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## பீட்ரூட் வடை



காய்கறி சாப்பிட மறுக்கும் குழந்தைகளுக்கு இந்த வகையில் உணவு தயாரித்து கொடுத்தால் விரும்பி சாப்பிடுவார்கள். இந்த முறையில் பீட்ரூட் மட்டுமின்றி பிற காய்கறிகளையும் பயன்படுத்தலாம்.


**தேவையானவை:**

பீட்ரூட் - 4
வெங்காயம் (நறுக்கியது) - 1 கப்
துவரம் பருப்பு - 200ooகிராம்
காய்ந்த மிளகாய் - 6
சீரகம் - 1ஃ2 ஸ்பூன்
உப்பு, எண்ணெய் - தேவைகேற்ப

**செய்முறை:**

துவரம் பருப்பை ஒரு மணி நேரம் ஊறவைத்து அதனோடு காய்ந்த மிளகாய், சீரகம் ஆகியவற்றை சேர்த்து வடை பதத்திற்கு அரைத்து கொள்ளவும். பீட்ரூட்டை துருவி கடாயில் எண்ணெய் சேர்க்காமல் லேசாக வறுத்துக் கொள்ளவும். இதனோடு நறுக்கிய வெங்காயம் சேர்த்து இரண்டு நிமிடங்கள் வறுத்து உப்பு மற்றும் அரைத்த விழுதினை சேர்க்கவும்.

தேவைபட்டால் தண்ணீர் சேர்த்து சிறு உருண்டைகளாக செய்து வடை போல் பொன்னிறமாக பொரித்தெடுக்கவும்.



## பிஸ்கெட் சாப்பிடுவது நல்லதா? கெட்டதா?



அதிகாலையில் பசித்தால், அவசரத்துக்கு பிஸ்கெட் சாப்பிடுவதில் தவறில்லை. ஆனால் அதுவே பழக்கமாகிவிடக் கூடாது. சிலபேர் காலையில் காபியுடன் ஒன்று அல்லது இரண்டு பிஸ்கெட் சாப்பிடுவார்கள். பரவாயில்லை. ஆனால் சிலபேர் ஒரு பாக்கெட் பிஸ்கெட்டையே காலி பண்ணிவிடுவார்கள். அது மிகப்பெரிய தவறு.

பிஸ்கெட்டில் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துப் பொருட்கள் பெரும்பாலும் இல்லை என்றே சொல்லலாம். அநேகமாக எல்லா வகை பிஸ்கெட்டுகளிலும் சர்க்கரை அளவு அதிகமாகத் தான் இருக்கும்.

உடலுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய கெட்ட கொழுப்பு அதிகமாக இருக்கும். தினமும் தொடர்ந்து பிஸ்கெட் சாப்பிட்டு வந்தால், மலச்சிக்கலை உண்டுபண்ணிவிடும். நேரம் கெட்ட நேரத்தில் பசியை தூண்டிவிடும்.

பிஸ்கெட்டில் அதிக கலோரி இருப்பதால் தினமும் சாப்பிடுபவர்களுக்கு உடல் எடையை கூட்டிவிடும். பிஸ்கெட்டில் 'ட்ரான்ஸ்ஃபேட்' என்று சொல்லக்கூடிய மாறுபட்ட கொழுப்பு இருக்கும். இந்த மாறுபட்ட கொழுப்பு தீய கொலஸ்ட்ரால் அளவுகளை அதிகமாக்கியும் நல்ல கொலஸ்ட்ரால் அளவுகளை குறைத்தும்விடும்.

அதிக கலோரி, அதிக மாவுச்சத்து, அதிக கொழுப்பு, அதிக அளவில் சோடியம் உப்பு, அதிக சர்க்கரை ஆகியவை இருப்பதால் அன்றாடம் பிஸ்கெட் சாப்பிடுபவர்களுக்கு உடல் பருமன், அஜீரணம், மந்தம், மலச்சிக்கல், சில சமயங்களில் இதயக் கோளாறைக் கூட உண்டுபண்ணிவிடும்.

வைட்டமின் சத்து இல்லாத, சத்துப் பொருட்கள் இல்லாத, நார்ச்சத்து இல்லாத சில பிஸ்கெட்டுகளை தவிர்ப்பது நல்லது. ஆனால் பார்த்தவுடனே சாப்பிடத் தூண்டும் சில அழகழகான, கவர்ச்சியான, ருசியான பிஸ்கெட்டுகளை வேண்டாம் என்று யார் சொல்வார்கள்?

அனைத்து உலக மக்களும் விரும்பி சாப்பிடும் ஒரே உணவாகிய பிஸ்கெட்டை எப்பொழுதாவது சாப்பிடுங்கள். வழக்கமாக்கிக் கொள்ள வேண்டாம். இரவு நேரங்களில் பசிக்கும் போதும் சரி, ரத்த சர்க்கரை அளவு குறைந்துவிட்ட போதும் சரி பயணங்களின் போதும் சரி சாப்பிட உணவே கிடைக்காத இடத்தில் சிக்கி அவஸ்தைப்படும்போதும் சரி பிஸ்கெட் மாதிரி ஒரு சிறப்பான உணவு வேறெதுவும் இல்லை.

## ஆனந்த சங்கமம் நிகழ்ச்சி





தூத்துக்குடி காமராஜ் கல்லூரி வளாகத்தில் நடந்த ஆனந்த சங்கமம் நிகழ்ச்சியில் வாழும் கலை அமைப்பின் நிறுவனர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் பங்கேற்றார் .

## தென்காசியில் 4-வது பொதிகை புத்தகத் திருவிழா



தென்காசியில் 4-வது பொதிகை புத்தகத் திருவிழாவை கலெக்டர் கமல் கிஷோர் தொடங்கிவைத்தார்.

## திருப்பாலைவனம் பாலீஸ்வரர் கோயிலில் கும்பாபிஷேகம்



பொன்னேரி அருகே திருப்பாலைவனம் பாலீஸ்வரர் கோயிலில் நேற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில், திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

## ஆம்புலன்ஸ் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்



ஊதிய உயர்வு, 8 மணி நேர பணிநேரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, ராமநாதபுரத்தில் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## திமுக செயற்குழு கூட்டம்



விழுப்புரம் மாவட்ட திமுக செயற்குழு கட்டத்தில் அமைச்சர் எம்ஆர்கே பன்னீர் செல்வம் பேசினார்.

## காந்தியடிகள் சிலை முன் அவரது உருவப்படத்துக்கு முதல்வர் ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார்



உத்தமர் காந்தியடிகளின் 79 வது நினைவு நாளான நேற்று தியாகிகள் நாளாக அனுசரிக்கப்பட்டது. காந்தியடிகள் சிலை முன் அவரது உருவப்படத்துக்கு முதல்வர் ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

## என் ஊர் என் கனவு ஆலோசனைக் கூட்டம்



**திருவண்ணாமலை, ஜன.31:**
திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் உங்க கனவை சொல்லுங்க திட்டத்தின் கீழ்' என் ஊர் என் கனவு' உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நிகழ்ச்சியை நடத்துவது குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அனைத்து அரசு அலுவலர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## பக்தர்கள் பாதயாத்திரை



திருச்செந்தூரில் தைப்பூச திருவிழாவை யொட்டி பக்தர்கள் பாதயாத்திரையாக குவிந்த வண்ணம் உள்ளனர்.

## தொழுநோய் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி



நாகர்கோவிலில் தொழுநோய் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் அழகு மீனா கொடியசைத்து துவக்கி வைத்தார் .

## மாணவ-மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி



தாராபுரம் மகாராணி கல்லூரியில் மாணவ-மாணவிகளுக்கு இலவச மடிக்கணினிகளை அமைச்சர் கயல்விழி வழங்கினார் .

## மனித நேய வார விழா



திருவள்ளூர், ஆர்.எம்.ஜெயின் அரசினர் பெண்கள் மேல்நிலை பள்ளியில் நடந்த மனித நேய வார விழாவில் அமைச்சர் நாசர் பங்கேற்று , போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.கலெக்டர் பிரதாப் உடன் உள்ளார்.

## வாக்காளர் தின விழிப்புணர்வு பேரணி



தஞ்சையில் வாக்காளர் தின விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் பிரியங்கா பங்கஜம் துவக்கி வைத்தார்.

## மனித நேய வார நிறைவு விழா



தேனியில் மனித நேய வார நிறைவு விழாவில் போட்டிகளில் வென்றவர்களுக்கு கலெக்டர் ரஞ்ஜீத்சிங் பரிசு வழங்கினார்.



தஞ்சாவூர் கள்ளுக்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சட்டமன்ற பொது கணக்கு குழுத்தலைவர் செல்வப் பெருந்தகை தலைமையில் குழு வினர் ஆய்வு செய்தனர். உடன் கலெக்டர் பிரியங்கா பங்கஜம் உள்ளார்.

## தெருநாய் கடியால் குழந்தைகள் பாதிப்பு



மணக்குடி பகுதியை சேர்ந்த குழந்தைகள் உட்பட 12 பேர் தெருநாய் கடியால் பாதிக்கப்பட்டு நாகர்கோவில் ஆசாரிப்பள்ளம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர் . அவர்களை மேயர் மகேஷ் சந்தித்து நலம் விசாரித்து ஆறுதல் கூறினார்.

## என்டி டிவி நிறுவனம் நடத்திய தமிழ் நாடு உச்சி மாநாடு




சென்னையில் நேற்று என்டி டிவி நிறுவனம் நடத்திய தமிழ் நாடு உச்சி மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## நெல்லையப்பர் கோவிலில் தரிசனம்



திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் நேற்று தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா தரிசனம் செய்தார்.

## காந்தி அடிகள் உருவ படத்திற்கு மரியாதை



குமரியில் காந்தி அடிகள் நினைவு நாளில் அவரது உருவ படத்திற்கு அமைச்சர் மனோ தங்கராஜ் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.உடன் மேயர் மகேஷ்.

## உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயில் மகா ஆரத்தி தரிசனம்



**செய்யாறு, ஜன. 31:**
செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் நேற்று மகா ஆரத்தி தரிசனம் நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அடுத்த, உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயிலில் யாக வேள்வி பூஜையினை ஆலய குரு சங்கர் குருஜி நடத்தினார்.

அதனைத் தொடர்ந்து கலச புறப்பாடு நடைபெற்றது. பின்னர் புனித நீரால் மூலவரான ஸ்ரீ அம்பாளுக்கு அபிஷேகம் ,ஆராதனை நடைபெற்றது.

பின்னர் அம்பாள் சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலித்தார். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்வாமி தரிசனம் செய்தனர்.

## மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவி



தூத்துக்குடியில் கலெக்டர் இளம்பகவத் முன்னிலையில் மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கனிமொழி எம்பி வழங்கினார்.உடன் அமைச்சர் கீதா ஜீவன் உள்ளார்.

## நெல்லையில் மக்களிடம் கருத்து கேட்பு



கனிமொழி தலைமையிலான திமுக தேர்தல் அறிக்கை குழுவினர் நெல்லையில் மக்களிடம் கருத்து கேட்டனர்.

## ரவுசு மணி

கொடுப்பவர்களுக்கு
தெரியாது கேட்பது
கடவுள் என்று....
கேட்பவர்களுக்கு
தெரியும்
கொடுப்பது
கடவுள்
என்று....



V. முத்து ராமகிருஷ்ணன்

## சீர்காழி பத்ரகாளியம்மன் தீமிதி திருவிழாவில் அன்னதானம்



**சீர்காழி , ஜன, 31:**
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பிடாரி தெற்கு வீதி கீழ்திசையில் ஸ்ரீ சக்ரமஹாமேரு உடன் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயபச்சை சகாளிபவளக்காளி தீமிதி திருவிழாவை முன்னிட்டு மதியம் 12 மணிக்கு பெப்ஸி பாய்ஸ் நடத்திய 7-ஆம் ஆண்டு அன்னதானம் நடைபெற்றது. பக்தகோடிகளும் தெருவாசிகளும் கலந்து கொண்டார்கள் .

அன்னதான ஏற்பாடுகளை சீர்காழி கீழத்தெரு பெப்ஸி பாய்ஸ் அறக்கட்டளை மற்றும் சீர்காழி நகர அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியினர் செய்தனர்.

## அரசு கல்லூரியில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு



**அறந்தாங்கி, ஜன.31:**
ஆவுடையார்கோயில் அருகே பெருநாவலூரில இயங்கி வரும் அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி ஏற்பு நிகழ்வு நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் ம. துரை அவர்கள் தலைமையில் நடைபெற்ற, இந்நிகழ்வில், அனைத்துத் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள்,அலுவலகப்பணியாளர்கள்,நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வல மாணவ மாணவியர் பலரும் பங்கேற்றனர். கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் ச.ரமேஷ் உறுதிமொழியை வாசித்தளிக்க, அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

## பொதுமக்களிடம் கருத்து கேட்பு



தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான பாஜகவின் தேர்தல் அறிக்கை குறித்து பொதுமக்களிடம் கருத்து கேட்கும் இயக்கத்தை சென்னையில் நேற்று மத்திய இணை அமைச்சர் எல். முருகன் துவக்கி வைத்தார்.

# சுற்றுலா: பிப்ரவரியில் சுற்றிப்பார்க்க வேண்டிய 10 இடங்கள்!

அழகான இயற்கைக்காட்சிகள், அமைதியான கடற்கரைகள், வளமான பாரம்பரியங்கள் மற்றும் அழகான மலைவாசஸ்தலங்கள் நிறைந்த தென்னிந்தியா ஒரு அற்புதமான இடமாகும்.

அழகான வானிலை நிலவும் பிப்ரவரி மாதத்தில், இந்த அழகான பகுதியைக் கண்டறிய சரியான நேரமாகும். மூடுபனி மலைகள் முதல் வண்ணமயமான கோவில்கள் மற்றும் இயற்கை எழில் கொஞ்சும் கடற்கரைகள் வரை, தென்னிந்தியாவில் நீங்கள் தவறவிடக்கூடாத 10 இடங்கள் இதோ.



1. கூர்க் (குடகு), கர்நாடகா

"இந்தியாவின் ஸ்காட்லாந்து" என்று அழைக்கப்படும் கூர்க், கர்நாடகாவில் உள்ள ஒரு அழகிய மலைவாசஸ்தலம் ஆகும். இது காபி தோட்டங்கள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் மூடுபனி மலைகளுக்குப் பெயர் பெற்றது.

2. மூணாறு, கேரளா

மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள மூணாறு, இயற்கை ஆர்வலர்கள் மற்றும் தேநீர் ரசிகர்களின் சொர்க்க பூமியாகும். பிப்ரவரி மாத குளிர்ச்சியான மற்றும் இனிமையான வானிலையுடன், மூணாரின் ரம்மியமான தேயிலை தோட்டங்கள், பசுமையான காடுகள் மற்றும் அமைதியான ஏரிகள் வழியாக சுற்றிப்பார்க்க இது ஒரு சிறந்த நேரம்.

3. ஆலப்புழா (ஆலப்புழா), கேரளா

அமைதியான உப்பங்கழிகளுக்குப் (BACKWATERS) பெயர் பெற்ற ஆலப்புழா, வேம்பநாடு ஏரியில் படகு சவாரி செய்வதன் மூலம் ஒரு மாயாஜால அனுபவத்தை வழங்குகிறது. உப்பங்கழிகள் வழியாக படகுப் பயணங்களை அனுபவிப்பதற்கும், உள்ளூர் கிராமங்களை சுற்றிப் பார்ப்பதற்கும், இந்த இடத்தின் அமைதியான அழகில் திளைப்பதற்கும் பிப்ரவரி மாதம் சரியானது.

4. ஊட்டி, தமிழ்நாடு


"மலை வாசஸ்தலங்களின் ராணி" என்று அழைக்கப்படும் ஊட்டி, நீலகிரி மலையில் உள்ள ஒரு அழகான நகரமாகும். அதன் காலனித்துவ வரலாறு, இனிமையான வானிலை மற்றும் இயற்கை காட்சிகள் ஆகியவற்றுடன், பிப்ரவரி மாதம் இங்கு வருகைக்கு சிறந்த நேரங்களில் ஒன்றாகும்.

5. பாண்டிச்சேரி

பாண்டிச்சேரி, அதன்பிரெஞ்சுபாணி கட்டிடங்கள், கலகலப்பான தெருக்கள் மற்றும் சுத்தமான கடற்கரைகள் நிறைந்த மகிழ்ச்சிகரமான கடற்கரை நகரம் ஆகும்.

6. வயநாடு, கேரளா

அழகிய நீர்வீழ்ச்சிகள் மற்றும் வனவிலங்குகளுக்குப் பெயர் பெற்ற வயநாடு, இயற்கை ஆர்வலர்கள் மற்றும் சாகச ஆர்வலர்களுக்கு ஏற்றது. எடக்கல் குகைகள், சூச்சிப்பாரா நீர்வீழ்ச்சிகள் மற்றும் வயநாடு வனவிலங்கு சரணாலயம் போன்றவற்றை கோடை வெப்பம் இல்லாமல் சுற்றிப்பார்க்க பிப்ரவரி மாதம் சிறந்த நேரமாக அமைகிறது.



7. மதுரை, தமிழ்நாடு

இந்தியாவின் பழமையான நகரங்களில் ஒன்றான மதுரை, அதன் அற்புதமான கோவில்கள் மற்றும் கலாச்சார பாரம்பரியத்திற்காகக் கொண்டாடப்படுகிறது.

8. சென்னை, தமிழ்நாடு

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை, கலாச்சாரம், வரலாறு மற்றும் இயற்கை அழகு ஆகியவற்றைக் கொண்ட அற்புதமான நகரமாகும். சென்னையின் குறிப்பிடத்தக்க கோயில்கள், காலனித்துவ கட்டிடங்கள் மற்றும் கடற்கரைகளைப் பார்க்க பிப்ரவரி மிகவும் மகிழ்ச்சிகரமான மாதங்களில் ஒன்றாகும்.

9. கொடைக்கானல், தமிழ்நாடு

"மலைகளின் இளவரசி" என்று அழைக்கப்படும் கொடைக்கானல் அதன் குளிர்ந்த வானிலை, அமைதியான ஏரிகள் மற்றும் துடிப்பான பசுமையுடன் புத்துணர்ச்சியூட்டும் சூழலை வழங்குகிறது.

10. தேக்கடி, கேரளா

தேக்கடியில் உள்ள பெரியார் வனவிலங்கு சரணாலயம் மிகவும் பிரபலமானது. இது கேரளாவில் கட்டாயம் பார்க்க வேண்டிய இடமாகும். பெரியார் ஏரியில் யானைகளைப் பார்ப்பதற்கும் படகு சவாரி செய்வதற்கும் பெயர் பெற்ற இந்த சரணாலயமானது பிப்ரவரி மாதத்தில் சென்றால் சிறப்பாக அனுபவிக்கலாம். தென்னிந்தியா என்பது இயற்கை, வரலாறு மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றின் அழகிய கலவையாகும். அதன் பல அதிசயங்களைக் கண்டறிய பிப்ரவரி சரியான மாதமாகும். தென்னிந்தியாவில் சுற்றிப்பார்க்க ஒவ்வொரு பயணிகளுக்கும் ஏதாவது ஒன்று உள்ளது. எனவே, உங்கள் பைகளை எடுத்துக்கொண்டு, இந்த அற்புதமான இடங்களின் அழகை அனுபவிக்கத் தயாராகுங்கள்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## விளையாட்டு ஆணையத்தில் 323 பயிற்சியாளர் பணி

இந்தியவிளையாட்டுஆணையத்தில்காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

உதவி பயிற்சியாளர் பிரிவில் தடகளம் 28, துப்பாக்கி சுடுதல் 28, நீச்சல் 26, மல்யுத்தம் 22, குத்துச்சண்டை 19, பாட்மின்டன் 16 உட்பட மொத்தம் 323 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: டிப்ளமோ இன் கோச்சிங் / ஒலிம்பிக், ஆசிய, உலக கோப்பையில் பயிற்சியாளர் சான்றிதழுடன் பங்கேற்பு / துரோணாச்சார்யா விருது

வயது: 18-30 (15.2.2026ன் படி)

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு / பயிற்சியாளர் தகுதி தேர்வு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 2500. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 2000 கடைசிநாள்: 15.2.2026

விவரங்களுக்கு: sportsauthorityofindia.nic.in.

## அழைக்கிறது ஆயுர்வேத நிறுவனம்




புதுடில்லியில் உள்ள இந்திய ஆயுர்வேத நிறுவனத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பஞ்சகர்மா டெக்னீஷியன் 5, கிளர்க் 4, மெடிக்கல் லேப் டெக்னாலஜிஸ்ட் 4, அக்கவுன்டன்ட் 4, யோகா பயிற்றுநர் 2, அசிஸ்டென்ட் 2 உட்பட மொத்தம் 33 இடங்கள் உள்ளன.

வயது, கல்வித்தகுதி: பிரிவு வாரியாக மாறுபடும்.

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 1000 / ரூ. 500. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 500 / ரூ. 250

கடைசிநாள்: 3.3.2026 விவரங்களுக்கு: aiia.gov.in

## புதிய வாக்காளர்களுக்கு 15 நாட்களில் அடையாள அட்டை




**சென்னை, ஜன.31:**

தமிழகத்தில் நடந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் 97.37 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. இதில், உயிரிழந்த வாக்காளர்கள் 26,95,672 பேர், இடம்பெயர்ந்தோர் 66,44,881 பேர், இரட்டை பதிவு வாக்காளர்கள் 3,98,278 பேர் அடங்குவார்கள். இவர்களில், இடம்பெயர்ந்தோர் மட்டுமே மீண்டும் விண்ணப்பிக்க முடியும். இந்த நிலையில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க டிசம்பர் 19-ந் தேதி முதல் ஜனவரி 18-ந் தேதி வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டன. பின்னர் இந்த அவகாசம் இன்று (30-ந் தேதி) நீட்டிக்கப்பட்டது. இந்த காலகட்டத்தில் 16 லட்சம் பேர் புதிதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பித்துள்ளனர். தற்போது, மேலும் இந்த கால அளவை 10 நாட்கள் நீட்டித்து சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. இந்த நிலையில், தற்போது வரை விண்ணப்பித்தவர்களின் கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கு முதல் கட்டமாக வாக்காளர் அடையாள அட்டை எண் ஒதுக்கீடு செய்யப்படும். அதனைத் தொடர்ந்து, 15 நாட்களுக்குள் அனைவருக்கும் வண்ண புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை விநியோகிக்க தேர்தல் ஆணையம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

## குத்துச்சண்டை போட்டியில் பதக்கம் வென்ற வீரர்களுக்கு பாராட்டு



திருப்பூரில் நடைபெற்ற மாநில அளவிலான குத்துச்சண்டை போட்டியில் 7- தங்க பதக்கம், 1- வெள்ளி பதக்கம் வென்ற வீரர்களை தமிழ்நாடு அனைத்து அமைப்புசாரா தொழிலாளர் முன்னேற்றச் சங்க மாநில பிரச்சார செயலாளர் A.A.ஆறுமுகம் பாராட்டி சால்வை அணிவித்து ஊக்கப் பரிசு ரொக்க பணம் வழங்கினார். உடன் செயலாளரும் பயிற்சியாளர் எஸ்.மணிமாறன் பொருளாளர் வ.அன்பரசு தங்க பதக்கம் வென்ற வீரர்கள்.

## ஆன்லைன் பகுதி நேர வேலைவாய்ப்பு மோசடி: தூத்துக்குடி மாவட்ட காவல்துறை எச்சரிக்கை

**தூத்துக்குடி, ஜன.31:**

தூத்துக்குடி மாவட்ட காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் ஆன்லைனில் பகுதி நேர வேலை வாய்ப்பு (part-time job offers) என சமூக வலைதளங்கள் மூலம் நடைபெறும் மோசடி குறித்து மாவட்ட காவல்துறை பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சமீப நாட்களாக தூத்துக்குடி மாவட்டத்தில் online scams நடைபெற்று வருகிறது. குறிப்பாக வாட்ஸ்அப், டெலிகிராம், இன்ஸ்டாகிராம் மற்றும் முகநூல் (Facebook) போன்ற சமூக வலைதளங்களில் பரப்பப்படும் போலி பகுதி நேர வேலைவாய்ப்பு மூலம் பொதுமக்கள் குறிவைக்கப்படுகின்றனர். இவ்வகை மோசடியில் Google Maps-ல் hotels மற்றும் products-க்கு like அல்லது review செய்வது, profiles அல்லது cars-க்கு review போடுவது, mobile apps அல்லது websites-ல் வழங்கப்படும் books மற்றும் novels வாசிப்பது போன்ற எளிய செயல்களை செய்தால், எளிதில் வருமானம் கிடைக்கும் என மோசடியாளர்கள் மக்களை ஏமாற்றுகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் அறிமுகமில்லாத நபர்களால் டெலிகிராம் அல்லது வாட்ஸ்அப் மூலம் வழிநடத்தப்படுகின்றனர். அவர்கள் போலியான மொபைல் செயலிகளை பதிவிறக்கம் செய்யவோ அல்லது போலியான இணைதளங்களை பயன்படுத்தவோ அறிவுறுத்துகின்றனர். ஆரம்பத்தில் நம்பிக்கை ஏற்படுத்த சிறிய தொகை லாபமாக கொடுக்கப்பட்டு பின்னர் பெரிய முதலீடு செய்தால் பெரிய வருமானம் கிடைக்கும் என ஆசை வார்த்தை கூறியும் மேலும் மற்றவர்களையும் இதில் இணைத்தால் (referral) முதலீடு செய்த தொகை ஒரு வாரத்திற்குள் திரும்ப கொடுக்கப்படும் என பொய்யான வாக்குறுதிகளை மோசடியாளர்கள் வழங்குகின்றனர். இதனை நம்பி பெரிய முதலீடு செய்ததும் மோசடியாளர்கள் பாதிக்கப்பட்டவர்களின் தொடர்பை துண்டித்து விடுகின்றனர்.

எனவே பொதுமக்கள் குறைந்த முயற்சியில் அதிக லாபம் தருவதாக கூறப்படும் பகுதி நேர வேலைவாய்ப்பு அல்லது முதலீடு தொடர்பான திட்டங்களை நம்ப வேண்டாம் எனவும் மேலும் சமூக வலைதளங்களில் வரும் செய்தி அதில் உள்ள லிங்க் அல்லது மொபைல் செயலிக்கான லிங்க் ஆகியவற்றை பதிவிறக்கம் செய்ய வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் சந்தேகத்திற்கிடமாக முதலீட்டு சலுகைகள் கிடைத்தாலோ அல்லது இதுபோன்ற சைபர் மோசடிகளில் பாதிக்கப்பட்டாலோ உடனடியா சைபர் குற்ற உதவி எண் 1930 அல்லது www.cybercrime.gov.in என்ற இணையதளத்திலோ புகார் பதிவு செய்யுமாறு பொதுமக்கள் நலன் கருதி தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் தெரிவித்துள்ளார். மேற்சொன்ன புகார் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு மேலும் நிதி இழப்புகளை தவிர்த்து, குற்றவாளிகள் மீது விரைவான நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ரூ.823 கோடியில் பிராட்வேயில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம்: முதல்வர் ஸ்டாலின் அடிக்கல்

**சென்னை, ஜன.31:**

பிராட்வே பேருந்து நிலையத்தில் ரூ.822.70 கோடி மதிப்பீட்டில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் புதிதாக கட்டப்படவுள்ள பல்நோக்கு ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் மற்றும் குறளகம் கட்டுமானப் பணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று அடிக்கல் நாட்டினார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: சென்னை மாநகராட்சி சார்பில் பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் தங்கசாலை பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் 1960-ம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1964-ம் ஆண்டு மக்கள் பயன்பாட்டுக்கு வந்தன. பிராட்வே பேருந்து நிலையம் வெளியூர் செல்லும் பேருந்துகளுக்காக இருந்த நிலையில், காலப்போக்கில் அங்கு பல்வேறு கடைகள் அமைந்தன.

சென்னை மாநகரின் முக்கிய இடத்தில் இப்பேருந்து நிலையம் அமைந்திருந்ததாலும், மக்கள் தொகை பெருக்கத்தாலும், இடநெருக்கடியால் வெளியூர் செல்லும் பேருந்துகள் 2002-ம் ஆண்டு நவம்பரில் கோயம்பேட்டுக்கு மாற்றப்பட்டன. இதன் பின் பிராட்வே பேருந்து நிலையம் மாநகரப் பேருந்துகளுக்கான நிலையமாக மாற்றப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது.

பிராட்வே பேருந்து நிலையத்தில் சிறுகடைகள் அதிகமாக உள்ளதாலும், இடநெருக்கடியாலும், இப்பேருந்து நிலையத்தை நவீனப்படுத்த ஏற்கனவே பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தன. இந்நிலையில் 2022-23-ம் ஆண்டுக்கான நகராட்சி நிர்வாகத் துறை மானியக் கோரிக்கையில் பிராட்வே பஸ் நிலையத்தில் பல்நோக்கு ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்புக்கிணங்க, ரூ.822.70 கோடி மதிப்பில் பல்நோக்கு ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் மற்றும் குறளகம் கட்டிடம் (MULTI MODAL FACILITY COMPLEX) கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டது.

## சென்னையில் மாடுகளுக்கும் மைக்ரோ சிப் கட்டாயம் - சென்னை மாநகராட்சி கூட்டத்தில் முடிவு

**சென்னை, ஜன.31:**



சென்னையில் மாடுகளால் ஏற்படும் விபத்தை தடுக்க உரிமம் மற்றும் மைக்ரோ சிப் கட்டாயமாக்கப்படுவதாக சென்னை மாநகராட்சிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி சென்னையில் மாடுகளை வைத்திருப்போர் அவற்றிற்கு மைக்ரோசிப் பொறுத்தி, உரிமம் பெறுவது கட்டாயம் என சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ரூ.100 கட்டணம் செலுத்தி மைக்ரோசிப் பொருத்தி உரிமம் பெறலாம் என்றும், உரிமம் மற்றும் மைக்ரோ சிப் இல்லாத மாடுகளுக்கு ரூ.25,000 வரை அபராதம் விதிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் தொடர்ந்து விதிமீறலில் ஈடுபட்டால் மாடுகள் பறிமுதல் செய்யப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே மார்ச் 18ம் தேதிக்குள் மாடுகளுக்கு மைக்ரோசிப் பொருத்தி உரிமம் பெற வேண்டும் என காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் மேயர் ஆர்.பிரியா தலைமையில் இன்று (30.01.2026) ரிப்பன் கட்டட மாமன்றக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமர குருபரன், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போராட்ட வழக்கில் இருந்து 56 பேர் விடுதலை

**மதுரை, ஜன.31:**

அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போராட்ட வழக்கிலிருந்து 56 பேரை விடுதலை செய்து மதுரை மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அலங்காநல்லூரில் நடைபெற்ற போராட்டம் தொடர்பாக சையத் உமர் முக்தர், சகாய ஆன்றோ கிளைட்டன், கம்பூர் செல்வராஜ், யுகஸ்ரீ, கீதா, ரெங்கராஜன், தமிழரசன், வினோத் ராஜ், முகிலன் உள்பட 64 பேர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். பின்னர் இந்த வழக்கு சிபிசிஐடி-க்கு மாற்றப்பட்டது.

ஜல்லிக்கட்டு போராட்டம் தொடர்பாக மாநிலம் முழுவதும் பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்த வழக்குகளை ரத்து செய்யக்கோரி தமிழக அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டது. இந்த கோரிக்கையை ஏற்று ஜல்லிக்கட்டு போராட்ட வழக்குகளை தமிழக அரசு திரும்ப பெற்றது. இருப்பினும் சிபிசிஐடி பதிவு செய்த வழக்கு திரும்பப் பெறப்படவில்லை.

இந்த வழக்கு மதுரை 5-வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் 2018 முதல் விசாரிக்கப்பட்டு வந்தது. விசாரணை நிலுவையில் இருந்தபோது 3 பேர் உயிரிழந்தனர்.

இந்த வழக்கில் தொடர்புடைய 5 பேர் மீதான வழக்கு தனியே பிரிக்கப்பட்டது. இந்நிலையில் எஞ்சிய 56 பேரையும் விடுதலை செய்து நீதிபதி ஆர்.ஜோசப்ஜாய் தீர்ப்பளித்தார்.

# தெருநாய்கள் தொடர்பான உத்தரவில் மாற்றம் கோரிய மனுக்கள் மீது தீர்ப்பு ஒத்திவைப்பு

புதுடெல்லி, ஜன.31:

தெருநாய்கள் விவகாரத்தில் ஏற்கெனவே பிறப்பித்த உத்தரவில் மாற்றம் செய்யக் கோரி தாக்கல் செய்த மனுக்களின் மீதான தீர்ப்பை உச்சநீதிமன்றம் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தது.



நாடு முழுவதும் தெருநாய்க்கடி சம்பவங்கள் அதிகரித்துவரும் நிலையில், இது தொடர்பாக உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரித்து வருகிறது. இந்த வழக்கில் தெருக்களில் சுற்றித் திரியும் நாய்களைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் வழிகாட்டுதலை உச்சநீதிமன்றம் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 22-ஆம் தேதி பிறப்பித்தது.

அதில், 'தெருநாய்களுக்கு தெருக்களில் உணவளிக்கக் கூடாது. அதற்கென பிரத்யேக இடங்கள் உருவாக்கப்பட்டு, அங்கு மட்டுமே உணவளிக்க வேண்டும். இந்த உத்தரவை மீறி தெருநாய்களுக்கு தெருக்களில் உணவளிப்பவர்கள் தண்டிக்கப்படுவர்' என்று எச்சரித்தது.

கடந்த ஆண்டு நவம்பரில் பிறப்பித்த உத்தரவில், அரசு, பொது நிறுவன வளாகங்களில் சுற்றித் திரியும் தெரு நாய்கள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

விலங்குகள் கருத்தடை விதிமுறைகளின்படி, ஓரிடத்தில் இருந்து பிடிக்கப்படும் நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னர், பிடிக்கப்பட்ட இடத்திலேயே அவற்றை மீண்டும் விடுவிக்க வேண்டும் என்பதால், இந்த உத்தரவில் மாற்றம் கோரி உச்சநீதிமன்றத்தில் பலர் மனு தாக்கல் செய்தனர்.

அதேவேளையில், அந்த உத்தரவை கடுமையாக்கி பின்பற்ற உத்தரவிட கோரி வேறு சிலர் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனுக்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா, என்.வி. அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய அமர்வில் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, இந்திய விலங்குகள் நலவாரியம் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர், 'நெடுஞ்சாலைகளில் இருந்து அப்புறப்படுத்தப்படும் கால்நடைகளை அடைப்பதற்கு காப்பகங்களை அமைக்க அல்லது விலங்குகள் பிறப்பு கட்டுப்பாட்டு மையங்களை அமைப்பதற்கு ஏராளமான விண்ணப்பங்கள் வந்துள்ளன' என்றார்.

இதைக் கேட்ட நீதிபதிகள், அந்த விண்ணப்பங்களை ஏற்பது அல்லது நிராகரிப்பது குறித்து விரைந்து பரிசீலிக்க அறிவுறுத்தினர்.

பின்னர், தெருநாய்கள் விவகாரத்தில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் பஞ்சாப், தமிழகம், உத்தர பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இந்த விவகாரத்தில் உச்சநீதிமன்றத்துக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட வழக்குரைஞர் கௌரவ் அகர்வால் எடுத்துரைத்தார். அதைத் தொடர்ந்து, வழக்கின் தீர்ப்பை நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

## க்ரைம் கார்னர்

### நந்தனம் அரசு கல்லூரியில் இளம் பெண் பாலியல் வன்கொடுமை கேன்டீன் உரிமையாளர், மாஸ்டர் உட்பட 3 பேர் கைது



சென்னை, ஜன.31:

சென்னை நந்தனம் அரசு கலைக் கல்லூரியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இந்த கல்லூரி வளாகத்தில் கேன்டீனும் செயல்பட்டு வருகிறது. இதை முத்துச்செல்வம் (48) என்பவர் நடத்தி வருகிறார். இந்த கேன்டீனில் 22 வயதுடைய இளம் பெண் ஒருவர், அண்மையில் வேலைக்கு அமர்த்தப்பட்டார். மேலும் அந்த பெண் அங்கேயே தங்கியும் இருந்தார்.

இந்த பெண்ணின் ஏழ்மை நிலையை பயன்படுத்தி கேன்டீன் உரிமையாளர் முத்துச்செல்வம், கேன்டீன் மாஸ்டர் குணசேகரன் (38) இவர்களது நண்பர் கார்த்திகேயன் (56) ஆகியோர் அந்த பெண்ணை மிரட்டியும், கட்டாயப்படுத்தியும் அடிக்கடி கேன்டீன், கல்லூரி வளாகத்தில் உள்ள அறை ஆகியவற்றில் பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து அந்த பெண் கல்லூரி காவலாளியிடம் கண்ணீருடன் முறையிட்டுள்ளார். இதையடுத்து சைதாப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன்படி போலீஸார் பாலியல் வன்கொடுமை உட்பட பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிந்து முத்துச்செல்வம், குணசேகரன், கார்த்திகேயன் ஆகிய 3 பேரை கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த வழக்கில் மேலும் 2 பேரை தேடி வருகின்றனர். பாதிப்புக்கு உள்ளான பெண்ணுக்கு தேவையான மருத்துவ சிகிச்சை மற்றும் மன நல ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது.

### ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வந்த ரவுடி மீண்டும் கைது

செங்குன்றம், ஜன.31:

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு, புழல் மத்திய சிறையில் இருந்து ஜாமீனில் வெளியே வந்த ரவுடி சிறை வாயிலில் மீண்டும் கைது செய்யப்பட்டார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் கடந்த 2024-ம் ஆண்டு அவரது வீட்டின் அருகே கொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக, புதூர் அப்பு உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டு புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந் நிலை யில், ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைதாகி ஓராண்டுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்து வந்தவர்களுக்கு படிப்படியாக நீதிமன்றம் ஜாமீன் வழங்கியது.

இதற்கிடையே கடந்த 2-ம் தேதி புழல் மத்திய சிறையில் ஜாமீன் கிடைப்பதில் ஏற்பட்ட தகராறில், விசாரணை பிரிவில் இருந்த பொன்னை பாலு, மணிகண்டன் ஆகியோருக்கும் புதூர் அப்புக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் இரு தரப்பினரும் தாக்கி கொண்டனர். இதை தடுக்க சென்ற உதவி ஜெயிலர் திருநாவுக்கரசு கீழே தள்ளப்பட்டு தாக்கப்பட்டார்.

இதுதொடர்பாக, ஜெயிலர் முருகேசன் அளித்த புகாரின் பேரில் புழல் போலீஸார் கொலை முயற்சி, அரசு அதிகாரியை பணி செய்ய விடாமல் தடுத்தல் உள்ளிட்ட 4 சட்டப் பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து விசாரித்து வந்தனர்.

## விளையாட்டு செய்திகள்

### வில்வித்தை பயிற்சி மையத்துக்கு பிப்.8-ல் வீரர், வீராங்கனைகள் தேர்வு

சென்னை, ஜன.31:

சென்னை: சென்னை மாவட்ட வில்வித்தை பயிற்சி மையத்துக்கான வீரர், வீராங்கனைகள் தேர்வு, பிப்.8-ம் தேதி நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாG அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம், மத்திய அரசின் 'கேலோ இந்தியா' திட்ட நிதியுதவியுடன் வில்வித்தை பயிற்சிக்கான மையம் சென்னையில் அமைய உள்ளது. இந்த மையத்தில் தகுதியுள்ள வீரர், வீராங்கனைகள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு தினசரி பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. பயிற்சி பெற விரும்பும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான தேர்வு போட்டிகள், நேரு பூங்காவில் உள்ள மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலக வளாகத்தில் பிப். 8-ம் தேதி காலை 8 மணிக்கு நடைபெற உள்ளது. இத்தேர்வில் பங்கேற்கும் மாணவர்களின் உடல்தகுதி, வில்வித்தை விளையாட்டுத் திறன் மற்றும் அவர்கள் ஏற்கெனவே மாவட்ட, மாநில அளவில் பெற்ற பதக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர். இதுகுறித்த கூடுதல் விவரங்கள் தேவைப்படுவோர், சென்னை நேரு பூங்காவில் அமைந்துள்ள மாவட்ட விளையாட்டு அலுவலகத்தை நேரடியாகவோ 74017 03480 என்ற செல்போன் எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 'குடும்பத்தினர் முன்னிலையில் டெல்லியில் விளையாடுவது சிறப்பு' - ஆர்யன் தத்

விசாகப்பட்டினம், ஜன.31:

இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் ஆர்யன் தத். இவர் தற்போது நெதர்லாந்து கிரிக்கெட் அணியில் இடம்பெற்று விளையாடி வருகிறார்.

வரும் பிப்ரவரி 7-ம் தேதி இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் ஐசிசி டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி தொடங்கவுள்ளது. போட்டியில் பங்கேற்பதற்காக நெதர்லாந்து அணியினருடன் ஆர்யன் தத்தும் வந்துள்ளார். இதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

கடந்த 2023-ம் நடைபெற்ற உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின்போது இந்தியா வந்திருந்தேன். அதன் பிறகு இந்தியா வருவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. தற்போது மீண்டும் ஒரு உலகக் கோப்பை போட்டிக்காக இந்தியா வந்துள்ளேன்.

19-ம் தேதி இந்தியாவுக்கு எதிராக அகமதாபாத் மைதானத்தில் மோத இருப்பது உற்சாகம் மிக்கதாய் உள்ளது. இந்த உலகக் கோப்பை போட்டியில் விளையாடுவது எனக்கு சிறப்பான விஷயம். டெல்லியில் எனது உறவினர்கள் இருக்கின்றனர்.

எனது குடும்பத்தாரும் இங்கு வந்துள்ளனர். எனவே, டெல்லி போட்டியில் எனது குடும்பத்தினர் முன்பு விளையாடுவது சிறப்பான விஷயம். எனது ஆட்டத்தை எனது குடும்பத்தினர் பார்ப்பார்கள். நேரம் கிடைத்தால் அவர்களை மைதானத்தில் சந்தித்துப் பேசுவேன்.

## சத்தீஷ்கார்: 9 சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் பறிமுதல்; பெரிய சதி திட்டம் முறியடிப்பு

பிஜாப்பூர், ஜன.31:



சத்தீஷ்காரின் கான்கர்-நாராயணபூர் எல்லை பகுதியில், சோட்டேபெத்தியா பகுதிக்கு உட்பட்ட வெவ்வேறு இடங்களில் எல்லை பாதுகாப்பு படையினருடன் இணைந்து மாவட்ட ரிசர்வ் படையினர் இன்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது, நக்சலைட்டுகள் மறைத்து வைத்திருந்த 9 சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள், பட்டாசுகள், மின்சார வயர்கள் மற்றும் பிற நக்சலைட்டு பொருட்கள் கைப்பற்றப்பட்டன. சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் அனைத்தும் செயலிழக்கம் செய்யப்பட்டு, அழிக்கப்பட்டன.

பைபில் 2 வெடிகுண்டுகள்... விமான நிலையத்தில் விளையாட்டாக கூறிய தொழிலதிபர்: அடுத்து நடந்தது...

கோத்ரி ஆற்றின் அருகே நடந்த இந்த சோதனையில் 3 சக்தி வாய்ந்த பிரஷர் குக்கர் வெடிகுண்டுகள், பாதுகாப்பு படையினரை தாக்கும் நோக்கத்துடன் மறைத்து வைக்கப்பட்டு இருந்ததும் தெரிய வந்து, அவை கண்டுபிடிக்கப்பட்டன.

இதுதொடர்பான முதல்கட்ட விசாரணையில், பெரிய அளவில் தாக்குதல்களை நடத்த அவர்கள் திட்டமிட்டு இருந்தது தெரிய வந்துள்ளது. அந்த சதி திட்டம் முறியடிக்கப்பட்டு உள்ளது.

சத்தீஷ்காரில் பிஜாப்பூரில் இன்று நடந்த என்கவுண்ட்டரில் 2 நக்சலைட்டுகளை வீரர்கள் சுட்டு வீழ்த்தினர். இதுபற்றி பஸ்தார் சரக ஐ.ஜி. சுந்தர்ராஜ் கூறும்போது, கொல்லப்பட்ட நக்சலைட்டுகளிடம் இருந்து ஏ.கே.-47 ரக துப்பாக்கி, 9 மி.மீ. ரக பிஸ்டல் ஒன்று மற்றும் பிற பொருட்கள் கைப்பற்றப்பட்டு உள்ளன.

தொடர்ந்து பாதுகாப்பு படையினர் தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர் என்றார்.

## "நாங்கள் ஒரே நோக்கத்துடன் பயணிக்கிறோம்" - கார்கே, ராகுல் உடனான சந்திப்புக்குப் பிறகு சசி தரூர் பேட்டி

புதுடெல்லி, ஜன.31:

"நாங்கள் அனைவரும் ஒரே நோக்கத்துடன் பயணிக்கிறோம். இதற்கு மேல் நான் என்ன சொல்ல முடியும்?" என்று மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி உடனான சந்திப்புக்குப் பிறகு சசி தரூர் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்திக்கும், அக்கட்சியின் திருவனந்தபுரம் எம்பி சசி தரூருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் இருப்பதாக சமீப காலமாக ஊடகங்களில் செய்தி வெளியாகி வந்தது. சசி தரூர் பாஜகவில் இணைய திட்டமிட்டிருப்பதாகவும் கூறப்பட்டது. இதன் காரணமாகவே, கடந்த வாரம் கேரளாவில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் ஏற்பாடுகள் குறித்த முக்கிய கூட்டத்தில் சசி தரூர் கலந்து கொள்ளவில்லை என்றும் கூறப்பட்டது.

இந்நிலையில், பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாம் நாளான இன்று, நாடாளுமன்றத்தில் உள்ள கார்கேவின் அலுவலகத்துக்குச் சென்ற சசி தரூர், அங்கு மல்லிகார்ஜுன கார்கே மற்றும் ராகுல் காந்தியை சந்தித்துப் பேசினார். சுமார் இரண்டு மணி நேரம் இந்த சந்திப்பு நடைபெற்றது.

சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சசி தரூர், "எனது கட்சியின் இரண்டு தலைவர்களான மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன் நான் ஒரு கலந்துரையாடலை நடத்தினேன். நாங்கள் மிகவும் நல்ல, ஆக்கப்பூர்வமான, நேர்மறையான விவாதத்தை நடத்தினோம். எல்லாம் நன்றாக உள்ளது. நாங்கள் அனைவரும் ஒரே பக்கத்தில் இணைந்து பயணிக்கிறோம். இதற்கு மேல் நான் என்ன சொல்ல முடியும்?" என தெரிவித்தார்.

அப்போது, கேரள சட்டப்பேரவைத் தேர்தலின்போது நீங்கள் காங்கிரஸ் கட்சிக்காக பிரச்சாரம் செய்வீர்களா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு, "நான் எப்போதும் கட்சிக்காக பிரச்சாரம் செய்திருக்கிறேன். நான் எப்போதுதான் பிரச்சாரம் செய்யாமல் இருந்துள்ளேன்?" என பதில் அளித்தார்.


கேரள சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் முதல்வர் வேட்பாளராக நீங்கள் களமிறங்க இருக்கிறீர்களா என்ற கேள்விக்கு, "இல்லை. அது குறித்து விவாதிக்கப்படவில்லை. எந்தப் பதவிக்கும் வேட்பாளராக இருப்பதில் எனக்கு விருப்பமில்லை. தற்போது நான் ஒரு எம்பியாக இருக்கிறேன். திருவனந்தபுரத்தில் உள்ள எனது வாக்காளர்களின் நம்பிக்கையை பெற்றிருக்கிறேன். நாடாளுமன்றத்தில் அவர்களின் நலன்களை நான் கவனிக்க வேண்டும். அதுதான் என் வேலை" என்று கூறினார்.

இதன் தொடர்ச்சியாக சசி தரூர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "இன்று பல்வேறு விஷயங்கள் குறித்து அன்பான, ஆக்கப்பூர்வமான கலந்துரையாடலை நடத்தியதற்காக மல்லிகார்ஜுன கார்கேவுக்கும் ராகுல் காந்திக்கும் நன்றி. இந்திய மக்களுக்கு சேவை செய்வதில் நாங்கள் அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் இருக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

ஆனால், சசி தரூரின் பேட்டி, காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகும் முடிவில் அவர் உறுதியாக இருப்பதையே வெளிப்படுத்தி இருப்பதாக சிலர் விமர்சிக்கின்றனர்.

## வணிகச் செய்திகள்

### இனி சில்லறை பிரச்சினை வராது.. ஏடிஎம்களில் விரைவில் 10, 50 ரூபாய் நோட்டுகள்?



சென்னை, ஜன.31:

டிஜிட்டல் பரிவர்த்தனை அதிகரிக்கத் தொடங்கியுள்ளதால் ஏடிஎம்களில் மக்கள் பணம் எடுப்பதும் குறையத் தொடங்கியுள்ளது. அதே நேரத்தில் கிராமப்புறங்களிலும் சிறு வியாபாரிகளும் அன்றாட பரிவர்த்தனைகளுக்கு பெரும்பாலும் ரொக்கப் பணத்தையே நம்பியுள்ளனர். இதனால், கடைகளில் சில்லறை கிடைப்பது பெரும் சிக்கலாக உள்ளது. ஏடிஎம்களில் ரூ.500, 200 தாள்களே பெரும்பாலும் வருவதால், இவற்றிற்கு சில்லறை வாங்குவதற்குள் திண்டாட வேண்டிய நிலை மக்களுக்கு உள்ளது. இந்த நிலையில்தான், இந்தச் சிரமங்களைத் தீர்க்கும் விதமாக ஏடிஎம்களிலும் ரூ.10, 20 மற்றும் 50 மதிப்புள்ள கரன்சி நோட்டுகளை வைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

ரூ.500, 200 போன்ற நோட்டுகளை கொடுத்து சிறிய மதிப்புள்ள நோட்டுகளைப் பெறும் வகையில் 'ஹைப்ரிட் ஏடிஎம்'கள் வைக்கப்படவுள்ளன. தற்போது மும்பையில் சோதனை முறையில் இந்தத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. பணப் பரிவர்த்தனைகள் அதிகம் நடைபெறக் கூடிய உள்ளூர் சந்தைகள், ரெயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், மருத்துவமனைகள் உள்ளிட்ட இடங்களில் நிறுவப்பட்டு வருகின்றன.

## சமூக வலைதளங்களில் பெண்களுடன் தனிமையில் இருந்து வீடியோக்களை வெளியிட்ட கல்லூரி மாணவர் கைது

பெங்களூரு, ஜன.31:

கர்நாடக மாநிலம் குடகு மாவட்டம் மடிகேரி தாலுகா நாபோக்லு அருகே உள்ள செரியபரம்பு கிராமத்தை சேர்ந்தவர் முகமது சவாத். இவர் பெங்களூரு சம்பிகேஹள்ளியில் உள்ள ஒரு கல்லூரியில் படித்து வருகிறார்.




இவருக்கு பல பெண்களுடன் தொடர்பு ஏற்பட்டுள்ளது. அந்த பெண்களுடன் தனிமையில் உல்லாசமாக இருப்பதை முகமது சவாத் வீடியோவாக எடுத்துள்ளார். அந்த வீடியோக்களை தற்போது சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகி வருகிறது. இதைப்பார்த்த பலர் சமூக வலைதளங்களில் ஆபாச வீடியோக்களை வெளியிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அந்த வீடியோவில் உள்ள கல்லூரி மாணவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கருத்து பதிவிட்டனர். இந்நிலையில், குடகு மேம்பாட்டு குழு தலைவர் பிரசன்னா பட், மடிகேரி புறநகர் போலீசில் இதுகுறித்து புகார் அளித்தார்.

அதன்பேரில், வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், சமூக வலைதளங்களில் ஆபாச வீடியோக்களை வெளியிட்டது தொடர்பாக கல்லூரி மாணவர் முகமது சவாத்தை போலீசார் கைது செய்துள்ளனர். அவரின் செல்போனை கைப்பற்றி ஆபாச வீடியோக்களை வெளியிட்டது யார்? என போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அடுத்த நிதியாண்டில் 7.2% பொருளாதார வளர்ச்சி : பொருளாதார ஆய்வறிக்கையில் தகவல்

புதுடெல்லி, ஜன.31:



2026-27-ஆம் நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 6.8 சதவீதத்தில் இருந்து 7.2 சதவீதம் வரை இருக்கும் என்று பொருளாதார ஆய்வறிக்கையில் கணிக்கப்பட்டுள்ளது. இது, நடப்பு நிதியாண்டின் 7.4 சதவீத பொருளாதார வளர்ச்சி என்ற கணிப்பைவிட சற்று குறைவான மதிப்பீடாகவே உள்ளது.

ஆண்டுதோறும் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் முன்பு வருடாந்திர பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்படும். தலைமைப் பொருளாதார ஆலோசகர் வி.அனந்த நாகேஸ்வரன் மேற்பார்வையில் நிதியமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் பிரிவு இந்த அறிக்கையை தயாரித்துள்ளது. மக்களவையில் வியாழக்கிழமை 2025-26 நிதியாண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார். அதைத் தொடர்ந்து மாநிலங்களவையில் அந்த அறிக்கை ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் தாக்கல் செய்யப்பட்டது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

சாவதேச அளவில் நிலவும் பொருளாதார ஸ்திரமின்மை, வர்த்தகம் சார்ந்த இடர்ப்பாடுகள் என அனைத்தையும் கடந்து உலகின் வேகமாக வளரும் பெரிய பொருளாதாரம் என்ற இந்தியாவின் சாதனை தொடரும். உள்நாட்டில் பொருள்கள், சேவையின் நுகர்வு, முதலீடு ஆகியவை சிறப்பாக உள்ளது. எனவே, 2026-27 நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 6.8 சதவீதம் முதல் இருந்து 7.2 சதவீதம் வரை இருக்கும்.

நாட்டில் பணவீக்கம் கட்டுக்குள் உள்ளது. வீடுகள் தொடங்கி நிறுவனங்கள் வரை பொருளாதார நிலை சிறப்பாகவே உள்ளது. அமெரிக்காவின் வரிவிதிப்பால் இந்திய ரூபாயின் மதிப்பு 5 சதவீதத்துக்கு மேல் குறைந்துள்ளது. எனினும், இது நாட்டின் வலுவான பொருளாதாரக் கட்டமைப்பில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது. விவசாயப் பொருள்கள் உற்பத்தியில் மதிப்பின் அடிப்படையில் உலகில் இரண்டாவது இடத்தில் இந்தியா உள்ளது.

வங்கிகளின் வாராக்கடன் பல ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 2.2 சதவீதமாகக் குறைந்துள்ளது. பிரதமர் ஜன் தன் திட்டத்தின்கீழ் 55.02 கோடி வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன. 2005 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில் சர்வதேச அளவில் இந்தியாவின் பொருள்கள் ஏற்றுமதியின் பங்களிப்பு 1 சதவீதத்தில் இருந்து 1.8 சதவீதமாக சுமார் இருமடங்கு அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் இந்தியாவின் சேவைகள் ஏற்றுமதி இருமடங்குக்கு மேலாக 2 சதவீதத்தில் இருந்து 4.3 சதவீதமாக உயர்ந்துள்ளது.

பணத்தை ஈர்க்கும் நாடு: முதலீடு, பணப்பரிமாற்றம் என பல வழிகளில் வெளிநாடுகளில் இருந்து அதிகம் பணத்தை பெறும் நாடாக இந்தியா தொடர்கிறது. உள்நாட்டு விமானப் போக்குவரத்தில் உலகின் மூன்றாவது பெரிய நாடாக இந்தியா உள்ளது. 2014-இல் 74 விமான நிலையங்கள் இருந்த நிலையில் 2025-இல் 164 ஆக அதிகரித்துள்ளது.

பங்குச் சந்தை சார்ந்த பரிவர்த்தனை கணக்குகள் (டிமேட் அக்கவுண்ட்) தொடங்கப்படுவது அதிகரித்துள்ளது.

## டில்லி குடியரசு தின விழா அணிவகுப்பு: கடற்படைக்கு விருது


புதுடெல்லி, ஜன.31:

டில்லியில் கடந்த திங்கள்கிழமை நடைபெற்ற குடியரசு தின விழாவில் இடம்பெற்ற முப்படை வீரர்களின் அணிவகுப்பில், சிறந்த அணிவகுப்புக்கான விருதுக்கு இந்திய கடற்படை தேர்வு செய்யப்பட்டுள்ளது.

அதுபோல, பல்வேறு மாநிலங்கள் சார்பில் இடம்பெற்ற அலங்கார ஊர்திகளில், சிறந்த அலங்கார ஊர்திக்கான முதல் பரிசை மகாராஷ்டிர மாநிலம் வென்றுள்ளது. குடியரசு தினத்தையொட்டி தில்லி கடமைப் பாதையில் குடியரசுத் தலைவர் தேசியக் கொடியை ஏற்றி வைத்த பிறகு, முப்படை வீரர்களின் அணிவகுப்பு நடைபெற்றது. பின்னர், மத்திய ஆயுதக் காவல் படைகளின் அணிவகுப்பு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து, மத்திய அரசின் பல்வேறு துறைகளின் அலங்கார ஊர்திகள், பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பாரம்பரியம் மற்றும் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் இடம்பெற்றன. இவ்வாறு அணிவகுப்பில் பங்கேற்ற படைப் பிரிவு மற்றும் அலங்கார ஊர்திகளில் சிறந்தவை தேர்வு செய்யப்பட்டு பரிசளித்து ஊக்குவிக்கப்படும். அந்த வகையில், தில்லியில் திங்கள்கிழமை நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில் சிறந்த அணிவகுப்புக்கான படைப் பிரிவாக 144 இளம் வீரர்களுடன் பங்கேற்ற இந்திய கடற்படை தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## மின் திருத்த மசோதா விரைவில் நாடாளுமன்றத்தில் அறிமுகம்

புதுடெல்லி, ஜன.31:



மக்களவையில் மத்திய மின்சாரத்துறை இணை அமைச்சர் ஸ்ரீபாத நாயக் கூறியதாவது:

மின்சார சட்டத் திருத்த மசோதாவை மத்திய அரசு தயாரித்துள்ளது. மின்சாரத்தை விநியோகிக்கும் பணியில் மின்சார உற்பத்தி நிறுவனங்கள் மிகவும் முக்கியக் காரணியாக உள்ளன. இந்த நிறுவனங்கள்தான், மின்சாரத்தை உற்பத்தி செய்வது, கொண்டு செல்வது, விநியோகிப்பது ஆகிய பணிகளைச் செய்கின்றன.

இந்த நிறுவனங்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை குறைக்கும் வகையில், செலவை பிரதிபலிக்கும் கட்டணத்தை நிர்ணயிக்கும் விதியை மத்திய அரசு கொண்டு வரவுள்ளது. புதிய கட்டணமானது, மின்சார விநியோகத்தில் உள்ள அனைத்துச் செலவுகளையும் பிரதிபலிக்கும். இதுதொடர்பான மசோதா, நடப்பு பட்ஜெட் கூட்டத் தொடரில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று நான் நம்புகிறேன். மசோதாவை சுமுகமாக நிறைவேற்றுவதற்கு ஒருமித்த கருத்தை ஏற்படுத்தும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது. இந்த மசோதாவில் செலவினங்களை பிரதிபலிக்கும் கட்டணங்கள், மின் விநியோக நிறுவனங்கள் தாமே மின்சாரக் கட்டணத்தை நிர்ணயிக்க வகை செய்யும் அம்சங்கள், மின்சாரக் கட்டணத்தை ஒழுங்குபடுத்துவதற்கான அமைப்புகள் ஆகியவை குறித்த ஷரத்துகள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு அமைச்சர் ஸ்ரீபாத நாயக் கூறினார்.

## 2035-க்குள் வணிக விமானங்களின் எண்ணிக்கை மும்மடங்காக உயரும்!

புதுடெல்லி, ஜன.31:




இந்தியாவின் வணிக விமானங்களின் எண்ணிக்கை அடுத்த பத்தாண்டுகளில் மூன்று மடங்கு அதிகரித்து, 2,250-ஆக உயரும் என்று முன்னணி விமானத் தயாரிப்பு நிறுவனமான ஏர்பஸ் தெரிவித்துள்ளது.

இதன்மூலம், 2035-ஆம் ஆண்டுக்குள் உலகின் மூன்றாவது பெரிய சிவில் விமானப் போக்குவரத்துச் சந்தையாக இந்தியா உருவெடுக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

தெலங்கானா மாநிலம், ஹைதராபாதில் நடைபெற்று வரும் 'விங்ஸ் இந்தியா 2026' சாவதேச விமானப் போக்குவரத்து கண்காட்சிக்கிடையே செய்தியாளர்களைச் சந்தித்த ஏர்பஸ் இந்தியா மற்றும் தெற்காசிய பிரிவின் தலைவர் ஜுர்கன் வெஸ்டர்மேயர் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: இந்திய விமானப் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்டுள்ள அதீத வளர்ச்சி மற்றும் சர்வதேச வழித்தடங்களில் தங்ககளின் சேவையை விரிவுபடுத்த இந்திய விமான நிறுவனங்கள் காட்டி வரும் ஆர்வம் ஆகியவையே இந்த அசுர வளர்ச்சிக்கு முக்கியக் காரணங்களாகும். இந்தியாவில் விமானப்பயணிகளின்எண்ணிக்கை ஆண்டுக்கு 8.9 சதவீதம் என்ற விகிதத்தில் வளர்ச்சி அடையும். இது உலகின் பிற முக்கியப் பொருளாதார நாடுகளை விடவும், உலகளாவிய சராசரி வளர்ச்சியை விடவும் மிக அதிகமாகும் என்றார்.

தற்போது இந்திய விமான நிறுவனங்கள் அதிகப்படியான புதிய விமானங்களை ஆர்டர் செய்து வருவதை சுட்டிக்காட்டிய அவர், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணங்களுக்கான தேவை வரும் காலங்களில் பல மடங்கு அதிகரிக்கும் என்று குறிப்பிட்டார்.

## சபரிமலை தங்க முறைகேடு வழக்கு: சிறப்பு அரசு வழக்குரைஞர் நியமனம்

திருவனந்தபுரம், ஜன.31:

சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கக்கவச முறைகேடு தொடர்பான இரண்டு வழக்குகளில் சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கு உதவ சிறப்பு அரசு வழக்குரைஞராக என்.கே.உண்ணிகிருஷ்ணனை கேரள அரசு நியமித்துள்ளது.

கடந்த 2019-இல் சபரிமலை ஐயப்பன் கோயிலின் கருவறைக் கதவுகள் மற்றும் துவார பாலகர் சிலைகளின் தங்கக் கவசங்கள் புதுப்பிக்கப்பட்ட பிறகு, அவற்றின் எடை குறைந்ததாகப் புகார் எழுந்தது. இது தொடர்பாக இரு வழக்குகள் பதிவுசெய்யப்பட்ட நிலையில் விசாரணை மேற்கொள்ள கேரள உயர்நீதிமன்ற வழிகாட்டுதலில் சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) அமைக்கப்பட்டது.

இதையடுத்து, தங்கக் கவச புதுப்பிப்புப் பணிக்கான செலவை ஏற்ற பெங்களூரு தொழிலதிபர் உண்ணிகிருஷ்ணன் போற்றி, திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரிய முன்னாள் தலைவர்கள் ஏ.பத்மகுமார், என்.வாசு உள்பட 12 பேரை எஸ்ஐடி கைது செய்து விசாரித்து வருகிறது. விசாரணையின்போது எஸ்ஐடி-க்கு சட்ட ஆலோசனைகளை வழங்கவும், குற்றப்பத்திரிகையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பாக அதைச் சரிபார்க்கவும் சிறப்பு அரசு வழக்குரைஞராக என்.கே. உண்ணிகிருஷ்ணனை மாநில அரசு நியமித்துள்ளதாக அதிகாரிகள் வியாழக்கிழமை தெரிவித்தனர். திருச்சூரைச் சேர்ந்த வழக்குரைஞர் உண்ணிகிருஷ்ணன், கடந்த 2016-ஆம் ஆண்டு ஏப்ரலில் குருப்பம்பாடியைச் சேர்ந்த சட்ட மாணவி ஜிஷா பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் சிறப்பு அரசு வழக்குரைஞராகப் பணியாற்றியவர். அந்த வழக்கில் குற்றவாளி அமீருல் இஸ்லாத்துக்கு மரண தண்டனை கிடைக்க வழிவகுத்தார். கோழிக்கோடு கூடதாயைச் சேர்ந்த ஜாலி என்பவருக்கு எதிரான தொடர் கொலை வழக்கிலும் இவர் சிறப்பு அரசு வழக்குரைஞராகப் பணியாற்றினார்.

ஸ்ரீகுமாருக்கு ஜாமீன்: இதனிடையே, இந்த வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரிய முன்னாள் நிர்வாக அலுவலர் எஸ். ஸ்ரீகுமாருக்கு கொல்லம் ஊழல் தடுப்பு நீதிமன்றம் ஜாமீன் வழங்கி வியாழக்கிழமை உத்தரவிட்டது.

அதைத் தொடர்ந்து, அவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். இந்த வழக்கில் சிறையிலிருந்து ஜாமீனில் விடுவிக்கப்பட்ட இரண்டாவது நபர் இவர். இந்த வழக்கில் கைதான தேவஸ்வம் வாரிய முன்னாள் நிர்வாக அலுவலர் பி. முராரி பாபுக்கு கொல்லம் நீதிமன்றம் ஏற்கெனவே ஜாமீன் வழங்கியதைத் தொடர்ந்து அவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார். இந்த வழக்கில் தொடர்புடைய பெங்களூரு தொழிலதிபர் உண்ணிகிருஷ்ணன் போற்றிக்கும் நீதிமன்றம் அண்மையில் ஜாமீன் வழங்கியது. இருப்பினும், துவார பாலகர் சிலைகளின் தங்கக் கவசம் புதுப்பிக்கப்பட்டது தொடர்புடைய வழக்கிலும் அவர் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ளதால் விடுவிக்கப்படவில்லை.

## ஐபி பல்கலைக்கழகத்தில் 24 புதிய படிப்புகள் அறிமுகம்; பிப்.2 முதல் இணையதள விண்ணப்பங்கள் தொடக்கம்

புதுடெல்லி, ஜன.31:




குரு கோவிந்த் சிங் இந்திரபிரஸ்தா பல்கலைக்கழகம் (ஐபி பல்கலைக்கழகம்) 2026-27 கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை தொடங்குவதையும், 24 புதிய படிப்புகள் தொடங்கப்படுவதையும் புதன்கிழமை அறிவித்தது.

இந்த நிகழ்வில் தில்லி கல்வி அமைச்சர் ஆஷிஷ் சூட் மற்றும் துணைவேந்தர் மகேஷ் வர்மா ஆகியோர் கலந்துகொண்டனர். இணையதள விண்ணப்ப செயல்முறை பிப்ரவரி 2-ஆம் தேதி தொடங்கும் எனவும் பல்கலைக்கழகம் தெரிவித்தது.

இந்த நிகழ்வில் பேசிய அமைச்சர் ஆஷிஷ் சூட் கூறியதாவது: இந்த விரிவாக்கம் தில்லியில் பொதுக் கல்வியை வலுப்படுத்துவதில் அரசின் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது. முன்னதாக பல மாணவர்கள் உயர் கல்விக்காக நகரத்தை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. பெரும்பாலும் அதிக கட்டணச் சுமை இருந்தன. ஆனால் ஐபி பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்கள் அந்த யதார்த்தத்தை மாற்ற உதவியுள்ளன என்றார். இது தொடர்பாக பல்கலைக்கழகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது: பல்கலைக்கழகம் தற்போது 130-க்கும் மேற்பட்ட இணைப்புக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகப் பள்ளிகளில், பொறியியல், சட்டம், மருத்துவம், மேலாண்மை, மற்றும் செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸ் மற்றும் தரவு அறிவியல் போன்ற வளர்ந்து வரும் துறைகள் உள்பட 43,000-க்கும் மேற்பட்ட படிப்புகளை வழங்குகிறது. இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய படிப்புகளில் இளங்கலை மேலாண்மைப் படிப்பு, ரோபோடிக்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவில் எம்.டெக், செயற்கை நுண்ணறிவு, தரவு அறிவியல் மற்றும் வணிக அமைப்புகளில் சிறப்புப் பிரிவுகளுடன் கணினி அறிவியலில் பி.டெக், பி.எஸ்சி மருத்துவ உளவியல், இளங்கலை பிசியோதெரபி மற்றும் மக்கள் தொடர்பியலில் முதுகலை (வார இறுதிப் படிப்பு) ஆகியவை அடங்கும். பலதரப்பட்ட மாற்றுத்திறனாளி சிறப்புப் பிரிவுகளை உள்ளடக்கிய புதிய ஆசிரியர் கல்வி மற்றும் உள்ளடக்கிய கல்விப் படிப்புகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஐபி பல்கலைக்கழகம் இந்த ஆண்டு ஒன்பது புதிய நிறுவனங்களை இணைத்துள்ளது. சில படிப்புகள் ஏற்கெனவே அதன் நரேலா வளாகத்தில் நடைபெற்று வருகின்றன. மேலும் பல படிப்புகள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளன.

மாணவர் சேர்க்கை பொது நுழைவுத் தேர்வுகள் மற்றும் ஜேஇஇ முதன்மை தேர்வு, நீட், சிஏடி, சிஎம்ஏடி, சிஎல்ஏடி, மற்றும் சியுஇடி போன்ற தேசிய அளவிலான தேர்வுகளின் கலவையின் மூலம் நடத்தப்படும். ஒரு முறை விண்ணப்பக் கட்டணமாக ரூ.2,500 வசூலிக்கப்படும். விரிவான தகவல்களுக்கு பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள அதிகாரப்பூர்வ சிற்றேட்டைப் பார்க்குமாறு விண்ணப்பதாரர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது என தெரிவிக்கப்பட்டது.

## மனைவிக்கு பதிலாக கணவருக்கு இறப்பு சான்றிதழ் வழங்கிய அதிகாரிகள்

பெங்களூரு, ஜன.31:

கர்நாடக மாநிலம் ஹாவேரி மாவட்டம் ரட்டிஹள்ளி தாலுகா சிரகம்பிகிராமத்தை சேர்ந்தவர் டோபனாகவுடா. இவருக்கு திருமணமாகி மல்லம்மா என்ற மனைவி இருந்தார். இதில் மல்லம்மா கடந்த 2021-ம் ஆண்டு உடல் நலக்குறைவால் காலமானார். ஆகையால் டோபனாகவுடா தனது மனைவியின் இறப்பு சான்றிதழ் வாங்க ஹாவேரி தாசில்தார் அலுவலகத்துக்கு சென்றார்.

பின்னர் அங்கு தனது மனைவியின் சுயவிவரங்கள் மற்றும் டோபனாகவுடாவின் சுயவிவரங்கள் ஆகியவற்றை கொடுத்துள்ளார். இதில் தாசில்தார் அலுவலகத்தில் பணியாற்றுபவர்கள் டோபனாகவுடா இறந்து விட்டதாக பதிவு செய்துள்ளனர். பின்னர் சிறிது நாட்களில் டோபனாகவுடாவுக்கு இறப்புசான்றிதழ் வழங்கப்பட்டது. இதையடுத்து அவருக்கு ரேஷன் பொருட்கள் போன்ற பல்வேறு அரசு சலுகைகள் மறுக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து டோபனாகவுடா விசாரித்தபோது மனைவி பெயரில் வரவேண்டிய இறப்பு சான்றிதழ் தவறுதலாக தனது பெயரில் வந்தது தெரியவந்தது. பின்னர் உடனடியாக டோபனா கவுடா இதுகுறித்து தாசில்தார் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார். அதன் பேரில் நடவடிக்கை எடுப்பதாக தாசில்தார் தெரிவித்துள்ளார்.

## ஆந்திராவில் ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகளை பெற்றெடுத்த இளம்பெண்

நகரி, ஜன.31:

ஆந்திராவில் ஒரு தம்பதி ஏற்கனவே 4 பெண் குழந்தைகள் இருக்கும் நிலையில், தங்களுக்கு ஒரு ஆண் குழந்தை வேண்டும் என்ற ஆசையில் இருந்தனர். ஆனால் அவர்களுக்கு ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள் பிறந்துள்ளன. அதுபற்றிய விவரம் வருமாறு:-

ஆந்திர மாநிலம் அனந்தபுரம் மாவட்டம் பிரம்மசமுத்திரம் நஞ்சாபுரம் கிராமத்தை சேர்ந்தவர் ரமேஷ். இவரது மனைவி கவிதா. இவர்களுக்கு 4 பெண் குழந்தைகள் உள்ளனர். மீண்டும் கவிதா கர்ப்பமுற்றார்.

அவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அப்போது அவருக்கு 3 குழந்தைகள் பிறந்தன. இதில் 2 பெண் குழந்தைகளும், ஒரு ஆண் குழந்தையும் அடங்கும். 3 குழந்தைகளும் நலமாக உள்ளன.

## தேர்வு மையங்கள் மீதான ஜிஎஸ்டி வரியை 5%-ஆக குறைக்க வலியுறுத்தல்

புதுடெல்லி, ஜன.31:

வரவிருக்கும் பட்ஜெட்டில் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள் மீது விதிக்கப்படும் சரக்கு மற்றும் சேவை வரியை (ஜிஎஸ்டி) 5 சதவீதமாக குறைக்க இந்திய பயிற்சி மையங்களின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் ஜன.28-ஆம் தேதி அவர்கள் சமர்ப்பித்த மனுவில் கூறியதாவது: போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள் மீது விதிக்கப்படும் சேவைகளுக்கான ஜிஎஸ்டி வரியை 5 சதவீதமாகக் குறைக்க வேண்டும். அல்லது முழுமையாக விலக்கு அளிக்க வேண்டும். உற்பத்தி அல்லது வர்த்தக நிறுவனங்களைப் போல் இல்லாமல், பயிற்சி மையங்களுக்கு உள்ளீட்டு வரி சலுகை மூலம் வரியைச் சரிக்கட்ட முடியாது. எனவே, பல சிறிய பயிற்சி மையங்கள் பதிவு செய்யாமல் செயல்படுகின்றன. கட்டணம் குறைவு என்பதால் பெற்றோர்களும் அவற்றையே தேர்வு செய்கின்றன. வாடகை, சம்பளம் மற்றும் இயக்கச் செலவுகள் அதிகரித்து வரும் நிலையில், தற்போதைய ரூ.20 லட்சம் ஜிஎஸ்டி விலக்கு வரம்பு பயிற்சி மையங்களுக்கு பயனற்றாகிறது. குறைந்த லாபம் ஈட்டும் சிறிய மையங்கள் கூட இந்த வரி வரம்புக்குள் வரவில்லை. எனவே, பயிற்சி மையங்களுக்கு உச்ச வரம்பை ரூ.1 கோடியாக உயர்த்த வேண்டும் என வலியுறுத்தினர்.

## 10 லட்சம் மக்களுக்கு 22 நீதிபதிகள்: சட்ட அமைச்சர் தகவல்



புதுடெல்லி, ஜன.31:

10 லட்சம் பேருக்கு 50 நீதிபதிகள் இருக்க வேண்டும் என மத்திய சட்ட ஆணையம் கடந்த 1987-ஆம் ஆண்டு சமர்ப்பித்த 120-ஆவது அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டது.

இந்நிலையில், தற்போதைய நிலவரப்படி நீதிபதிகள்-மக்கள்தொகை விகிதம் குறித்து மாநிலங்களவையில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு கிரண் ரிஜிஜு அளித்த எழுத்துபூர்வ பதிலில் கூறப்பட்டிருப்பதாவது: தற்போது நீதிபதிகள்-மக்கள்தொகை விகிதத்தை ஆய்வுசெய்ய 2011-இல் மேற்கொள்ளப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பும் (121.85 கோடி மக்கள்தொகை) 2026 நிலவரப்படி உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம், மாவட்ட மற்றும் கிளை நீதிமன்றங்களில் பணியாற்றும் நீதிபதிகளின் எண்ணிக்கையும் கணக்கிடப்பட்டது. அந்த வகையில் 2026-ஆம் ஆண்டில் 10 லட்சம் மக்களுக்கு 22 நீதிபதிகள் உள்ளனர். 2023, தேசிய குற்ற ஆவண காப்பக அறிக்கையின்படி நாட்டில் 3.89 லட்சம் விசாரணைக் கைதிகள் உள்ளனர். நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு தீர்வுகாண்பது முற்றிலும் நீதித்துறையின் அதிகார வரம்பை சார்ந்தது. வழக்கின் தன்மை, சமர்ப்பிக்கப்படும் ஆதாரங்கள், புலனாய்வு அமைப்புகள், சாட்சியங்கள் மற்றும் மனுதாரர்களின் ஒத்துழைப்பு போன்ற பல்வேறு காரணங்களால் நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

# ‘சீனாவுடன் வர்த்தக உறவை வலுப்படுத்த முயல்வது பிரிட்டனுக்கு மிகவும் ஆபத்தானது’

**வாஷிங்டன், ஜன.31:**

சீனாவுடன் வர்த்தக உறவை வலுப்படுத்த முயல்வது பிரிட்டனுக்கு மிகவும் ஆபத்தாக அமையும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.




அமெரிக்க அதிபரின் வரி விதிப்பு கொள்கைகளால் உலகின் பல்வேறு நாடுகள் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன. குறிப்பாக ஏற்றுமதியை அதிகம் நம்பி இருக்கும் ஐரோப்பிய நாடுகள், அமெரிக்காவுக்கான தங்கள் ஏற்றுமதி குறையுமானால் அதை ஈடுகட்டுவதற்கு ஏற்ப, வேறு நாடுகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புகள் ஆராய்ந்து வருகின்றன. ஐரோப்பிய யூனியனில் இணையாத பிரிட்டன், இந்தியாவுடன் ஒருங்கிணைந்த பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தில் கடந்த ஜூலை 24-ம் தேதி கையெழுத்திட்டது.

ஐரோப்பிய யூனியனும், இந்தியாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கான பேச்சுவார்த்தையை நிறைவு செய்துள்ளது.

இந்நிலையில், சீனாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட பிரிட்டன் பிரதமர் கீர் ஸ்டார்மர், பெய்ஜிங்கில் அதிபர் ஜி ஜின்பிங்கைச் சந்தித்துப் பேசினார். சீன அதிபருடனான சந்திப்பு குறித்து லண்டனில் உள்ள பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், “இரு நாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில் சீரான, நீண்டகால மற்றும் வியூக ரீதியிலான கூட்டாண்மையை உருவாக்க இரு நாட்டு தலைவர்களும் உறுதிபூண்டுள்ளனர். கருத்து வேறுபாடுகள் உள்ள துறைகளில் வெளிப்படையான பேச்சுவார்த்தையைத் தொடர அவர்கள் ஒப்புக்கொண்டனர். பரஸ்பர நலன் சார்ந்த துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்கவும் இந்த சந்திப்பின்போது உடன்பாடு எட்டப்பட்டது” என்று தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டன் பிரதமரின் சீன பயணம் மற்றும் இருதரப்பு ஒப்பந்தங்கள் குறித்த கேள்விக்கு பதில் அளித்த அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், “அப்படி செய்வது அவர்களுக்கு மிகவும் ஆபத்தானது” என தெரிவித்துள்ளார். எனினும், இது குறித்து அவர் விவரிக்கவில்லை.

## தங்கத்தின் இறக்குமதி 11 சதவீதம் குறைந்தது - உலக தங்கம் கவுன்சில் தகவல்

**நியூயார்க், ஜன.31:**

தங்கம் விலை கடந்த ஆண்டு தொடங்கி நாளுக்குநாள் ராக்கெட் வேகத்தில் உயர்ந்துவருகிறது. இதேநிலை நீடித்தால் நடப்பு ஆண்டு (2026) இறுதிக்குள் ஒரு பவுன் தங்கம் ரூ.2 லட்சத்தை கடந்து சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்த விலை உயர்வால் சாமானியர்களால் தங்கத்தை வாங்க முடியாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் உலக தங்கம் கவுன்சில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் விலை உயர்வுக்கு எதிராக நாட்டின் தங்கத்தின் தேவை வெகுவாக குறைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் (2025) நாட்டின் தங்கம் இறக்குமதி 11 சதவீதமாக சரிந்து 710.9 டன்னாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முந்தைய ஆண்டில் (2024) தங்கம் இறக்குமதி 802.8 டன்னாக இருந்தது. மதிப்பு அடிப்படையில் ரூ.5 லட்சத்து 75 ஆயிரத்து 930 கோடியில் இருந்து ரூ.7 லட்சத்து 51 ஆயிரத்து 490 கோடியாக உயர்ந்தது. விலையுயர்வு, புவிசார் அரசியலில் ஏற்பட்டுள்ள பதற்றம் காரணமாக நடப்பு நிதியாண்டில் தங்கம் இறக்குமதி 600 டன்னாக சரியும் என தகவல் வெளியாகியுள்ளது.

## வெனிசுலாவில் தனியார் எண்ணெய் கம்பெனிகளுக்கு அனுமதி - மந்திரிசபை ஒப்புதல்

**கராகஸ், ஜன.31:**

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவை போதை பொருள் பயங்கரவாதி என்றும், வெனிசுலாவில் இருந்து அமெரிக்காவுக்குள் போதைப்பொருட்கள் கடத்தப்படுவதாகவும் டிரம்ப் கடுமையான குற்றச்சாட்டுகளை கூறினார். இந்த நிலையில், நிக்கோலஸ் மதுரோவும், அவருடைய மனைவி சிலியா புளோரசும் அமெரிக்க ராணுவ வீரர்களால் இந்த மாத தொடக்கத்தில், கைது செய்யப்பட்டு வெனிசுலாவில் இருந்து நாடு கடத்தப்பட்டனர்.

இதனை தொடர்ந்து, நிக்கோலஸ், அவருடைய மனைவி புளோரஸ் மீது நியூயார்க் நகரில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது. அவர்கள் மீது அமெரிக்க சட்டப்படி விசாரணை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என டிரம்ப் தெரிவித்தார். அமெரிக்காவின் இந்த அதிரடி நடவடிக்கை உலக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனிடையே, எண்ணெய் வளத்திற்காக வெனிசுலா குறி வைக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டும் எழுந்தது. வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ கைது செய்யப்பட்ட பின்னர், அந்நாட்டின் தற்காலிக ஜனாதிபதியாக டெல்சி எலோய்னா ரோட்ரிக்ஸ் முறைப்படி பதவியேற்று கொண்டார். இந்த நிலையில், வெனிசுலாவில் தனியார் எண்ணெய் கம்பெனிகளுக்கு அனுமதி அளிக்கும் வகையில், அந்நாட்டின் ஹைட்ரோகார்பன் சட்டத்தில் சீர்திருத்தம் செய்ய வெனிசுலா அரசின் மந்திரிசபை ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் வெளிநாட்டு நிறுவனங்கள் வெனிசுலாவின் லாபகரமான எண்ணெய் துறையில் சுதந்திரமாக கால்பதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த சட்டத்திருத்தத்தில் வெனிசுலாவின் இடைக்கால ஜனாதிபதி டெல்சி எலோய்னா ரோட்ரிக்ஸ் கையெழுத்திட்ட பிறகு, அந்நாட்டின் எண்ணெய் துறையில் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், வெனிசுலாவின் எண்ணெய் துறை மீதான அமெரிக்க அரசின் வர்த்தக தடைகளை டிரம்ப் நீக்கியுள்ளார். இதன் மூலம் அமெரிக்க நிறுவனங்கள் வெனிசுலாவில் செயல்படுவதற்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தென் ஆப்பிரிக்காவில் லாரி-வேன் நேருக்குநேர் மோதி 11 பேர் பலி

**ஜோகன்னஸ்பர்க், ஜன.31:**

தென்னாப்பிரிக்காவின் டர்பன் மாகாண நெடுஞ்சாலையில் ஒரு மினிவேன் சென்று கொண்டிருந்தது. இதில் பெண்கள், குழந்தைகள் உள்பட சுமார் 30 பேர் பயணித்தனர். குவாசுலு-நடால் என்ற இடத்துக்கு அருகே கட்டுப்பாட்டை இழந்த மினிவேன் முன்னால் சென்ற காரில் உரசியது.

தொடர்ந்து நிற்காமல் சென்ற அந்த மினிவேன் எதிரே வந்த லாரி மீது நேருக்குநேர் மோதியது. இந்த விபத்தில் 11 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். இதுகுறித்து போலீசார் நடத்திய விசாரணையில், லாரி ஒரு வழிப்பாதையில் சென்றதே விபத்துக்கு காரணம் என தெரிய வந்துள்ளது.

ஏற்கனவே கடந்த வாரம் தலைநகர் ஜோகன்னஸ்பர்க்கில் நடந்த விபத்தில் 14 மாணவர்கள் பலியாகினர். அடுத்த ஒரே வாரத்தில் தற்போது மீண்டும் கோர விபத்தில் 11 பேர் பலியான சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## கியூபாவுக்கு கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் மீது வரி விதிப்பேன்; டிரம்ப் மிரட்டல்

**வாஷிங்டன், ஜன.31:**

கரீபியனில் அமைந்துள்ள தீவு நாடு கியூபா. அந்நாட்டின் அதிபராக மிகுல் டியாஸ் கனெல் செயல்பட்டு வருகிறார். இதனிடையே, கியூபாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வருகிறது.




அதேவேளை, கியூபாவுக்கு வெனிசுலா, மெக்சிகோ போன்ற நாடுகள் கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்து வந்தன. சமீபத்தில் வெனிசுலா மீது தாக்குதல் நடத்திய அமெரிக்கா அந்நாட்டு அதிபர் நிக்கோலஸ் மதுரோவை கைது செய்தது.

இதையடுத்து, வெனிசுலாவில் இருந்து கியூபாவுக்கு கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், கியூபாவுக்கு கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் மீது வரி விதிப்பேன் என்று அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார்.

டிரம்ப் மிரட்டலை தொடர்ந்து கியூபாவுக்கு கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்வதை மெக்சிகோ தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

## மியான்மரைச் சேர்ந்த 11 பேருக்கு சீனாவில் மரண தண்டனை

**பாங்காக், ஜன.31:**

மியான்மர், கம்போடியா, லாவோஸ் ஆகிய நாடுகளில் டிஜிட்டல் மோசடி, சூதாட்டம் ஆகியவை மிகப் பெரியளவில் நடைபெறுகிறது.

சீனா-மியான்மர் எல்லையில் செயல்படும் ஒரு கும்பல் 1 பில்லியன் டாலரை விட அதிக மதிப்பில் சூதாட்டம் மற்றும் டிஜிட்டல் மோசடியில் ஈடுபட்டுள்ளது. மேலும் சீனர்கள் 14 பேர் இந்த கும்பலால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கும்பலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 பேரை கடந்த 2023ம் ஆண்டு நவம்பர் மாதம் சீன அதிகாரிகள் கைது செய்தனர். இவர்களுக்கு கடந்தாண்டு செப்டம்பரில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து இவர்கள் மேல் முறையீடு செய்தனர்.

இதை சீன நீதிமன்றம் நிராகரித்தது. இதையடுத்து சூதாட்ட கும்பலைச் சேர்ந்த 11 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக நீதிமன்றம் நேற்று அறிவித்தது. இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## சாட்ஜிபிடி-யில் முக்கிய கோப்புகளை பதிவேற்றிய அமெரிக்க சைபர் பாதுகாப்பு பிரிவு தலைவர்

**வாஷிங்டன், ஜன.31:**

அமெரிக்காவின் சைபர் செக்யூரிட்டி அன்ட் இன்பிராஸ்டிரக்கசர் செக்யூரிட்டி (சிஐஎஸ்ஏ) எனப்படும் சைபர் பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்பு பாதுகாப்புப் பிரிவின் செயல் இயக்குநராக செயல்பட்டு வருபவர் மது கோட்டுமுக்கலா.






இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இவர், கடந்த 5 மாதங்களுக்கு முன்பு சிஐஎஸ்ஏ-வின் செயல் தலைவராக, தனது நம்பிக்கைக்குரிய மது கோட்டுமுக்கலாவை, அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நியமித்தார். அமெரிக்க அரசின் ரகசியங்களையும், முக்கிய விவரங்களையும் பாதுகாக்கும் பணியில் சிஐஎஸ்ஏ ஈடுபட்டு வருகிறது. இதன் முக்கிய பொறுப்பில்தான் மது கோட்டுமுக்கலா இருந்து வருகிறார்.

இந்நிலையில் பொதுமக்கள் பயன்படுத்தும் சாட்ஜிபிடி-யில் அமெரிக்க அரசின் முக்கிய ஆவணங்கள், கோப்புகளை மது கோட்டுமுக்கலா பதிவேற்றம் செய்துள்ளார். இது அமெரிக்காவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பொதுவாக சிஐஎஸ்ஏ-விலிருந்து அரசாங்க குறிப்புகள், கோப்புகள் யாவும் வெளியே செல்லமுடியாதபடி சைபர் செக்யூரிட்டி தளம் செயல்படுகிறது. இருந்தபோதும் பொதுவெளியில் பயன்படுத்தப்படும் சாட்ஜிபிடி-யில் முக்கிய கோப்புகள் வெளியிடப்பட்டுள்ளது தவறு என்று பொலிட்டிகோ ஊடக நிறுவனத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

## 24 மணிநேரத்தில்..! பாகிஸ்தானில் 52 பயங்கரவாதிகள் கொலை!

**இஸ்லாமாபாத், ஜன.31:**

பாகிஸ்தானின் 3 மாகாணங்களில், கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் பாதுகாப்புப் படையினரின் தாக்குதல்களில் 52 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானில், கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளால் பஞ்சாப் மாகாணத்தில் 6 பயங்கரவாதிகளும், பலூசிஸ்தானில் 41 பயங்கரவாதிகளும் மற்றும் கைபர் பக்துன்குவாவில் தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்பைச் சேர்ந்த தளபதி உள்பட 5 பயங்கரவாதிகளும்




கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், பாகிஸ்தானின் பாதுகாப்புப் படைகளின் மீது தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் திட்டமிட்டு வருவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக, பஞ்சாப் மாகாண காவல் துறையின் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கூறியுள்ளனர்.

பயங்கரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் பதில் தாக்குதல் நடத்தியதாகவும், கொல்லப்பட்ட பயங்கரவாதிகளிடம் இருந்து மிகப் பெரியளவிலான ஆயுதங்கள் மற்றும் அவர்கள் கொள்ளையடித்த பணம் ஆகியவைக் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்தத் தாக்குதல்களில், 3 உள்ளூர்வாசிகள் கொல்லப்பட்டதுடன் ஏராளமானோர் படுகாயமடைந்துள்ளனர். இந்த நடவடிக்கையில், 25 ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ள நிலையில், அப்பகுதியில் பதுங்கியுள்ள பயங்கரவாதிகளைப் பிடிக்க பாகிஸ்தான் ராணுவம் ஹெலிகாப்டர்கள் மூலம் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருவதாக அறிவித்துள்ளனர். முன்னதாக, ஆப்கானிஸ்தானில் கடந்த 2021 ஆம் ஆண்டு தலிபான்கள் தலைமையிலான ஆட்சி அமைந்தது முதல் பாகிஸ்தானில் நடைபெறும் பயங்கரவாதத் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாகக் குற்றம்சாட்டப்படுவது குறிப்பிடத்தக்கது.

## திருடப்பட்ட சோழர் காலச் சிலைகள் மீண்டும் இந்தியாவிடமே ஒப்படைப்பு: அமெரிக்கா



**வாஷிங்டன், ஜன.31:**

தமிழகத்திலிருந்து திருடப்பட்ட மிகவும் பழைமைவாய்ந்த 3 சோழர் காலச் சிலைகளை ஒப்படைக்க அமெரிக்க ஒப்புக் கொண்டுள்ளது. தமிழகத்தில் சோழர் மற்றும் விஜயநகரப் பேரரசு காலத்தைச் சேர்ந்த சிலைகள் திருடப்பட்டு, அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள ஸ்மித்சோனியன் அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து, தங்கள் சிலைகளை ஒப்படைக்குமாறு அமெரிக்கா மீது இந்தியா குற்றம் சாட்டியது.

இதனிடையே, புதுச்சேரியில் உள்ள பிரெஞ்சு ஆவணக் காப்பகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, திருடப்பட்ட சிலைகள் 1956 முதல் 1959 வரையில் தமிழகத்தின் கோயில்களில் இருப்பது புகைப்பட ஆதாரங்கள் மூலம் கண்டறியப்பட்டது. இந்த நிலையில், இந்தச் சிலைகளை இந்தியாவிடமே ஒப்படைக்க ஸ்மித்சோனியன் அருங்காட்சியகம் ஒப்புக்கொண்டுள்ளது. இந்தியாவிடம் அமெரிக்கா ஒப்படைக்கவிருக்கும் சிலைகள்: சிவ நடராஜர் சிலை (சோழர் காலம் கி.பி. 990), சோமாஸ்கந்தர் சிலை (சோழர் காலம் 12-ஆம் நூற்றாண்டு), பரவை நாச்சியார் - சுந்தரமூர்த்தி நாயனார் சிலை. இவற்றில் சிவ நடராஜர் சிலையை, ஸ்மித்சோனியன் அருங்காட்சியகத்திடம், 2002-ல் போலி ஆவணங்கள் மூலம் டோரிஸ் வீனர் கேலரி அளித்திருப்பது தெரியவந்துள்ளது.

## மாஸ்கோவில் அமைதி பேச்சுவார்த்தை: ஒரு வாரத்திற்கு போரை நிறுத்த ரஷ்யா சம்மதம்: டிரம்ப் தகவல்

**மாஸ்கோ, ஜன.31:**

நேட்டோ நாடுகளுடன் உக்ரைன் இணைய முயற்சித்ததை எதிர்த்து அந்நாட்டின் மீது கடந்த 2022ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ரஷ்யா போர் தொடுத்தது. இந்த போரானது 4 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து வருகிறது. இந்தப் போரில், இருதரப்பிலும் சேர்த்து உயிரிழப்பு எண்ணிக்கை 20 லட்சத்தை எட்டும் நிலையில் உள்ளது என்று அமெரிக்க ஆய்வு நிறுவன (சிஎஸ்ஐஎஸ்) அறிக்கை தெரிவித்துள்ளது.

ரஷ்ய தரப்பில் மட்டும் இதுவரை சுமார் 12 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 2ம் உலகப் போருக்குப் பிறகு ஒரு வல்லரசு நாடு சந்தித்த மிகப்பெரிய உயிரிழப்பாக ரஷ்யாவின் இழப்புகள் கருதப்படுகின்றன. இரு நாடுகளுக்கிடை யேயான போரை முடிவுக்குக் கொண்டு வர உலக நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. அமைதிப் பேச்சுவார்த்தையில் அமெரிக்காவும் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. கடந்த ஆண்டு அமெரிக்க அதிபராக பொறுப்பேற்ற டிரம்ப் போரை முடிவுக்கு கொண்டு வர பொறுப்புடன் முயற்சி மேற்கொண்டுள்ளார். இதன் விளைவாக கடந்த வாரம் முதல் முறையாக அமெரிக்கா, ரஷ்யா, உக்ரைன் இடையே முத்தரப்பு பேச்சுவார்த்தை அபுதாபியில் நடைபெற்றது. பிப்ரவரி 1ம் தேதி இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை நடைபெறும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் தற்போது அமைதிப் பேச்சுவார்த்தைக்காக மாஸ்கோவிற்கு வருமாறு உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கிக்கு ரஷ்ய அரசு அழைப்பு விடுத்துள்ளது. இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பை ரஷ்ய அதிபர் மாளிகையான கிரெம்ளின் உடைய செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் வெளியிட்டுள்ளார்.

இதற்கிடைய உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன. குறிப்பாக கீவ், கார்க்கிவ் உள்ளிட்ட நகரங்களின் மின் கட்டமைப்புகளை குறிவைத்து ரஷ்யா டிரோன் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதனால் மின்சாரமின்றி மக்கள் கடும் குளிரில் தவிக்கும் சூழல் உருவாகி உள்ளது. எனவே உக்ரைனில் நிலவும் கடும் குளிர் காலத்தைக் கருத்தில் கொண்டு, மனிதநேய அடிப்படையில் மின்சாரக் கட்டமைப்புகள் மீதான தாக்குதலை ஒரு வாரத்திற்கு நிறுத்துமாறு ரஷிய அதிபர் புதினுக்கு டிரம்ப் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த வகையில் அமைச்சரவை கூட்டத்தில் பங்கேற்று அமெரிக்க அதிபர் டிரம்ப் ஆலோசனை நடத்தினார். அப்போது அவர் கூறியதாவது:- உக்ரைனில் கடுமையான உறைபனி நிலவும் நிலையில், தலைநகர் கீவ் மற்றும் பிற நகரங்கள் மீது ஒரு வாரத்திற்கு தாக்குதல் நடத்த வேண்டாம் என்று ரஷ்ய அதிபர் புதினிடம் கேட்டு கொண்டேன். இந்த அசாதாரண குளிர்காலத்தில் தாக்குதல் நடத்த வேண்டாம் என்று நான் தனிப்பட்ட முறையில் கேட்டுக்கொண்டேன். இந்த தற்காலிக போர் நிறுத்தத்திற்கு புதின் ஒப்பு கொண்டார்.

இது சிறப்பான முடிவு. இதை உக்ரைன் தரப்பில் முதலில் நம்ப முடியவில்லை. அவர்கள் மிகவும் மோசமான சூழலில் போராடி வருவதால் அதை கேட்டு மகிழ்ச்சி அடைந்தனர் என்றார்.